LKI 11.1.87 ரூ. 1.50

கல்கி



இந்த இதழில்

பொன்னியின் செல்வன்

ஆரம்பம்



பண்டிகையின் உற்சாகம்
பன்மடங்கு பெருகிடவே
பாங்காகவே அணிந்திடுவீரே
சாரதா'ஸின் புதிய டிசைன்களையே.
என்றும் யௌவனத்துடன் விளங்க
தருணி
பிரகாசம் பொருந்திய அழகிற்கு
தேஜோவதி
சாரதாஸ்
(முகூர்த்தப் பட்டு புடவைகளுக்கு அதிர்ஷ்டமான இடம்)
தன் பில்டிங்
மவுண்ட் ரோடு
சென்னை-600 002
போன் : 87177
N.S.B. ரோடு
திருச்சி-620 002
போன் : 27077
SARADHA'S
MADRAS & TRICHY



மோகன்தாஸ் விவகாரத்தைத் துப்பறிந்த போது...

பிரபலமான பத்திரிகைகள்கூட அரசியல் அலசல்கள் தவிர், இப்பொழுது அதிகாரிகளையும் வம்புக்கிழுக்க ஆரம்பித்து விட்டன. சமீப காலமாகச் சிக்கியிருப்பவர் உயர் போலீஸ் அதிகாரி மோகன்தாஸ். (டி.ஜி.பி., சிஐடி)

அ.தி.மு.க.வில் உட்கட்சிப் பூசல்களையொட்டி தலைவர்களைக் கண்காணித்து எம்.ஜி. ஆருக்குத் தகவல்களை அளித்துக் கொண்டு இருப்பவர் மோகன்தாஸ்; எதிர்க் கட்சிகள் பற்றித் தவறான முறையில் பிரசாரத்தைக் கட்டவிழ்த்து விடுகிறவர் மோகன் தாஸ்; விடுதலைப் புலிகள் விஷயத்தில் மத்திய அரசின் அதிருப்தியைச் சம்பாதித்துக் கொண்டவர் மோகன்தாஸ்" என்று பல விதமாக அடிபடும் பெயர் அவருடையது. சமீபத்தில் விடுதலைப் புலிகள் மீது எடுத்த அதிரடி நடவடிக்கை காரணமாக அவரைப் பத்திரிகைகள் புரட்டி எடுக்கின்றன.

இவ்விஷயத்தில் அவர் தாமே அத்து மீறி நடந்து கொண்டுவிட்டது போலவும் மத்திய அரசு விசனிப்பது போலவும் மாநில அரசு பட்டுக்கொள்ளாமல் வருத்தம் தெரிவிப்பது போலவும் ஒரு நாடகம் நடத்தப்பட்டுள்ளது.

மாநிலப் புலனாய்வுத் துறை தலைமை அதிகாரி என்ற முறையில் மோகன்தாஸுக்குப் பல அதிகாரங்கள் உண்டு என்பது உண்மைதான். ஆனால் அவர் அந்த அதிகாரங்களை அரசுக் கொள்கை என்ற வரம்பிற்குட்பட்டுத்தான் பிரயோகிக்க முடியும். ஈழ விடுதலைப் போராளிகளிடமிருந்து ஆயுதங்களையோ ஒயர்லெஸ் சாதனங்களையோ பறிமுதல் செய்வதெனில் அது அரசுக் கொள்கை தொடர்பான விஷயம். இதில் முதல்வர் சம்மதமின்றிச் செயல்பட முடியாது, கூடாது, என்பது மோகன்தாஸ் அறியாததல்ல. இவ்வளவு முக்கியமான ஒரு காரியத்தில் பிரதமரின் ஒப்புதலின்றி மாநில முதல்வர் இயங்குவார் என்றும் எதிர்பார்ப்பதற்கு இல்லை.

இலங்கைப் பிரச்னையை ஒரு முடிவுக்குக்

[

அடுத்த இதழ்...

புதுக்கோட்டைமாவட்டத்தில்கல்வி—I



"ஐயா, புகையை நிறுத்துங்க; இல்லேன்னு துளி விஷத்தைக் கொடுத்திடுங்க!"

— கவர் ஸ்டோரி

"என்னை யாருங்கய்யா மதிக்கிறாங்க?"

— ஓர் எம்.எல்.ஏ.வுடன் ஒரு சந்திப்பு



"பரமண்டலத்தில் இருக்கும் எங்கள் பிதாவே...."

— ஒரு கிராம மக்களின் பிரார்த்தனை

கொண்டுவர இந்திய அரசும் தமிழக அரசும் கடுமையாக உழைத்து வரும்போது, விடுதலைப் போராளிகளின் சில நடவடிக்கைகள் (மக்களுக்குத் தெரியவராதவை) அரசுக்குக் கவலை அளித்து வந்தது. அவர்களை வழிக்குக் கொண்டு வரவேதான் இந்த நடவடிக்கை என்று விஷயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

ஜி.பி. ராஜினாமா

இந்தச் சூழ்நிலையில், இலங்கை விவகாரங்களைக் கவனித்து வந்தவரும், உயர் மட்டக் கொள்கை ஆலோசனைக்குழுத்தலைவருமான ஜி. பார்த்தசாரதி ராஜினாமா செய்ததும் பின்னர் அந்தக் குழுவே கலைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்க ஒன்று. இந்தக் குழு இந்திரா காந்தி காலத்தில் வெளி விவகாரக் கொள்கைகள் பற்றி மட்டுமே கவனித்து ஆலோசனை கூறி வந்தது. ஆனால் ராஜீவ் கடந்த ஏப்ரலில், உள்நாட்டு—வெளிநாட்டு விஷயங்களில் தேசிய பாதுகாப்பு குறித்து ஆலோசனைகள் வழங்குமாறு இக்குழுவைத் திருத்தி அமைத்தார். அதன் தலைவரான ஜி.பி., அமைச்சர் அந்தஸ்தை பெற்றிருந்தார். அப்படிப்பட்டவர் ராஜினாமா செய்ய நேர்ந்தது. குழுவும் கலைக்கப்பட்டது. தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தில்லியின் சம்மதமின்றி எடுக்கப்பட்டவை என்று சென்னையில் உள்ள ஒரு பிரபல ஆங்கில நாளேடு தவறான தகவல்களைத் தந்ததற்கும் ஜி. பார்த்தசாரதி தலைமையில் இருந்த குழு கலைக்கப்பட்டதற்கும் தொடர்பு உண்டு.

அதிரடி நடவடிக்கை

"பஞ்சாபில் தீவிரவாதிகள் வைத்திருக்கும் ஆயுதங்களைவிட மிக நவீனமாகவும் ஒரு யுத்தமே நடத்தக்கூடிய அளவிலும் ஆயுதங்களை வைத்திருந்த தமிழீழப் போராளிகளைச் சமாளித்து, ஒரு சொட்டு இரத்தம் சிந்தாமல் காரியத்தைச் சாதித்தது தமிழக புலனாய்வுத் துறையின் மிகப் பெரிய வெற்றி" என்று பாராட்டினார் மத்திய அரசின் உளவுத் துறை அதிகாரி ஒருவர். கடைசி நிமிடம் வரை மிக இரகசியமாகக் காப்பாற்றப்பட்ட நடவடிக்கை திடீரென்று தமிழகம் முழுவதும் ஒரே சமயத்தில் எடுக்கப்பட்டது. இப்படித் திடீர் நடவடிக்கை எடுக்கும்போது போலீஸ் கடுமையாகவும் செயல்படத்தான் வேண்டியிருக்கும். 'அப்பா மகனே' என்று கெஞ்சிக் கொண்டிருந்தால் ஆயுதங்களை முற்றிலுமாகப் பறிமுதல் செய்திருக்க முடியாது என்பது மட்டுமல்ல, எதிர்ப்பு தோன்றி ஏராளமான போலீஸ்காரர்கள் பலியாகியிருப்பார்கள். எனவே இந்த நடவடிக்கை மாநிலப் புலனாய்வுத் துறைக்கும் தமிழக முதல்வர் மற்றும் இந்தியப் பிரதமருக்கும் கிடைத்த வெற்றி என்று சொல்லலாம்.

சிங்கப்பூர் பயணம்

சமீபத்தில் மோகன்தாஸ் சிங்கப்பூர் சென்று வந்த விஷயம் வெறும் வாயை

மெல்லுவோருக்கு அவல்போல் கிடைத்திருக்கிறது. அதற்கு ஏதேதோ காரணங்களைக் கற்பித்துக் கொண்டிருக்கிறார்கள். தலைமைச் செயலகத்தில் விசாரித்ததில் மோகன்தாஸுக்கு அரசாங்க ஆணை **G.O. No. 4858/ Home/Police I/** மூலம் பதினைந்து நாட்கள் லீவு அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வந்தது.

மோகன்தாஸ் இப்போது தமது மகள் திருமணத்தையொட்டி லீவில் சென்றதையும் பிரச்னையாக்கிவிட்டது அதே ஆங்கில நாளிதழ். ஜனவரி முதல் தேதி முதல் இரண்டு மாத காலத்திற்கு லீவு போட்டிருந்தார் அவர். டிசம்பர் 26ம் தேதி முதலே அரசு அவரை லீவில் போகச் சொல்லிவிட்டதாக ஒரு செய்தி. அப்படி நிர்ப்பந்தப்படுத்தியதற்குக் காரணம் அவர் மீது மத்திய அரசு கொண்டிருந்த அதிருப்தி என்று அந்தச் சென்னை ஆங்கில தினப் பத்திரிகையின் ஊகம். இந்த அதிருப்திக்குக் காரணம், அவர் ஈழப் போராளிகளிடம் அத்து மீறி நடந்து கொண்டதுதான் என்ற ஒரு கற்பனைச் செய்தியை அந்த ஆங்கில தினப் பத்திரிகை தில்லியிலும் சென்னையிலும் ஒரு சிலர் சொல்லி வெளியிட்டதாகத் தெரிகிறது.

டிசம்பர் 27 28 தினங்கள் விடுமுறை தினங்களானபடியாலும் 29ம் தேதி தனக்குச் சொந்த வேலைகள் இருப்பதாலும் 26ம் தேதியன்றே தம்மை லீவில் விடுவிக்கும்படி மோகன்தாஸ் கேட்டுக் கொண்டார் என்பது தான் உண்மையான விஷயம். ஜனவரி 23ல் அவரது மகளுக்குக் கல்யாணம் என்றால் தலைக்கு மேல் வேலை இருப்பதில் அதிசயம் இல்லை.

இப்படிப் பல விஷயங்களைச் சொன்ன அந்த மத்திய அரசு அதிகாரியிடம், "எப்படியோ இரண்டுமாத காலம் மோகன்தாஸ் லீவில் போவதால் பத்திரிகைகளுக்கு அவல் கிடைக்காது. அவர் பெயரும் அடிபடாது இல்லையா?", என்றோம். அதற்கு அந்தத் துப்பறியும் அதிகாரியின் முகத்தில் புன்னகை மலர்ந்தது. "பத்திரிகைகள் விஷயம் எப்படியோ எனக்குத்தெரியாது. ஆனால்மோகன்தாஸ் அவர்கள் இப்போதுள்ள பதவியில் இருக்கும்வரை அவர் லீவில் இருப்பினும் சரி, வெளிநாடு சென்றாலும் சரி, முக்கியமான பல விஷயங்கள் அவர் பார்வைக்குச் சென்றுதான் திரும்பும். முதல்வரும் அவரைக் கலந்து ஆலோசிக்காமல் இருக்கமாட்டார்" என்று சொல்லி ஜீப்பில் ஏறிப் பறந்தார் அவர்.

— நமது நிருபர்கள்

படம்: சுபா

பொன் மொழிகள் போட்டி-1

இந்த இதழில் 'மார்ஜின்' ஓரங்களில் ஐந்து பொன்மொழிகள் அச்சாகியுள்ளன. அந்த ஐந்து பொன் மொழிகளும் பின்வரும் ஐந்து பேர் கூறியவை. எதை, யார் சொன்னது? கூப்பனைப் பூர்த்தி செய்து அனுப்புங்கள். பரிசு ரூ 100. ஒருவருக்கு மேல் சரியாக எழுதினால் பரிசு பகிர்ந்து அளிக்கப்படும். முக்கிய நிபந்தனை: பொன்மொழியை முழுதுமாகப் பிழையின்றி உங்கள் கைப்பட எழுத வேண்டும். உறை மீது பொன்மொழிப் போட்டி—1 என்று குறிப்பிடவும்.



1. பிளேட்டோ:

2. ஆப்ரஹாம் லிங்கன்:

3. ராமகிருஷ்ண பரமஹம்ஸர்

4. சத்யசாயிபாபா:

5. நபிகள் நாயகம்:

முடிவு தேதி: 21.1.87

பெயர்: ....

விலாசம்: ....

....

வயிற்றில் குண்டுடன் வாழ்கிறார்

"எல்லாம் என் போதாத காலம் சார்! மாசம் இருநூறு முந்நூறுன்னு டாக்டருக்குத் தர வேண்டியிருக்கு. என் சம்பளத்துக்குக் கட்டுப்படியாகலே! இன்னும் அடிவயிற்றில் அந்த புல்லட் அப்படியேதான் இருக்குது! எவ்வளவு முயற்சி செய்தும் பிரயோஜனமில்லே. அப்பப்போ வயிற்று வலி வருவது சகஜம்'' என்றார் ஆதிகுருநாதன்.

என்னது வயிற்றில் புல்லட்டா? அது எப்படி?

ஒரு ப்ளாஷ் பேக்.

அது நடந்தது 1978ல். இடம்: பெரியபாளையம் பாங்க் ஆஃப் பரோடா கிளை. நேரம்: பகல் சுமார் ஒரு மணி. ஜாவா மோட்டார் சைக்கிளில் இரண்டு இளைஞர்கள் வந்து இறங்கினபோது, பாங்கில் ஒரே ஒரு கஸ்டமர்தான் இருந்தார். அவரும்போய்விட, உள்ளே நுழைந்த இருவரும் "ஹாண்ட்ஸ் அப்!'' என்றனர். ஒருத்தன் கையில் கத்தி. இன்னொருத்தன் கையில் துப்பாக்கி. கத்திக்காரன் கேஷியரை மிரட்டிப் பணப் பெட்டியைக் காலி செய்து, வாரி எடுத்துக் கொண்டான். பாங்க் மேனேஜரும் பியூனும் அவர்களைப் பிடிக்க முயன்றனர். அப்போது அவர்களுள் ஒருவன் துப்பாக்கியை இயக்க, பியூனின் அடிவயிற்றில் குண்டு பாய்ந்தது.

உடனடியாய்ச் சென்னைக்குக் கொண்டு வந்து, சிகிச்சை செய்து,பியூன் உயிரைக் காப்பாற்றிவிட்டனர். ஆனால் ஆபரேஷன் செய்தும் குண்டை வெளியில் எடுக்க முடியவில்லை. அது இன்னும் வயிற்றுக்குள்தான் இருக்கிறது. அந்தப் பியூன்தான் ஆதிகுருநாதன்.

பாங்க் நிர்வாகம், ஆதிகுருநாதனின் வீரத்தைப் பாராட்டி 1001 ரூபாய் கொடுத்துவிட்டு அத்துடன் கையைக் கட்டிக் கொண்டது. ஆனால் ஆதிகுருநாதனின் அடிவயிற்று புல்லட் அமைதியாய்க் கிடக்காமல், அன்றைக்கு ஆரம்பித்து இன்றும் தொந்தரவு கொடுக்கிறது. பரிசோதித்த டாக்டர்கள் உள்ளே இருக்கும் புல்லட், மன ரீதியில் சில பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளதாகவும், மனோதத்துவ ட்ரீட்மெண்ட் தரப்பட வேண்டும் என்றும் கூறுகின்றனர். ஆனால் அதற்கெல்லாம் ஆதிகுருநாதன் பணத்துக்கு எங்கே போவார்?

சமீபத்தில் ஒரு நம்பிக்கைத் துளிர்விட்டது. பாங்குகளில் கொள்ளைகள் அதிகரித்து வருவதால், அத்தகைய சம்பவங்களின்போது உயிரிழப்பவர்களுடைய குடும்பத்தாருக்கு ஒரு லட்சம் ரூபாய் நஷ்ட ஈடும் குண்டடிபட்டுப் பிழைத்துக் கொள்பவருக்கு ஐம்பதாயிரம் ரூபாய் வெகுமதியும் பாங்கு அளிக்கும் என்று அறிவித்தார் மத்திய துணை அமைச்சர் ஜனார்த்தன் பூஜாரி.

உடனே பியூன் ஆதிகுருநாதன் தமக்கும் ஐம்பதாயிரம் ரூபாய் நஷ்ட ஈடு வழங்கப்பட வேண்டும் என்று பாங்க் நிர்வாகத்தைக் கேட்டார். "பழைய கேஸ்களுக்கு இந்த ரூல் செல்லுபடியாகாது'' என்று கூறிவிட்டது நிர்வாகம்!


பழைய கேஸ் புதிய கேஸ் என்று பாகுபடுத்துவானேன்? அமைச்சர் நஷ்ட ஈடு, வெகுமதி பற்றிய அறிவிப்பினை வெளியிட்டபோது, "இனிமேல் வரும் கேஸ்களுக்குத்தான் இந்த விதி'' என்று குறிப்பிடாதபோது பாங்க் நிர்வாகம் இது போல ஓர் அர்த்தம் கற்பிப்பானேன்? இது ஏழைப் பியூனின் புல்லட் பாய்ந்த வயிற்றில் அடிப்பது போலல்லவா இருக்கிறது? ஒரு தேசியமயமான பாங்கிற்கு ஐம்பதாயிரம் ரூபாய் ஒரு பெரிய தொகையா? ஆதிகுருநாதனுக்கு இத்தொகையை அளித்துவிட்டால் குண்டு பாய்ந்த உடலுடன் பல்லாயிரக்கணக்கான பாங்கு ஊழியர்கள் வெகுமதி கேட்டு வந்து கியூவில் நின்றுவிடப் போகிறார்களா என்ன?

மௌஷ்மி

படம்: சோமு




ப்ளீஸ்! போராட்டத்தை வாபஸ் வாங்கிக்குங்க!
மூப்பனார்
நான் ஒரு கை பார்த்துடறேன்!



பிரிவினை வாதம்
குறுகிய கண்ணோட்டம்
வன்முறை
ராமராவ்
மாநிலக் கட்சிகளின் கூட்டணி
மாநிலக் கட்சிகளின் கூட்டணிக்குத் தலைமை வகிக்க ராமராவ் இசைந்துள்ளார்.


வக்க்.. வக்க்!
சின்ன டம்ளர் தண்ணி ஒரு ரூபா! பெரிய டம்ளர் தண்ணி ஒன்னரை ரூபா! ஐஸ் போட்டா எட்டு ரூபா!
தண்ணீர், மின் கட்டணங்கள் உயர்வு - செய்தி



கல்கி

1987 ஜனவரி 11
மலர் 45 இதழ் 24
அக்ஷய மார்கழி 27



அகில உலகப் புரட்சிச் சக்கரவர்த்தி!

ஜனநாயகம் என்றால் சமதர்மம் நிலவும்; சட்டம் அனைவருக்கும் பொதுவானதாக இருக்கும் என்றுதான் நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் எம்.ஜி. ஆர். ஒருவர் தான் உலகிலேயே முதன்முதலாக, 'ஏழைக்கு ஒரு சட்டம்; பணக்காரனுக்கு ஒரு சட்டம்' என்று புரட்சி செய்திருக்கிறார்! ஏழை குடித்துக் கெட்டுப் போவான் என்று கருணையோடு கள் சாராயக் கடைகளை மூடியவர், வசதி உள்ளவர் குடித்துச் சாகட்டுமே என்று விஸ்கி பிராந்தி கடைகளை மூடாமல் விட்டு வைத்திருக்கிறார்! ஏழைகளை வாழ வைக்கவும் பணக்காரர்களை ஒழித்துக்கட்டவும் இதைவிட அதிமேதாவித்தனமான ஒரு யோசனை இருக்கவா முடியும்? சோஷலிஸம், அன்னியலிஸம் எல்லாவற்றையும் தோற்கடிக்கும் எம்.ஜி. ஆரிஸமல்லவா இது! அது மட்டுமா? வசதி உள்ளவர்கள் நிறையவே குடித்து, ரொம்பவே கெட்டழியட்டும் என்று ஒயின் ஷாப்களை இரட்டிப்பாக்கியும் உள்ளது தமிழக அரசு. எவ்வளவு முன்யோசனை!

குடித்துப் பழகியவன் பூரண மதுவிலக்கு என்றால் வேறு வழியின்றிக் குடியை மறந்துவிட முயலலாம். ஆனால் எம்.ஜி. ஆர். அந்த அபாயத்துக்கு இடமளிக்கவில்லை. மாறாக, கள், சாராயம் அருந்தியவர்களை இனி விஸ்கி, பிராந்தி என்று அருந்திப் பார்க்குமாறு அழைப்பு விடுக்கிறார்! 'ஏழைகள் என்று சொல்லிக் கொண்டு எத்தனை காலம்தான் கள், சாராயம் அருந்துவது? அவர்களும் குடிப்பதிலாவது பணக்காரர்களுடன் போட்டி விடட்டுமே' என்ற பரந்த மனப்பான்மைதான் காரணம்! ஏழைகளின் நிலையை வசதி படைத்தவர்களின் நிலைக்கு உயர்த்த இதைவிடச் சிறந்த வழி வேறு என்ன இருக்க முடியும்? ஒயின் ஷாப் மது வகைகளின் விலை அதிகம் என்பதால் சில ஏழைகள் திருடியோ ஏமாற்றியோ கூடப் பணம் சம்பாதிக்க முயலலாம். அதனால் என்ன? நாய் விற்ற காசு குரைக்கவா செய்யும்? திருடிக் குடித்தால் 'கிக்' கிடைக்காமலா போய்விடும்? திருடினாலும் கூட சிலபேருக்கு விஸ்கி, பிராந்தி வாங்கும் அளவுக்குக் காசு கிடைக்காமல் போய்விட்டால் என்ன செய்வது என்பதற்காகத்தான் அதிபுத்திசாலித்தனமாக, மலிவு விலையில் ஜனதா ரம் ஒயின் ஷாப்களில் அறிமுகப்படுத்தப்படுகிறது! எவ்வளவு முன்னேற்பாடு! தீர்க்க தரிசனம்!

கள்ளச் சாராயம் பெருகுமோ என்று யாரும் சந்தேகப்பட வேண்டாம்! நிச்சயம் பெருகத்தான் செய்யும்! அதற்காக மதுவிலக்கை அமல்படுத்தாமல் இருக்க முடியுமா? 'திருட்டு நடக்காமலா இருக்கிறது?' என்று வீட்டைப் பூட்டாமல் போவதுண்டா? பின் வாசலைத் திறந்து போட்டாலும் முன் வாசலையாவது பூட்டத்தான் வேண்டும்!

'பூரண மதுவிலக்கு இல்லையெனில் கள்ளச் சாராயம் காய்ச்சுவோரை வளைத்துப் பிடிக்கப் போலீஸுக்குத் தார்மீகத் துணிவு இராதே' என்று யாரும் அசட்டுத்தனமாகக் கேள்வி எழுப்பக் கூடாது. மாமூல் பெறுவதற்குரிய தார்மீகத் துணிவு, அதிகாரிகள், ஊழியர்களிடையே புது வருஷத்தில் எப்படிப் பல்கிப் பெருகப் போகிறது, பாருங்கள்! அதோடு போட்டியிட்டுக் கொண்டு கள்ளச் சாராய உற்பத்தியும் அமோகமாக அதிகரிக்கப் போகிறது! 'தமிழ்நாட்டில் உற்பத்தி பெருகவில்லை' என்று ஒரு பயல் இனி பல்லின் மேல் நாக்கைப் போட்டுப் பேசிவிட முடியாது!

'பூரண மதுவிலக்கு என்றாலாவது வருவாய் இழப்பை ஈடு செய்யப் புதிய வரிகளை மகிழ்ச்சியோடு செலுத்தலாம்; இந்தப் பாதிக் கிணறு தாண்டும் கொள்கையையொட்டி புதிய வரிகள் விதிக்கப்படும்போது மது அருந்தாத மக்களும் பாதிப்புக்கு உள்ளாகி, முணுமுணுப்பார்களே!' என்றால் அதற்கும் அருமையான பதில் இருக்கிறது: 'அதற்காகவேதான் ஒயின் ஷாப்களை மூடாமல் வைத்திருக்கிறோம்; புதிய வரிகளைப் பற்றிய கவலையை மறக்க அங்கே போய்ப் புட்டி போட வேண்டியதுதான்' என்பதே அந்தப் பதில்! அப்போதுதானே ஒயின் ஷாப் லைசென்ஸில் ஆளும் கட்சியும் தழைக்க முடியும்?

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

கெஞ்சுவதும் மிஞ்சுவதும்

• சிங்கள வெறியர்களிடம் ஜெயவர்த்தனாவும், தமிழ் ஈழப் போராளிகளிடம் ராஜீவ் காந்தியும், கெஞ்சுவதும், அவர்கள் மிஞ்சுவதும், பிறகு அவர்கள் கெஞ்சி, இவர்கள் மிஞ்சுவதும் இங்கு வாடிக்கையாகி விட்டது. அதுவே அன்றாட வழக்கமாகிவிட்டது. உமாபதியின் கார்ட்டூன் இதை அழகாய்ச் சித்திரித்தது.

ராஜாஜி சொன்னதைக் கேளுங்கள் — நயமான, முறையான தலையங்கம். பிரதமருக்கு சரியான நேரத்தில் எடுத்துரைக்கும் அருமையான கருத்துக்கள் நிறைந்தது. இதனை பிரதமர் ஏற்று நடந்தால் அவரின் மதிப்பு உயர்வது திண்ணம்.

திருச்சி—17. கே. பாரி.

•. செவந்திப் பூக்களின் மகரந்தங்களாக மணக்கின்றன. 'வேர் வரை போகட்டும்' கவிதைகள். இனி வரும் புதுக் கவிதைப் பூக்களையும் ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

வளவனூர். கோ. புகழேந்தி.

• ஒரு டப்பிங் படத்துக்கு (ராட்சஸன்) விமர்சனம் ரொம்ப அவசியமா? ஆனால் மந்திரப் புன்னகை விமர்சனம் அம்சமாக இருந்தது. (இருந்தாலும் இப்படியா தாக்குவது?)

கொரட்டூர். கே.என். சீனிவாஸ்.

• சிந்தனின் சிந்தனை சரியான சிந்தனை. உயிர் காக்கும் மருத்துவம், பாதுகாப்புப் பணி இவற்றில் கம்ப்யூட்டர் அவசியந்தான். அதற்காக, எதற்கெடுத்தாலும் கம்ப்யூட்டர் என்றால் இந்தியா தாங்காது.

இளங்கார்குடி. கோ. பாஸ்கர்.

• 'அறிவை வளர்க்கட்டும்; வறுமையை அல்ல!' வி.பி. சிந்தனின் இக்கட்டுரை நியாயமான கருத்தைப் பிரதிபலித்தது. கம்ப்யூட்டரைப் பற்றிய அவருடைய கணிப்பு பாராட்டத்தக்கது.

தோப்புத்துறை. ஹெச். கே. நாசர்.

• நான் மேல்நிலை முதலாம் ஆண்டு 'கம்ப்யூட்டர் அறிவியல்' பாடம் படிக்கிறேன். நான் பள்ளியில் கற்றுக் கொண்டதைவிட தங்கள் 28.12.86 இதழ் படித்து மேலும் நிறையக் கற்றுக் கொண்டேன்.

நீடாமங்கலம். கோ. ராஜேஷ்.

• கம்ப்யூட்டர் சிறப்பிதழ் பல விஷயங்களைக் கொண்டதாக இருந்தாலும் ஏதோ ஒரு வெறுமை அதில் இருந்தது.

கொப்பம்பட்டி. எஸ். வெங்கட்.

• கம்ப்யூட்டர் சிறப்பிதழ் படித்தேன். நினைத்ததை விட அதிகமாகவே கம்ப்யூட்டரைப் பற்றி அறிந்து கொண்டேன். நன்றி.

நந்திவநல்லூர். க. இளங்கோ.

• கம்ப்யூட்டரைப் பற்றிக் காதளவிலே மட்டும் கேட்டறிந்த என் போன்ற இளைஞர்களுக்கு, கல்கியின் கம்ப்யூட்டர் சிறப்பிதழ் ஒரு வரப்பிரசாதமாக அமைந்திருந்தது!

சீர்காழி—10. ஆர்.எஸ். இராஜ்.

• கதை, கட்டுரை, ஜோக்ஸ் என்று எல்லாவற்றையும் கம்ப்யூட்டர் சமாசாரமாகவே, வெளியிட்டு, கம்ப்யூட்டர் சிறப்பிதழை ஜமாய்த்துவிட்டீர்களே, ஜமாய்த்து!

திருச்சி—20. ஆர். அப்துல் சலாம்.

• ஒவ்வொரு கடைக்கோடி குடிமகனும், இன்றே இல்லாவிட்டாலும் நாளைய நாட்களிலாவது விஞ்ஞான வளர்ச்சி பற்றி அறிந்து கொள்ளவும், அடுத்து வரும் நாட்களில் நம்மிடையேயும் விஞ்ஞானிகள் உள்ளனர் என்பதை உலகறியச் செய்யவும் இன்றே, இப்பொழுது முதலே வங்கி, தபால் தந்தி துறைகளில் மட்டுமல்ல, வெற்றிலைப் பாக்குக் கடைகளில்கூட கம்ப்யூட்டர்களை எப்படியெல்லாம் பயன்படுத்த வாய்ப்புள்ளது என்பதைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்!


சென்னை—24. சி. மனோகரன்.

கம்ப்யூட்டர் சிறப்பிதழில் பல அம்சங்களைப் பற்றி எழுதிய நீங்கள் கம்ப்யூட்டரை வாங்கி உபயோகிக்கும் யாரையும் பேட்டி கண்டு அவர்களுக்குப் பிரச்னைகள் உள்ளனவா என்பதை ஆராயாமல் போனது வருந்தத்தக்கது. நான் ஒரு கம்ப்யூட்டருக்கு ஆர்டர் தந்துவிட்டு, அதனை இயக்க நாள் குறித்து, ஒரு பெரிய மனிதரையும் அதற்கு அழைத்திருந்தேன். ஆனால் குறித்த தேதியில் கம்ப்யூட்டர் 'சப்ளை' ஆகாததால், வேறு ஒரு கடன் வாங்கிய கம்ப்யூட்டரைத்தான் அந்தப் பெரியமனிதர் 'முடுக்கி'விட நேர்ந்தது! கம்ப்யூட்டர் எனக்குத் தரப்பட்ட பிறகும் பிரிண்டர் வரவில்லை! கம்ப்யூட்டரை இயக்க ஒப்பந்தப்படி கற்றுத் தர வேண்டிய ஆட்கள் தலைகாட்டவில்லை. மேலும் கம்ப்யூட்டரிலேயே மூன்று தினங்களுக்குள் பல கோளாறுகள் வேறு! நான் அந்தக் கம்ப்யூட்டரின் பெயரைக் குறிப்பிட விரும்பவில்லை. ஆனால், ''ஒரு கம்ப்யூட்டரை மலிவாக இருக்கிறது என்று வாங்கிவிடாதீர்கள்; நன்கு யோசித்து அதனைப் பயன்படுத்தியுள்ள பலரைச் சந்தித்து, விசாரித்துப் பிறகு, உங்களுக்குத் தேவையான கம்ப்யூட்டரைத் தேர்ந்தெடுங்கள்'' என்று மட்டும் கூறிக் கொள்ள விரும்புகிறேன். நான் அவதிப்படுவது போல் யாரும் அவதிப்படவே கூடாது!

சென்னை—4.

எஸ்பி. எஸ்டி. பழனியப்பன்,
சார்ட்டர்ட் அகவுண்ட்டண்ட்

இதயத்திற்கு இதமானது



இதயம்

நல்லெண்ணெய்

லெசித்தின் கொண்டு
இரத்தத்தில் கொலஸ்ட்ரால்
அளவைக் குறைக்கின்றது.

நலமான இதயம் வளமான வாழ்வு

இதயம் நல்லெண்ணெய்

V.V.V & SONS தயாரிப்பு

V.V.V. & SONS, P.B. No. 19. VIRUDHUNAGAR.

LEKHA/VVV/TAMIL

1987 தெய்வீக படக் காலண்டர்கள்

ஆர்ட் காகிதத்தில் கண்ணைக் கவரும் ஆஃப்செட் வண்ண அச்சு
ஒவ்வொரு இந்து குடும்பத்திலும் இருக்க வேண்டிய காலண்டர்

	ஒன்றின் விலை
1. ஸ்ரீ விநாயகர், ஸ்ரீ சுப்ரமண்யர், ஸ்ரீ அர்த்தநாரீஸ்வரர், ஸ்ரீ கிருஷ்ணன், ஸ்ரீ வெங்கடேஸ்வரர், ஸ்ரீ லட்சுமி நாராயணர் ஆகிய 6 படங்கள் கொண்ட காலண்டர் அளவு: 11" × 18"	10.00
2. ஓவியர் சில்பி அவர்கள் வரைந்த அன்னை மீனாட்சியின் அழகிய ஓவியம் – மாத சிலிப்புடன். அளவு: 14" × 20"	7.00
3. சிருங்கேரி ஜெகத்குரு, ஸ்ரீ ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள், ஸ்ரீ சந்திர மௌளீஸ்வரர், ஸ்ரீ சாரதாம்பாள், ஸ்ரீ ஆதி சங்கரர், கோடம்பாக்கம் சாரதாம்பாள் கோவில் ஆகிய 6 படங்கள் கொண்ட காலண்டர். அளவு: 11" × 18"	10.00

விற்பனை வரி 5%, சர்சார்ஜ் 5% & V.P.P. செலவு தனி.


ஆர்டர் அனுப்ப வேண்டிய முகவரி:

குமரன் இண்டஸ்ட்ரீஸ்,
20B, ரேஸ்கோர்ஸ் சாலை,
P.B. No. 16, திண்டுக்கல் 624 001.

Breakfast or Lunch Racold Toasters serve you best.




Racold — the leader in electrical appliances offers the finest range of toasters. Superior in quality and designed for long service. Backed by over 35 years of expertise in domestic appliances.



ELEGANT Semi-Auto Toaster

You can get 2 slices of crisp, brown toasts in a jiffy. When the toasts pop up, the current is cut off.
Safe and easy to operate.
800W, 230 Volts AC only



PRIYA Semi-Auto Toaster

Sleek in look, efficient in performance. Designed to give you four crisp brown toasts at a time. When they pop-up, current is automatically cut-off.
Ideal for large families, clubs and restaurants.
110W, 230V, AC only

Snack 'N' Sandwich Toaster

This handy kitchen companion gives you golden brown sandwiches. It is designed to seal and cut sandwiches into halves automatically. Fitted with a thermostat which cuts off the current when the sandwiches are ready.
600W, 230V, AC only

Racold APPLIANCES PVT. LTD.
Pune — Bombay — New Delhi.

Racold - the trusted name in electrical appliances.

DA/7015

DISTRIBUTORS:

Madras: Aluminium and Glassware Emporium, 196, Netaji Road, Ph: 21776. **Bangalore:** Aluglass Electricals, No. 14, 24th Cross, Kilari Road, Ph. 72353. **Kerala:** A.G.E. Ernakulam, 37/2132, T.D. Road, 1st Floor, P.B. No. 3508, Ernakulam, Cochin-682 035. Ph: 34785 **Hyderabad:** Ram Agency, 5-4-17, Jawaharlal Nehru Road, Ph: 46282.

குண்டு வெடிப்புக்குக் கண்டனம் எங்கே?

நீங்கள் கேட்டவை — தராசு

* த. சத்தியநாராயணன், அயன்புரம்

? சமீபத்தில் டி.வி.யில் பார்த்து ரசித்த நிகழ்ச்சி?

! ஷியாம் பெனகல் தயாரிப்பான 'யாத்ரா.' ஃபிரேமுக்கு ஃபிரேம் பயனுள்ள கவிதை.

* கே.கே. பழனிசாமி, ஈரோடு

? கருணாநிதி கைதான பின் அவரது சகாக்கள் பஸ் எரித்தது, குண்டு வைத்தது, ரயில் பயணிகளுக்கு ஆபத்து விளைவித்தது — இதற்கெல்லாம் தராசு என்ன கண்டனம் தெரிவித்தது?

! யார் செய்தாலும் வன்முறை நிச்சயம் கண்டிக்கப்பட வேண்டியதுதான். அதில் இரண்டாவது அபிப்ராயத்துக்கு இடமில்லை. தி.மு.க. கட்சியினர் பஸ் எரித்திருக்கலாம்; குண்டு வெடித்ததும் அவர்களே என்று நான் பார்த்த அளவில் போலீஸ் அறிக்கைகள் கூறவில்லை. ஆனால் கருணாநிதியே, ரயிலைச் சிதைத்தது போல போஸ்டர் ஒட்டி 'தமிழ்த் துரோகி' என்று பட்டம் சூட்டிவிட்டார்கள். நிற்க. நடந்துள்ள வன்முறைகளுக்குக் காரணம் தி.மு.க. அனுதாபிகள்தான் என்று நிரூபணமானாலும் அதிசயப்படுவதற்கில்லை. வன்முறைகளைக் கண்டிக்கும்போது காரணங்களையும் ஆராய வேண்டும். கருணாநிதியும் அவர் சகாக்களும் செய்தது குற்றம் என்று நீதிமன்றத் தீர்ப்பு வழங்கப்படவில்லை. அப்படியே குற்றம் என்று கொள்வோமாயினும் மணல் குன்றை மலையாகப் பாவித்துப் பத்து எம்.எல்.ஏ.க்களை வெளியேற்றுவது போன்ற கடுமையான நடவடிக்கை எடுக்கும் போது மக்கள் மனம் குமுறவே செய்யும். தலைவர்களைச் சிறையில் தள்ளலாம்; மக்களின் உணர்ச்சிகளைச் சிறைப்படுத்தி விட முடியாது. ஆட்சியில் இருப்போருக்குச் சாணக்கியம் தேவை. வழக்காடலைத் தாமதப்படுத்தி நீண்ட காலம் கருணாநிதியைச் சிறையில்வைத்திருக்கவேண்டிய அவசியம்என்ன?

* நாகை பாபு, தஞ்சாவூர்

? மீண்டும் தமிழ்நாட்டில் இ. காங்கிரஸ் ஆட்சிக்கு வருமா?

! வரலாம். அப்படி வந்தால் அதற்கு இ. காங்கிரஸின் வளர்ச்சி காரணமாயிராது. எம்.ஜி.ஆரின் சரணாகதியே காரணமாயிருக்கும். அதில் இரு தரப்புக்குமே பெருமையில்லை.



* பஜே! பஜே!



* ஆட்டம் தான்!



* தமிழ்த் துரோகி!



பயனுள்ள கவிதை *

* பூமகன், திருமயம் *

? சட்டமன்றத்தில் ''சட்ட எரிப்பை''ச் சண்டமாருதமாகத் தாக்கிச் சீண்டிவிட்ட இ. காங்கிரஸார் ஓட்டெடுப்பில் கலந்து கொள்ளாதது கோழைத்தனம்தானே?

! கருணாநிதி செய்தது அரசியல் சாசனச் சட்ட அவமதிப்புத்தானா என்பதில் கருத்து மாறுபாடு உண்டு. பிரச்னை நீதிமன்றத்தில் உள்ளது. அதனால் நாம் ஒரு கருத்துத் தெரிவிப்பது முறையாகாது. ஆனால் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மன்றத்துக்குள் அது பற்றிக் கருத்துக் கூற உரிமை உண்டு. இ. காங்கிரஸ் கட்சி ''அவமதிப்பு'' என்றே

உறுதியாக எண்ணிச் சட்டமன்றத்தில் அவ் விதமே கருத்துத் தெரிவித்தது. அதே நேரத்தில் சட்டமன்றத்தில் அதற்காக வழங்கப் பட்ட தண்டனை மிக அதிகம்; பத்து எம்.எல்.ஏ.க்களின் பதவிப் பறிப்பு என்ற நடவடிக்கை அக்கிரமமானது, அநீதியானது என்றும் இ. காங்கிரஸ் எண்ணுகிறது. அதனால் வோட்டெடுப்பில் கலந்து கொள்ளாமல் ஆட்சேபனை தெரிவித்துள்ளது. தண்டனையை எதிர்த்து வோட்டு அளித்திருந்தால் தி.மு.க. செய்த காரியத்துக்கு ஆதரவு தெரிவிப்பதுபோல் ஆகிவிடும் அல்லவா? எனவே இ. காங்கிரஸ் செய்த காரியம் அதனுடைய கொள்கை நோக்கில் பார்க்கும் போது சரியானதே.

* க. இளங்கோ, நந்தியநல்லூர்

? இப்போதெல்லாம் எளிதாகக் கிடைக்கக் கூடியது எது?

! வேறென்ன, டாக்டர் பட்டம்தான்!

* ந. ஜெயராமன், சென்னை—13

? கல்கி, தி.மு.க.வுக்குப் போடும் ஜால்ரா தான் இப்போதைய சங்கீத சீசனில் நாராசமாய் ஒலிக்கிறது என்கிறேன், என்ன சொல்கிறீர்கள்?

! இதோ உங்களுக்குப் பிடித்த ஒரு ஜால்ரா பாட்டுப் பாடுகிறேன். ரசியுங்கள். (இந்த மாதிரி நிறைய ஜால்ராப் பாட்டுக்கள் கைவசம் உள்ளன.)

இந்தி அரக்கனை வாழ்த்துவோம், பஜேபஜே!
இரண்டாந்தரப் பிரஜை ஆவோம் பலே! பலே!
கள்ளுச் சாராயம் மூடுவோம் பஜே! பஜே!
கள்ளச் சாராயம் பெருக்குவோம் பலே! பலே!
புரட்சித்தலைவர் போற்றுவோம் பஜே! பஜே!
புத்தம்புது ஒயின் ஷாப்கள் பலே! பலே!

* அ.மு. தாஜ் மஜீத், திருமயம்

? மலையாளத் திரைப்படங்களெல்லாம் ஒரே ஆபாசக் காட்சிகளையே மையமாகக் கொண்டுள்ளனவே?

! அதுபோன்ற செக்ஸ் படங்கள் மலையாள தேசத்தில் வெற்றி பெறக் காணோம். எல்லாம் தமிழ்நாட்டுக்கு ஏற்றுமதியாகி இங்குதான் வெற்றிக் கொடி நாட்டுகின்றன. மிக உயர்ந்த மலையாளப் படங்களும் உருவாகின்றன. அவை இங்கு அதிகமாகத் திரையிடப்படுவதில்லை. எனவே வெட்கித் தலைகுனிய வேண்டியவர்கள் நாம்தான்.

* அ. பாபுஜி, நந்தியநல்லூர்

? தமிழ்நாட்டில் நடிகர்கள் அதிகமா? அரசியல்வாதிகள் அதிகமா?

! நடிக்கும் அரசியல்வாதிகளும் அரசியல்வாதி நடிகர்களும் அதிகம்.

* அருண், ஈரோடு

? கிராமங்களில் நீங்கள் காணும் சிறப்பம்சங்கள்?

! இன்னும் இயந்திரமாகிப் போகாமல் மனித நேயத்துடன் இருக்கும் கிராம மக்களின் இதயம்.

* ஆர்.கே. அருண்செல்வன், விக்கிரபாண்டியம்

? கான்பூர் டெஸ்ட்டில் நாலு சதம் போட்ட அஸாருதீன் ஆட்டம் எப்படி?

! என்னதான் அஸாருதீன் விசிறியாக இருந்தாலும் நாலு சதம் போட்டதாகவா கற்பனை செய்வது? இரட்டை சதத்துக்கு ஒன்று குறைச்சல், ஸார்! அந்தச் சமயத்தில் அவுட் ஆனது துரதிர்ஷ்டம் என்றாலும் அவரைப் பொறுத்தமட்டில் அதிகபட்ச டெஸ்ட் ரிகார்ட் ஏற்படுத்திய ஆட்டம்தான்! அதுசரி, அடுத்த ஒரு நாள் ஆட்டத்தில் நம்மவரை மண்ணைக் கவ்வவைத்துவிட்டதே ஸ்ரீலங்கா அணி! க்ஷேமம்!

* எஸ். சண்முகம், சீர்காழி

? உமக்கு டாக்டர் பட்டம் கொடுத்தால் பெயருக்கு முன் டாக்டர் என்று போடுவீரா?

! அது என்னய்யாது, கொடுத்தால்... என்று இழுக்கிறீர்கள்? கொடுக்கப்பட வில்லை என்று எப்படித் தீர்மானித்தீர்?

* இரா சரவணன், தஞ்சை

? மனைவியை மானபங்கம் செய்தான் என்ற குற்றத்துக்காகக் கணவனுக்கு ஜப்பானிய நீதிமன்றம் தண்டனை அளித்துள்ளதைக் கவனித்தீரா?

! புரட்சி என்றால் இதுவல்லவோ புரட்சி! நீதிபதியின் தீர்ப்பைப் படித்துப் பார்த்துப் பரவசமானேன். அந்த ஜப்பானிய நீதிபதியை உலகளாவிய பெண் குலம் பாராட்டும். மனைவியே என்றாலும் அவள் விருப்பத்துக்கு விரோதமாக எந்த ஒரு விஷயத்திலும் கணவன் மேலாதிக்கம் செலுத்தி அவளைப் பணிய வைப்பது என்பது அடிமைப்படுத்துகிற காரியம்தான். நம் நாட்டிலும் இத்தகைய தீர்ப்பு வழங்குவதற்குச் சாதகமான சட்டங்கள் உள்ளன. ஆனால் துணிந்து வழக்குத் தொடர நம் இந்தியப் பெண்கள் முன்வருவார்களா என்பது சந்தேகமே.

* ரூ 10 பரிசு பெறுபவர்:

பூமகன்,
மே/பா. லட்சுமி கபே,
திருமயம் 622 507
புதுக்கோட்டை (மா.வ.)


மலர் என்பார்,
மதி என்பார்,
மயில் என்பார்.
எப்படி
அழைப்பினும்
கண்ணே,
ஈடில்லை எதுவும்
உனக்கு !
ஸென்ஸேஷன்ஸ்
ஸாரிகள் மற்றும் டிரெஸ் மெட்டீரியல்ஸ்
மஃபத்லால்
—நம்பிக்கைக்குப் பெயர் பெற்றது
ம:பத்லால்
:பேப்ரிக்ஸ்
Location Courtesy: The Taj Mahal Hotel, Bombay.
CHAITRA B MF 635 D TAM


நெத்தி வேர்வையே நெல்லாச்சு
நெல்லே நமக்கு சீராச்சு !
நினைச்சது போல வெளஞ்சாச்சு
நெலமே நமக்கு தாயாச்சு !
இராவுத்தர் பிலிம்ஸ்
அளிக்கும்
விஜயகாந்தின்
உழவன் மகன்
சினிமாஸ்கோப்
R. அரவிந்தராஜ்
ஆபாவாணன்
அ.செ. இப்ராகிம் இராவுத்தர்
Subbu

ராஜாஜி வாழ்க்கை வரலாறு III

ராஜ்மோகன் காந்தி



ஸி. ஆரின் எதிர்காலத்தை நிர்ணயித்த தம்பதி:
எலிஸபெத், பிலிப்



கல்கத்தா நகரில் பல முஸ்லிம்கள் கொல்லப்பட்டதாகக் கேள்விப்பட்டார் காந்திஜி. இறந்தவர் உடல்கள் சிலவற்றை நேரில் பார்த்தார். பார்த்ததைப் பற்றி விசனித்துப் பேசவும் செய்தார். கோபமடைந்த ஹிந்துக்கள் பலர் அவர் இல்லத்துக்குள் அத்து மீறி நுழைந்து, 'அவர் ஹிந்துக்கள் அடைந்த துன்பத்தைக் கவனிக்கவேயில்லை' என்று குற்றம் சாட்டினர். அவர் மீது வீசப்பட்ட ஒரு செங்கல்லும் தடியும் நல்லவேளை, குறி பிசகின. கூட்டத்தை அமைதிப்படுத்த அவர் எடுத்த முயற்சி தோல்வியுற்றது. மறுபடி கல்கத்தாவில் வன்முறை தலைதூக்கியதன் எதிரொலியாக அவர் உண்ணாவிரதத்தை அறிவித்தார். "கல்கத்தாவாசிகளிடம் இந்தப் பைத்தியக்காரத்தனம் விடைபெற்று, புத்தித் தெளிவு ஏற்படும் வரையில் உண்ணாவிரதம் நீடிக்கும்" என்றார். "தண்ணீர் தவிர வேறு எதுவும் அருந்தமாட்டேன்" என்றார். அவர் காட்டிய ஒரே சலுகை தேவைப்பட்டால் வயிற்றுக் குமட்டலை அடக்கத் தண்ணீரில் சில சொட்டு எலுமிச்சைச் சாற்றைக் கலந்து அருந்துவது மட்டுமே. அப்போது அவருக்கு வயது 78.

ஏற்கெனவே சில சந்தர்ப்பங்களில் செய்ததுபோல் இப்போதும், 'உண்ணாவிரதத்தை அறிவிக்கக் கூடாது' என்று ஸி. ஆர். காந்தியிடம் சண்டை போட்டுப் பார்த்தார். ஒருவேளை மகாத்மாவை இழக்க நேர்ந்தால் அது தேசத்துக்கு எவ்வளவு பெரிய நஷ்டம் என்று எண்ணிய போது அவருக்குக் காந்தியின் திட்டத்தை எதிர்க்கவே தோன்றியது. மூன்று மணி நேரம் வாதாடி ஸி. ஆர். கண்டது தோல்வியே. காந்தி விட்டுக் கொடுக்கவேயில்லை. "நான் ஆண்டவன் பொறுப்பில் என்னை ஒப்படைத்துக் கொள்ளவே விரும்புகிறேன்" என்றார். "அப்படியானால் எலுமிச்சைச் சாறு சேர்த்துக் கொள்வதாக எதற்கு ஒரு சலுகை?" என்று கேட்டார் ஸி. ஆர். மகாத்மாவை வழிக்குக் கொண்டு வர முடியவில்லையே என்ற ஆதங்கத்தில், ஒரு வாதத்துக்காக, ஸி. ஆர். இப்படிக் கடுமையாகக் கேட்கப் போக, உடனே, காந்தி, "அது என் பலவீனத்தையே உணர்த்துகிறது" என்று ஒப்புக் கொண்டார். அந்தச் சலுகையை நீக்கியும் விட்டார்! மகாத்மாவை வற்புறுத்துவதற்குப் பதில், அவர் உண்ணாவிரதத்தைச் சீக்கிரமே முடித்துக் கொள்ள ஏற்ற சூழலை உருவாக்குமாறு மக்களை வற்புறுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார் ஸி. ஆர். இதுவும் அவருக்குப் பழகிப் போன ஒரு காரியமே. ஸி. ஆர். கூறினார்: "ஒருவேளை அவருடைய விலை மதிக்க முடியாத உயிர் பிரியுமானால்,

ஆண்டவனை மனமார தேடிக்க வேண்டும்; ஆண்டவனுக்காக ஏங்க வேண்டும். அவனிடத்தில் ஆழ்ந்த அன்பு இருந்தால் போதும். அப்போது தான் யார் என்பதை அவனே உணர்த்துவான்.

சிலுவையில் மகாத்மா

அதற்கான பழியை இப்போது நாம் எந்த அந்நிய அரசின் மீதும் சுமத்த முடியாது. நாமேதான் காரணமாவோம். கல்கத்தாவின் அமைதிக்குப் பங்கம் விளைவித்துக் கொண்டிருப்பவர்கள் மனம் உருக மறுத்தால், அவர்கள் தங்கள் அசட்டுத்தனமான நடவடிக்கைகளைத் தொடர்வார்களேயானால், அதன் பின்விளைவு, வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத அளவுக்கு வெட்கக் கேடாகிப் போகும். வயது முதிர்ந்த காந்தியின் சிரத்தின் மீது வெற்றிக் கிரீடம் சூட்டி, கல்கத்தா, அவரைப் பஞ்சாபுக்கு வழியனுப்பி வைக்கட்டும். பஞ்சாபில் அவர் தேவைப் படுகிறார்.''

கலவரப் பகுதிகளில் இருந்த வீடுகளுக்கும் சட்டத்தை அமல்படுத்தும் அதிகாரிகளுக்கும் இடையில் பந்தாடப்பட்டார் ஸி. ஆர். கவர்னரிடம் ரொம்பவே எதிர் பார்க்கப்பட்டது. பம்பாயின் முன்னாள் மேயர், நண்பர் மாதூர்தாஸ் திரிகாம்ஜி, ஸி. ஆருக்குத் தந்தி அடித்தார்: ''உங்களுடைய தீவிரமான அமைதிப் பணி முயற்சிகள்தாம், பாபுவை உயிர்த் தியாகம் புரிவதிலிருந்து காப்பாற்ற வேண்டும்". ஸி. ஆரின் பதில்: ''கடவுள் நம்மைக் கைவிட மாட்டார்.''

உண்மையைக் கூற வேண்டுமென்றால் ஸி. ஆர். பயப்பட்டார். சிப்பாய்கள், அதிகாரிகள், போலீஸ்காரர்கள் ஆகியோரிடம் அவர் சொன்னார்:

''ஒவ்வொரு தனி மனிதன், அவனுடைய சொத்து, சுதந்திரம் கௌரவம் ஆகியவற்றைக் காப்பாற்ற வேண்டியது உங்கள் புனிதக் கடமை. குற்றவாளி யாரானாலும், அவன் உங்கள் இனத்தை, மதத்தைச் சேர்ந்தவனாயிருந்தாலும் தாக்கி வீழ்த்துங்கள். மதச் சார்புடன் நீங்கள் பட்ச பாதமாக நடந்து கொண்டால் என்னுடைய கல் இதயமே உடைந்து போகும் எனில், பெல்லியகட்டாவில் நமக்காகத் தம்மைத் தாமே சிலுவையில் அறைந்து கொண்டிருக்கிறவரைப் பற்றிக் கூறவும் வேண்டுமோ?''

நான்காவது நாள் போலீஸ் படையினர் ஒட்டு மொத்தமாக—பிரிட்டிஷ், ஆங்கிலோ இந்திய அதிகாரிகள் உள்பட—கடமையாற்றும்போதே அனுதாப உண்ணாவிரதம் இருந்தனர். இந்த இருபத்தி நாலு மணி நேர அனுதாப உண்ணாவிரதத்தின்போது கல்கத்தா முற்றிலும் அமைதி காத்தது. அன்று மாலை ஸி. ஆர்., கிருபளானி, ஷுரவர்த்தி, கோஷ் ஆகியோர் சேர்ந்து சென்று காந்தியிடம் அமைதி திரும்பிவிட்டதாகக் கூறினர். அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போதே சோஷலிஸத் தலைவர் ராம் மனோஹர் லோஹியா, இந்து இளைஞர்களுடன் அறைக்குள் நுழைந்தார். இவரும் வன்முறைக்குத் தாங்கள் துணை போனதாக ஒப்புக் கொண்டு, ஆயுதங்களைக் காந்தியின் காலடியில் சமர்ப்பித்தனர். இந்து மஹா சபையைச் சேர்ந்த இரு வங்காளித் தலைவர்கள், ஒரு முஸ்லிம், ஒரு பஞ்சாபி ஹிந்து, ஒரு சீக்கியர் ஆகியோர், ஸி. ஆர். உருவாக்கித் தந்த ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இதற்குமேல் காந்தியினால் பிடிவாதம் பிடிக்க முடியவில்லை. இரவு ஒன்பதே கால் மணிக்கு எலுமிச்சம் பழ ரசம் கலந்த நீரை ஷுரவர்த்தி தம் கரத்தால் அளிக்க, அதனை வாங்கி அருந்தி உண்ணாவிரதத்தைமுடித்துக்கொண்டார்.


பத்திரிகையாளர்கள் ஸி. ஆரிடம் அறிக்கை கேட்டனர். ''மகிழ்ச்சி என் உள்ளத்தில் நிரம்பி ததும்பிக் கொண்டிருக்கிறது. அதனால் வார்த்தைகளைக் கோத்து வாக்கியங்கள் அமைக்கக்கூடச் சக்தியற்றவனாக இருக்கிறேன்'' என்றார் ஸி. ஆர். சற்று நேரம் சென்று அவர் தமது மதிப்பீட்டைப் பின்வருமாறு வெளியிட்டார்: ''காந்திஜி எத்தனையோ காரியங்களைச் சாதித்திருக்கிறார். ஆனால் கல்கத்தாவில் இப்போது ஒரு கொடுமையுடன் அவர் போராடி அடைந்துள்ள அற்புத வெற்றிக்கு ஈடாக எதையும் கூற முடியாது; நாடு சுதந்திரம் பெற்றதைக் கூடச் சொல்ல முடியாது! வேறு இடங்களில் 50000 போர்ப் படையினர் நிறுத்தப்பட்டும் தோல்வி ஏற்பட்டிருக்கிறது. ஆனால் வங்கத்திலோ ஒரு தனி மனிதர் வெற்றி அடைந்திருக்கிறார்!'' இந்த வெற்றியில் கல்கத்தா மக்களுக்கும் பங்கு உண்டு என்று கருதினார் ஸி. ஆர். அன்பு, நம்பிக்கை, பரிவு என்ற மகாத்மாவின் செய்தியைச் சுமக்கும் பெருமை மிக்க வாகனங்களாக அவர்கள் விளங்குவதைச் சுட்டிக் காட்டினார். மகாத்மாவின் பெருமைகளுக்கு கல்கத்தா மேலும் பெருமை சேர்த்திருப்பதாக தில்லி நண்பர் ஒருவருக்கு ஸி. ஆர். எழுதினார். பத்திரிகையாளர்கள் ஓர் அற்புதம் நிகழ்ந்திருப்பதாக எழுதி அறிவித்தனர். காந்தி, பஞ்சாபுக்குப் போகும் மார்க்கத்தில் முதல் கட்டமாக தில்லிக்குப் புறப்பட்டார்.

எங்கோ வெகு தூரத்தில் நடந்த ஒரு சம்பவம் ஸி. ஆரின் வாழ்க்கையை இப்போது பாதித்து, அவருடைய எதிர் காலத்தையும் நிர்ணயித்தது. பிரிட்டிஷ் சிம்மாசனத்தின் வாரிசும் இன்றைய இளவரசியுமான எலிஸபெத், மவுண்ட்பாட்டனின் மருமானை ஃபிலிப்பைக் கல்யாணம் செய்து கொள்ள இருந்தார். நாள் குறித்தாகிவிட்டது. லண்டனில் நடக்க இருந்த கல்யாணத்துக்கு மவுண்ட்பாட்டன் அவசியம் போயே ஆக வேண்டும். புது தில்லியில் ஒரு தற்காலிக கவர்னர் ஜெனரல் தேவைப்பட்டார்.

(தொடரும்)

தமிழாக்கம்: வி. ராஜேந்திரன்


SHADES OF DISTINCTION
SHADES OF SOFLENE
EXCITING DESIGNS
EXCLUSIVELY TEXTURED
IN ELEGANT HUES ....
UNQUESTIONABLY ....
FROM SOFLENE
SOFLENE SILK MILLS
217, PRINCESS STREET
1st FLOOR, ANANT BUILDING
BOMBAY 400 002
Phone: 31 54 12-25 18 56
STOCKIST FOR SOUTH INDIA
FABRICS, 71, GODOWN STREET, MOOLCHAND MARKET
MADRAS-1 PHONE NO. 27532
GEMINI-S-106



nutrine
MILK
மீண்டும் மீண்டும்
சுவைக்கத் தூண்டும்
நியூட்ரின்
மில்க் பிஸ்கட்ஸ்
nutrine
BISCUITS
MILK
nutrine

மண்ணுக்குள் வைரம்



கிராமக் கதையென்றால் ஒரு வசதி. புதிது புதிதாகச் சம்பிரதாயங்களையும், பஞ்சாயத்துக் கூட்டல்களையும் (சுவைபட) சொல்லலாம். இந்தப் படத்திலும் சொல்லி இருக்கிறார்கள். சோளக் கொல்லைப் பொம்மையை எரித்து ஒரு புதுமை. தண்டோரா தட்டிப் பஞ்சாயத்தைக் கூட்டி ஒரு புதுமை. படையலுக்காக அம்மன் கோயிலை நோக்கி ஊர்ப் பெண்கள் எல்லாம் ஊர்வலமாகப் போகும் ஒரு புதுமை. அந்தப் பாட்டு கூட வித்தியாசம்தான்.

பெரிசு சிவாஜிக்கு மணப்பாறை, திண்டுக்கல் என்று ஊர் ஊராகச் சுற்றுகிற வேலை. சொந்தக் கிராமத்தில் அவ்வளவாக வேலையில்லாமல் பண்ணிவிட்டார்கள். ஆனாலும் கூட அந்தக் கடுகளவு இடத்திலேயே மலையளவு புரட்டி எடுத்திருக்கிறார். பேத்தி சாகும் தறுவாயில் "எனக்கு என்ன பிடிச்சாலும் ஒனக்கும் புடிக்கும் இல்லியா தாத்தா, நான் கல்யாணம் கட்டின மாப்பிள்ளையைப் பாரு. ஒனக்குப் புடிச்சிருக்கா இல்லியா?" என்று கேட்பதும் தாத்தா சிவாஜி அழுது கொண்டே ஆமோதிப்பதும் உருக்கம்.

முரளி முன்பாதியில் கொதி எண்ணெய்க் கடுகு. பின் பாதியில் கட்டின பசுமாடு. துடுக்கு ரஞ்சனியும் அவருமாய்ச் சேர்ந்து அடிக்கும் கொட்டத்தில் இளமை கும்மாளமடித்துக் கொண்டு பறக்கிறது.

அடக்கமான ராஜேஷ். பட்டுச் சேலை ஆசையை மனத்தில் தெரிவிக்கும் இடத்தில் பச்சக் என்று ஒட்டிவிடுகிறார், நம் மனத்தில். சுஜாதாவும் அப்படியே.

வினுச் சக்கரவர்த்தி வில்லன். அண்ணன் இல்லாத நேரத்தில் எட்டு ஊர் ஆர்ப்பாட்டம். அண்ணன் தலையைக் கண்டதும் அப்படியே கப்சிப்.

இந்தப் படத்தின் விசேஷம் அத்தனை பேரும் இயல்பாக இருப்பது.

ஊருணியில் உலாவும் வாத்துகள், மலர்ந்த பூக்கள், ஓடும் வண்டிகள், மேகங்கள் நிறைந்த வானம் என்று காமிரா துப்பறிந்து சிறைப் படுத்தியிருக்கிறது. கண்ணை உறுத்தாத காமிராமேன் செல்வராஜ் பாராட்டுக்குரியவர்.

மூன்று பாடல்கள் கேட்க சுகம். தேவேந்திரன் அறிமுக இசையமைப்பாளராமே. குட். குட். பாடல்களில் அந்த நாள் இளையராஜா தெரிகிறார்.

க்ளைமாக்ஸில் இரவோடு இரவாகத் தீப்பந்தம், கத்தி, ஈட்டி எல்லாம் ஏந்திக் கொண்டு ஜனங்கள் ஓடுகிறார்கள். திக்திக் என்று பார்த்தால் ஒன்றுமே இல்லாமல் கொக்கரக்கோ கூவி அப்புறம் இன்னும் கொஞ்சம் தூரம் வா என்று சண்டி மாட்டை இழுக்கிறாற் போல் இழுத்திருக்கிறார்கள்.

கவுண்டமணி — செந்தில் ஒட்டவில்லை என்றாலுங்கூடக் கலகலப்புக்குக் குறை வில்லை.

டைரக்டரும் புதியவர். இடைவேளைக்கு அப்புறம் கொஞ்சம் தொய்ந்து எழுந்தாலுங் கூட இத்தனை சீராகக் கதையைப் பின்னியிருக்கும் நேர்த்தி பாராட்டுக்குரியது.




வெளியே வரும்போது அந்த நாள் பாரதிராஜா படம் ஒன்றைப் பார்த்துவிட்டு வருகிறாற்போல இருக்கிறதே என்ற எண்ணம் நெஞ்சில் உலவுகிறது — திருப்தியாக!

— ஜெயமன்மதன்

தங்க கவரிங் நகைகளுக்கு
தன்னிகரற்ற பெயர் ''மேரி''

கண்ணைக் கவரும், அழகும், பொலிவும், தரமும் உத்திரவாதமும் உடைய உலகப் புகழ்பெற்ற 22ct ''மெரி'' தங்க கவரிங் நகைகளை வாங்கி அணிந்து மகிழுங்கள்!

நகைகளின் நம்பர்களைக் குறிப்பிட்டு எழுதினால் வி.பி.பி. மூலம் நகைகள் அனுப்பப்படும். வி.பி.பி. சார்ஜ் தனி. இலவச கேட்லாக்கைப் பெற எழுதுங்கள்!



மேரி கோல்டு கவரிங் ஒர்க்ஸ்

தபால்பெட்டி : 1405, 14, ரங்கநாதன் தெரு,
தி. நகர், சென்னை-600017.



பொன்னியின் செல்வன்

அமரர் கல்கி

முதலாவது அத்தியாயம்

ஆடித் திருநாள்

ஆதி அந்தமில்லாத கால வெள்ளத்தில் கற்பனை ஓடத்தில் ஏறி நம்முடன் சிறிது நேரம் பிரயாணம் செய்யுமாறு நேயர்களை அழைக்கிறோம். விநாடிக்கு ஒரு நூற்றாண்டு வீதம் எளிதில் கடந்து *இன்றைக்குத் தொள்ளாயிரத்து எண்பத்திரண்டு ஆண்டுகளுக்கு முந்திய காலத்துக்குச் செல்வோமாக.

தொண்டை நாட்டுக்கும் சோழ நாட்டுக்கும் இடையில் உள்ள திருமுனைப்பாடி நாட்டின் தென்பகுதியில், தில்லைச் சிற்றம்பலத்துக்கு மேற்கே இரண்டு காத தூரத்தில், அலை கடல் போன்ற ஓர் ஏரி விரிந்து பரந்து கிடக்கிறது. அதற்கு வீர நாராயண ஏரி என்று பெயர். அது தெற்கு வடக்கில் ஒன்றரைக் காத நீளமும் கிழக்கு மேற்கில் அரைக் காத அகலமும் உள்ளது. காலப்போக்கில் அதன் பெயர் சிதைந்து இந்நாளில் 'வீராணத்து ஏரி' என்ற பெயரால் வழங்கி வருகிறது.

புது வெள்ளம் வந்து பாய்ந்து ஏரியில் நீர் நிரம்பித் ததும்பி நிற்கும் ஆடி ஆவணி மாதங்களில் வீர நாராயண ஏரியைப் பார்ப்பவர் எவரும் நம்முடைய பழந் தமிழ் நாட்டு முன்னோர்கள் தங்கள் காலத்தில் சாதித்த அரும்பெரும் காரியங்களைக் குறித்துப் பெருமிதமும் பெரு வியப்பும் கொள்ளாமலிருக்க முடியாது. நம் மூதாதையர்கள் தங்களுடைய நலனுக்கும் தங்கள் காலத்திய மக்களின் நலனுக்கும்உரியகாரியங்களைமட்டுமா செய்தார்கள்? தாய்த் திருநாட்டில் தங்களுக்குப் பிற்காலத்தில் வாழையடி வாழையாக வரப் போகும் ஆயிரங் கால சந்ததிகளுக்கும் நன்மை பயக்கும் மாபெரும் செயல்களை நிறைவேற்றிவிட்டுப் போனார்கள் அல்லவா?

ஆடித் திங்கள் பதினெட்டாம் நாள் முன் மாலை நேரத்தில் அலை கடல் போல் விரிந்து பரந்திருந்த வீர நாராயண ஏரிக்கரை மீது ஒரு வாலிப வீரன் குதிரை ஏறிப் பிரயாணம் செய்து கொண்டிருந்தான். அவன் தமிழகத்து வீர சரித்திரத்தில் புகழ் பெற்ற வாணர் குலத்தைச் சேர்ந்தவன். வல்லவரையன் வந்தியத்தேவன் என்பது அவன் பெயர். நெடுந் தூரம் பிரயாணம் செய்து அலுத்துக் களைத்திருந்த அவனுடைய குதிரை மெள்ள மெள்ள நடந்து சென்று

* 1950 இல் எழுதியது.

கொண்டிருந்தது. அதைப் பற்றி அந்த இளம் வீரன் கவலைப்படவில்லை. அகண்டமான அந்த வீர நாராயண ஏரியின் தோற்றம் அவன் உள்ளத்தை அவ்வளவாக வசீகரித்திருந்தது.

ஆடிப் பதினெட்டாம் பெருக்கன்று சோழநாட்டு நதிகளிலெல்லாம் வெள்ளம் இரு கரையும் தொட்டுக் கொண்டு ஓடுவது வழக்கம். அந்த நதிகளிலிருந்து தண்ணீர் பெறும் ஏரிகளும் பூரணமாக நிரம்பிக் கரையின் உச்சியைத் தொட்டுக் கொண்டு அலை



மோதிக் கொண்டிருப்பது வழக்கம். வட காவேரி என்று பக்தர்களாலும் கொள்ளிடம் என்று பொது மக்களாலும் வழங்கப்பட்ட நதியிலிருந்து வடவாற்றின் வழியாகத் தண்ணீர் வந்து வீர நாராயண ஏரியில் பாய்ந்து அதை ஒரு பொங்குங் கடலாக ஆக்கியிருந்தது. அந்த ஏரியின் எழுபத்து நான்கு கணவாய்களின் வழியாகவும் தண்ணீர் குமுகுமுவென்று பாய்ந்து சுற்றுப் பக்கத்தில் நெடுந் தூரத்துக்கு நீர்வளத்தை அளித்துக் கொண்டிருந்தது. அந்த ஏரித் தண்ணீரைக் கொண்டு கண்ணுக்கெட்டிய தூரம் கழனிகளில் உழவும் விரை தெளியும் நடவும் நடந்து கொண்டிருந்தன. உழுது கொண்டிருந்த குடியானவர்களும் நடவு நட்டுக் கொண்டிருந்த குடியானப் பெண்களும் இனிய இசைகளில் குதூகலமாக அங்கங்கே பாடிக் கொண்டிருந்தார்கள். இதையெல்லாம் கேட்டுக் கொண்டு, வந்தியத்தேவன் களைத்திருந்த குதிரையை விரட்டாமல் மெதுவாகவே போய்க்கொண்டிருந்தான். ஏரிக்கரை மீது ஏறியதிலிருந்து அந்த ஏரிக்கு எழுபத்து நாலு கணவாய்கள் உண்டு என்று சொல்லப்படுவது உண்மைதானா என்று அறிந்து கொள்ளும் நோக்கத்துடன் அவன் கணவாய்களை எண்ணிக் கொண்டே வந்தான். ஏறக்குறைய ஒன்றரைக் காத தூரம் அவன் அந்த மாபெரும் ஏரிக்கரையோடு வந்த பிறகு எழுபது கணவாய்களை எண்ணியிருந்தான்.

ஆகா! இது எவ்வளவு பிரம்மாண்டமான ஏரி? எத்தனை நீளம்? எத்தனை அகலம்? தொண்டை நாட்டின் பல்லவப் பேரரசர்களின் காலத்தில் அமைத்த ஏரிகளையெல்லாம் இந்த ஏரிக்கு முன்னால் சிறிய குளங் குட்டைகள் என்றே சொல்லத் தோன்றும் அல்லவா? வட காவேரியில் வீணாகச் சென்று கடலில் விழும் தண்ணீரைப் பயன்படுத்துவதற்காக மதுரை கொண்ட பராந்தகரின் புதல்வர் இளவரசர் இராஜாதித்தர் இந்தக் கடல் போன்ற ஏரியை அமைக்க வேண்டுமென்று எண்ணினாரே? எண்ணி அதைச் செயலிலும் நிறைவேற்றினாரே? அவர் எப்பேர்ப்பட்ட அறிவாளியாயிருந்திருக்க வேண்டும்? வீர பௌருஷத்திலேதான் அவருக்கு இணை வேறு யார்? தக்கோலத்தில் நடந்த போரில் தாமே முன்னணியில் யானை மீது ஏறிச் சென்று போராடினார் அல்லவா? போராடிப் பகைவர்களின் வேலை மார்பிலே தாங்கிக் கொண்டு உயிர் நீத்தார் அல்லவா? அதனால் 'யானை மேல் துஞ்சிய தேவர்' எனப் பெயர் பெற்று வீர சொர்க்கம் அடைந்தார் அல்லவா?

இந்தச் சோழகுலத்து மன்னர்களே அதிசயமானவர்கள்தான்! அவர்கள் வீரத்தில் எப்படியோ அப்படியே அறத்திலும் மிக்கவர்கள். அறத்தில் எப்படியோ அப்படியே தெய்வ பக்தியில் சிறந்தவர்கள். அத்தகைய சோழ குலமன்னர்களுடன் நட்புரிமைகொள்ளும் பேறு தனக்குக் கிடைத்திருப்பது பற்றி நினைக்க நினைக்க வந்தியத் தேவனுடைய தோள்கள் பூரித்தன. மேற்குத் திசையிலிருந்து விர்ரென்று அடித்த காற்றினால் வீர நாராயண ஏரித்தண்ணீர் அலைமோதிக்கொண்டு கரையைத் தாக்கியதுபோல் அவனுடைய உள்ளமும் பெருமிதத்தினால் பொங்கித் ததும்பிற்று.

இப்படியெல்லாம் எண்ணிக் கொண்டு வீர நாராயண ஏரிக் கரையின் தென்கோடிக்கு வந்தியத்தேவன் வந்து சேர்ந்தான். அங்கே வட காவேரியிலிருந்து பிரிந்து வந்த வடவாறு, ஏரியில் வந்து சேரும் காட்சியைக் கண்டான். ஏரிக்கரையிலிருந்து சிறிது தூரம் வரையில் ஏரியின் உட்புறம் படுகையாக அமைந்திருந்தது. வெள்ளம்வந்துமோதும்போது கரைக்குச் சேதம் உண்டாகாமலிருக்கும் பொருட்டு அந்தப் படுகையில் கருவேல மரங்களையும் விளா மரங்களையும் நட்டு வளர்த்திருந்தார்கள். கரையோரமாக நாணல் அடர்த்தியாக வளர்ந்திருந்தது. தென்மேற்குத் திசையிலிருந்து இருபுறமும் மர வரிசையுடன் வடவாற்றின் வெள்ளம் வந்து ஏரியில் கலக்கும் காட்சி சற்றுத் தூரத்திலிருந்து பார்க்கும்போது அழகிய வர்ணக் கோலம் போட்டது போல் காணப்பட்டது.

இந்த மனோகரமான தோற்றத்தின் இனிமையையும் குதூகலத்தையும் அதிகப்படுத்தும்படியான இன்னும் சில காட்சிகளை வந்தியத் தேவன் அங்கே கண்டான்.

அன்று பதினெட்டாம் பெருக்குத் திருநாள் அல்லவா? பக்கத்துக் கிராமங்களிலிருந்து, தந்த நிறத் தென்னங் குருத்துகளால் சப்பரங்கள் கட்டி இழுத்துக் கொண்டு கும்பல் கும்பலாக மக்கள் அங்கே வந்து கொண்டிருந்தார்கள். ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் சில வயோதிகர்களும்கூடப் புதிய ஆடைகள் அணிந்து விதவிதமான அலங்காரங்கள் செய்து கொண்டு வந்திருந்தார்கள். பெண்களின் கூந்தல்களைத் தாழம்பூ, செவந்திப்பூ, மல்லிகை, முல்லை, இருவாட்சி, செண்பகம் முதலிய மலர்கள் கொத்துக் கொத்தாய் அலங்கரித்தன. கூட்டாஞ்சோறும், சித்திரான்னமும் எடுத்துக் கொண்டு பலர் குடும்பங் குடும்பமாக வந்திருந்தார்கள். சிலர் ஏரிக்கரையில்தண்ணீர் ஓரமாக நின்று கொண்டு, சித்திரான்னம் முதலியவற்றைக் கமுகு மட்டைகளில் போட்டுக் கொண்டு உண்டார்கள். இன்னும் சில தைரியசாலிகள் சிறிது தூரம் தண்ணீரில் நடந்து சென்று வடவாற்றங் கரையை அடைந்து அங்கு நின்றபடி சாப்பிட்டார்கள். குழந்தைகள் சிலர் சாப்பிட்ட கமுகு மட்டைகளைக் கணவாய்களின் ஓரமாய் எறிய, அந்த மட்டைகள் கணவாய்களின் வழியாக ஏரிக்கரைக்கு வெளியே விழுந்தடித்து ஓடி வருவதைக் கண்டு கைகொட்டிச் சிரித்தார்கள். ஆடவர்களில் சில வம்புக்காரர்கள் தங்கள் காதலிகளின் கூந்தல்களில் சூடியிருந்த மலர்களை அவர்கள் அறியாமல் எடுத்துக் கணவாய் ஓரத்தில் விட்டு ஏரிக் கரைக்கு மறு பக்கத்தில் அவை ஓடி வருவதைக் கண்டு மகிழ்ந்தார்கள்.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டு சிறிது நேரம் வல்லவரையன் அங்கேயே நின்று கொண்டிருந்தான். அங்கு நின்ற பெண்களில் இனிய குரலையுடைய சிலர் பாடுவதையும் காது கொடுத்துக் கேட்டான். அவர்கள் ஓடப் பாட்டும், வெள்ளப் பாட்டும், கும்மியும், சிந்தும் பாடினார்கள்.


"வடவாறு பொங்கி வருது
வந்து பாருங்கள், பள்ளியரே!
வெள்ளாறு விரைந்து வருது
வேடிக்கை பாருங்கள்,
தோழியரே,
காவேரி புரண்டு வருது
காண வாருங்கள் பாங்கியரே!"

என்பன போன்ற வெள்ளப் பாட்டுக்கள் வந்தியத்தேவன் செவிகளில் இன்ப வெள்ளமாகப் பாய்ந்தன.

வேறு சிலர் சோழ குல மன்னர்களின் வீரப் புகழைக் கூறும் பாடல்களைப் பாடினார்கள். முப்பத்திரண்டு போர்களில் ஈடுபட்டு உடம்பில் தொண்ணூற்றாறு காயங்களை ஆபரணங்களாகப் பூண்டிருந்த விஜயாலய சோழனின் வீரத்தைச் சில பெண்கள் பாடினார்கள். அவனுடைய மகன் ஆதித்த சோழனுடைய வீரத்தைப் போற்றி, அவன் காவேரி நதி உற்பத்தியாகுமிடத்திலிருந்து கடலில் சேரும் இடம் வரையில் அறுபத்து நாலு சிவாலயங்கள் எடுப்பித்ததை ஒரு பெண் அழகிய பாட்டாகப் பாடினாள். ஆதித்தனுடைய மகன் பராந்தக சோழ மகாராஜன் பாண்டியர்களையும் பல்லவர்களையும் சேரர்களையும் வென்று ஈழத்துக்குப் படை அனுப்பி வெற்றிக் கொடி நாட்டிய மெய்க் கீர்த்தியை இன்னொரு பெண் உற்சாகம் ததும்பப் பாடினாள். ஒவ்வொருத்தியும் பாடியபோது, அவளைச் சுற்றிலும் பலர் நின்று கேட்டார்கள். அவ்வப்போது, ''ஆ! ஆ!'' என்று கோஷித்துத் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

குதிரை மீது இருந்தபடியே அவர்களுடைய பாடல்களைக் கேட்டுக் கொண்டிருந்த வந்திய தேவனை ஒரு மூதாட்டி கவனித்தாள். ''தம்பி! வெகு தூரம் வந்தாய் போலிருக்கிறது. களைத்திருக்கிறாய்! குதிரை மீதிருந்து இறங்கி வந்து கொஞ்சம் கூட்டாஞ் சோறு சாப்பிடு!'' என்றாள்.

உடனே, பல இள நங்கைகள் நம் வாலிபப் பிரயாணியைப் பார்த்தார்கள். அவனுடைய தோற்றத்தைக் குறித்துத் தங்களுக்குள் இரகசியமாய்ப் பேசிக் கொண்டு கலகலவென்று சிரித்தார்கள். வந்தியத் தேவனை ஒரு பக்கம் வெட்கமும் இன்னொருபுறம் குதூகலமும் பிடுங்கித் தின்றன. அந்த மூதாட்டி சொற்படி இறங்கிச் சென்று அவள் தரும் உணவைச் சாப்பிடலாமா என்று ஒருகணம் சிந்தித்தான். அப்படிச் சென்றால் அங்கே நின்ற இள மங்கைமார்கள் பலரும் அவனைச் சூழ்ந்து கொண்டு பரிகசித்துச் சிரிப்பார்கள் என்பது நிச்சயம். அதனால் என்ன? அத்தனை அழகிய பெண்களை ஒரே இடத்தில் காண்பது சுலபமான காரியமா? அவர்கள் தன்னைப் பரிகசித்துச் சிரித்தாலும், அந்த ஒலி தேவ



கானமாகவே இருக்கும். வந்தியத்தேவனின் யௌவனக் கண்களுக்கு அந்த ஏரிக்கரையில் நின்ற நங்கைகள் எல்லாரும் அரம்பைகளாகவும் மேனகைகளாகவுமே தோன்றினார்கள்!

ஆனால் அதே சமயத்தில் தென் மேற்குத் திசையில் வடவாற்றின் நீரோட்டத்தில் தோன்றிய ஒரு காட்சி அவனைச் சிறிது தயங்கச் செய்தது. வெள்ளைப் பாய்கள் விரிக்கப்பட்ட ஏழெட்டுப் பெரிய ஓடங்கள், வெண் சிறகுகளை விரித்துக் கொண்டு நீரில் மிதந்து வரும் அன்னப் பட்சிகளைப் போல், மேலக் காற்றினால் உந்தப்பட்டு விரைந்து வந்து கொண்டிருந்தன.


ஏரிக்கரையில் பலவகைக் களியாட்டங்களில் ஈடுபட்டிருந்த ஜனங்கள் அத்தனை பேரும் அந்தப் படகுகள் வரும் திசையையே ஆவலுடன் பார்க்கத் தொடங்கினார்கள்.

அந்தப் படகுகளிலே ஒரு படகு எல்லாவற்றுக்கும் முன்னதாக விரைந்து வந்து ஏரிக்கரை வடக்கு நோக்கித் திரும்பும் மூலையை அடைந்தது. அந்தப் படகில் கூரிய பிரகாசமான வேல்களை ஏந்திய ஆஜானுபாகுவான வீரர்கள் பலர் இருந்தார்கள்.

அவர்களில் சிலர் ஏரிக் கரையில் குதித்திறங்கி அங்கே இருந்த ஜனங்களைப் பார்த்துப் "போங்கள்! போங்கள்!" என்று விரட்டினார்கள். அவர்கள் அதிகமாக விரட்டுவதற்கு இடம் வையாமல் ஜனங்களும் அவரவர்களுடைய பாத்திரங்கள் முதலியவற்றை எடுத்துக் கொண்டு விரைந்து கரையேறத் தொடங்கினார்கள்.

வந்தியத் தேவனுக்கு இது ஒன்றும் விளங்கவில்லை. இந்த வீரர்கள் யார்? பின்னால் வரும் பாய் விரித்த படகுகளில் யார் வருகிறார்கள்? எங்கிருந்து வருகிறார்கள்? ஒருவேளை அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களாயிருப்பார்களோ?

ஏரிக் கரையில் கையிலே கோல் பிடித்து நின்ற பெரியவர் ஒருவரை வல்லவரையன் அணுகினான். "ஐயா! இந்தவீரர்கள்யாரைச்சேர்ந்தவர்கள்? அதோ பின்னால் வரும் அன்னக்



கூட்டம் போன்ற ஓடங்கள் யாருடையவை? எதற்காக இவ்வீரர்கள் மக்களை விரட்டுகிறார்கள்? மக்களும் எதற்காக விரைகிறார்கள்?'' என்று கேள்விகளை அடுக்கினான்.

''தம்பி, உனக்குத் தெரியவில்லையா, என்ன? அதோ அந்தப் படகுகளின் நடுப்படகில் ஒரு கொடி பறக்கிறதே! அதில் என்ன எழுதியிருக்கிறது பார்!'' என்றார் பெரியவர்.

''பனை மரம் போல் தோன்றுகிறது.''

''பனை மரந்தான்! பனை மரக் கொடி பழுவேட்டரையர் கொடி என்று உனக்குத் தெரியாதா?''

''மகாவீரர் பழுவேட்டரையரா வருகிறார்?'' என்று வந்தியத் தேவன் திடுக்கிட்ட குரலில் கேட்டான்.

''அப்படித்தான் இருக்க வேண்டும். பனை மரக் கொடியை உயர்த்திக் கொண்டு வேறு யார் வர முடியும்?'' என்றார் பெரியவர்.

வல்லவரையனுடைய கண்கள் அளவிலா வியப்பினால் விரிந்து படகுகள் வந்த திசையை நோக்கின. பழுவேட்டரையரைப் பற்றி வல்லவரையன் எவ்வளவோ கேள்விப்பட்டிருந்தான். யார்தான் கேள்விப்படாமலிருக்க முடியும்? தெற்கே ஈழநாட்டிலிருந்து வடக்கே கலிங்க நாடு வரையில் அண்ணன் தம்பிகளான பெரிய பழுவேட்டரையர், சின்னப் பழுவேட்டரையர் என்பவர்களுடைய பெயர்கள் பிரசித்தமாயிருந்தன. உறையூருக்குப் பக்கத்தில் வட காவேரியின் வடகரையில் உள்ள பழுவூர் அவர்களுடைய நகரம். விஜயாலய சோழன் காலத்திலிருந்து பழுவேட்டரையர் குலம் வீரப் புகழ் பெற்றிருந்தது. அக்குடும்பத்தார் சோழ மன்னர் குடும்பத்துடன் கொள்வினை—கொடுப்பினை செய்து வந்தனர். இது காரணமாகவும், அவர்களுடைய குலத்தொன்மை, வீரப் புகழ் இவை காரணமாகவும் பழுவேட்டரையர் குலம் அரச குலத்தின் சிறப்புக்கள் எல்லாம் பெற்றிருந்தது. தனியாகக் கொடி போட்டுக் கொள்ளும் உரிமையும் அக்குலத்துக்கு உண்டு.

இப்போதுள்ள பழுவேட்டரையர் இருவரில் மூத்தவர் இருபத்து நான்கு போர்களில் ஈடுபட்டவர். அவருடைய காலத்தில் அவருக்கு இணையான வீரர் சோழநாட்டில் யாருமில்லையென்று புகழ் பெற்றவர். இப்போது பிராயம் ஐம்பதுக்கு மேல் ஆகிவிட்டபடியால் அவர் போர்க்களங்களுக்கு நேரில் செல்வதில்லை. ஆனால் சோழ நாட்டு அரசாங்கத்தில் மிக உன்னதமான பல பதவிகளை வகித்து வந்தார். அவர் சோழ சாம்ராஜ்யத்தின் தனாதிகாரி; தான்யாதிகாரி. தனபண்டாரமும் தான்ய பண்டாரமும் அவருடைய அதிகாரத்தில் இருந்தன. அரசியலின் தேவைக்குத் தகுந்தபடி இறை விதித்து வசூலிக்கும் அதிகாரம் அவரிடம் இருந்தது. எந்தச் சிற்றரசரையும் கோட்டத் தலைவரையும், பெரிய குடித்தனக்காரரையும் ''இவ்வாண்டு இவ்வளவு இறை தர வேண்டும்!'' என்று கட்டளையிட்டு வசூலிக்கும் உரிமை அவருக்கு இருந்தது. ஆகவே, சுந்தர சோழ மகாராஜாவுக்கு அடுத்தபடியாகச் சோழ சாம்ராஜ்யத்தில் இப்போது வலிமை மிக்கவர் அவர்தான்.

அத்தகைய மகா வீரரும் அளவிலா வலிமையும் அதிகாரமும் படைத்தவருமான, பெரிய பழுவேட்டரையரைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் வந்தியத் தேவனுடைய உள்ளத்தில் பொங்கியது. ஆனால் அதே சமயத்தில் காஞ்சி நகரின் புதிய பொன் மாளிகையில் இளவரசர் ஆதித்த கரிகாலர் தன்னிடம் அந்தரங்கமாகச் சொன்ன செய்தி அவனுக்கு நினைவு வந்தது.

''வந்தியத் தேவா! நீ சுத்த வீரன் என்பதை நன்கு அறிவேன். அத்துடன் நீ நல்ல அறிவாளி என்று நம்பி இந்த மாபெரும் பொறுப்பை உன்னிடம் ஒப்புவிக்கிறேன். நான் கொடுத்த இரு ஓலைகளில் ஒன்றை என் தந்தை மகாராஜாவிடமும் இன்னொன்றை என் சகோதரி இளைய பிராட்டியிடமும் ஒப்புவிக்க வேண்டும். தஞ்சையில் இராஜ்யத்தின் பெரிய பெரிய அதிகாரிகளைப் பற்றிக் கூட ஏதேதோ கேள்விப்படுகிறேன். ஆகையால் நான் அனுப்பும் செய்தி யாருக்கும் தெரியக் கூடாது. எவ்வளவு முக்கியமானவராயிருந்தாலும் நீ என்னிடமிருந்து ஓலை கொண்டு போவது தெரியக் கூடாது.

வழியில் யாருடனும் சண்டை பிடிக்கக் கூடாது. நீயாக வலுச் சண்டைக்குப் போகாமலிருந்தால் மட்டும் போதாது. மற்றவர்கள் வலுச் சண்டைக்கு இழுத்தாலும் நீ அகப்பட்டுக் கொள்ளக் கூடாது. உன்னுடைய வீரத்தை நான் நன்கறிவேன். எத்தனையோ தடவை நிரூபித்திருக்கிறாய். ஆகையால் வலிய வரும் சண்டையிலிருந்து விலகிக் கொண்டாலும் கௌரவக் குறைவு ஒன்றும் உனக்கு ஏற்பட்டுவிடாது. முக்கியமாக, பழுவேட்டரையர்களிடமும் என் சிறிய தந்தை மதுராந்தகரிடமும் நீ மிக்க ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டும். அவர்களுக்கு நீ இன்னான் என்று கூடத் தெரியக் கூடாது! நீ எதற்காகப் போகிறாய் என்று அவர்களுக்குக் கண்டிப்பாய்த் தெரியக் கூடாது!''

சோழ சாம்ராஜ்யத்தின் பட்டத்துக்குரிய இளவரசரும் வடதிசைச் சைன்யத்தின் மகாதண்ட நாயகருமான ஆதித்த கரிகாலர் இவ்விதம் சொல்லியிருந்தார். மேலும் வந்தியத் தேவன் நடந்து கொள்ள வேண்டிய விதங்களைப் பற்றியும் படித்துப் படித்துக் கூறியிருந்தார். இவையெல்லாம் நினைவு வரவே, பழுவேட்டரையரைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலை வல்லவரையன் அடக்கிக் கொண்டான். குதிரையைத் தட்டிவிட்டு வேகமாகச் செல்ல முயன்றான். என்ன தட்டிவிட்டாலும் களைப்புற்றிருந்த அந்தக் குதிரை மெதுவாகவே சென்றது. இன்று இரவு கடம்பூர் சம்புவராயர் மாளிகையில் தங்கிவிட்டு நாளைக் காலையில் புறப்படும்போது வேறு நல்ல குதிரை சம்பாதித்துக் கொண்டே கிளம்ப வேண்டும் என்று மனத்திற்குள் தீர்மானித்துக் கொண்டான்.

இரண்டாம் அத்தியாயம்

ஆழ்வார்க்கடியான் நம்பி

ஏரிக்கரையிலிருந்து கீழிறங்கித் தென்திசை சென்ற பாதையில் குதிரையைச் செலுத்தியபோது வந்தியத் தேவனுடைய உள்ளம் ஏரி அலைகளின் மீது நடனமாடிய படகைப் போல் ஆனந்தக் கூத்தாடியது. உள்ளத்தின் உள்ளே மறைந்து கிடந்த குதூகலம் பொங்கித் ததும்பியது. வாழ்க்கையில் வேறு யாரும் காணாத அதிசய அநுபவங்களைத் தான் அடையும் காலம் நெருங்கிவிட்டதென்று அவனுடைய உள்ளுணர்ச்சி சொல்லியது. சோழ நாட்டை அணுகும்போதே இவ்வளவு ஆனந்த கோலாகலமாயிருக்கிறதே? கொள்ளிடத்தைத் தாண்டிவிட்ட பின்னர் அச்சோழ நாட்டின் நீர் வளமும் நிலவளமும் எப்படியிருக்கும்? அந்நாட்டில் வாழும் மக்களும் மங்கையரும் எப்படியிருப்பார்கள்? எத்தனை நதிகள்? எத்தனை குளங்கள்? எத்தனை தெளி நீர் ஓடைகள்? கவிகளிலும் காவியங்களிலும் பாடப் பெற்ற பொன்னி நதியின் காட்சி எப்படியிருக்கும்? அதன் கரைகளிலே பூத்துக் குலுங்கும் புன்னை மரங்களும் கொன்னை மரங்களும் கடம்ப மரங்களும் எத்தகைய மனோகரமான காட்சியாயிருக்கும்? நீரோடைகளில் குவளைகளும் குமுதங்களும் கண் காட்டி அழைப்பதும் செந்தாமரைகள் முகமலர்ந்து வரவேற்பதும் எத்தகைய இனிய காட்சியாயிருக்கும்? காவேரியின் இரு கரைகளிலும் சிவபக்திச் செல்வர்களான சோழ பரம்பரையினர் எடுப்பித்துள்ள அற்புத வேலைப்பாடமைந்த ஆலயங்கள் எவ்வளவு அழகாயிருக்கும்?

ஆகா! பழையாறை நகர்! சோழ மன்னர்களின் தலைநகர்! பூம்புகாரையும் உறையூரையும் சிறிய குக்கிராமங்களாகச் செய்துவிட்ட பழையாறை! அந்நகரிலுள்ள மாட மாளிகைகளும் கூட கோபுரங்களும் படை வீடுகளும் கடை வீதிகளும் சிவாலயக் கற்றளிகளும் திருமாலுக்குரிய விண்ணகரங்களும் எப்படியிருக்கும்? அந்த ஆலயங்

களில் இசை வல்லவர்கள் இனிய குரலில் தேவாரப் பாடல்களையும் திரு வாய்மொழிப் பாசுரங்களையும் பாடக் கேட்டோர் பரவசமடைவார்கள் என்று வந்தியத் தேவன் கேள்வியுற்றிருந்தான். அவற்றையெல்லாம் கேட்கும் பேறு தனக்கு விரைவில் கிடைக்கப் போகிறது. இது மட்டுந்தானா? சில நாளைக்கு முன்பு வரையில் தான் கனவிலும் கருதாத சில பேறுகளும் கிட்டப் போகின்றன. வீரத்தில் வேலனையும் அழகில் மன்மதனையும் நிகர்த்த பராந்தக சுந்தர சோழ மகாராஜாவை நேருக்கு நேர் காணப் போகிறான். அவ்வளவுதானா? அவருடைய செல்வப் புதல்வி, ஒப்புயர்வில்லாத நாரீமணி, குந்தவைப் பிராட்டியையும் காணப் போகிறான்!



ஆனால் வழியில் தடை எதுவும் நேராமல் இருக்க வேண்டும். எந்தத் தடை நேர்ந்தால்தான் என்ன? கையிலே வேல் இருக்கிறது. இடையில் தொங்கிய உறையிலே வாள் இருக்கிறது. மார்பிலே கவசம் இருக்கிறது. நெஞ்சிலே உரமிருக்கிறது. ஆனால் மகாதண்ட நாயகர், இளவரசர் ஆதித்தர், ஒரு பெரிய முட்டுக் கட்டை போட்டிருக்கிறார்; ஒப்புவித்த காரியத்தைநிறைவேற்றுவதற்குமுன்பு யாரிடமும் சண்டை பிடிக்கக் கூடாதென்று. அந்தக் கட்டளையை நிறைவேற்றுவதுதான் மிகவும் கடினமாயிருக்கிறது. ஏதோ இவ்வளவு தூரமும் பிரயாணம் செய்தபோது நிறைவேற்றியாகிவிட்டது. இன்னும் இரண்டு நாளையப் பிரயாணம்தானே மிச்சமிருக்கிறது? அதுவரை பொறுமையுடன் இருந்தே தீர வேண்டும்.

ஆதவன் மறைவதற்குள்ளே கடம்பூரை அடைய வேண்டும் என்ற கருத்துடன் சென்று கொண்டிருந்த வந்தியத்தேவன் சிறிது நேரத்துக்கெல்லாம் வீர நாராயணபுர விண்ணகரக் கோயிலை நெருங்கினான்.

அன்று ஆடித் திருமஞ்சனத் திருவிழாவும் சேர்ந்திருந்தபடியால் கோயிலைச் சுற்றியுள்ள மரத் தோப்புகளில் பெரும் ஜனக் கூட்டம் சேர்ந்திருந்தது.

பலாச் சுளைகளும் வாழைப் பழங்களும் கரும்புக் கழிகளும் பலவகைத் தின்பண்டங்களும் விற்பவர்கள் ஆங்காங்கே கடை வைத்திருந்தார்கள். பெண்கள் தலையில் சூடிக் கொள்ளும் மலர்களையும், தேவ பூஜைக்குரிய தாமரை மொட்டுக்கள் முதலியவற்றையும் சிலர் விற்றுக் கொண்டிருந்தார்கள். தேங்காய், இளநீர், அகில், சந்தனம், வெற்றிலை, வெல்லம், அவல், பொரி முதலியவற்றைச் சிலர் குப்பல்

குப்பலாகப் போட்டுக் கொண்டிருந்தார்கள். ஆங்காங்கே வேடிக்கை விநோதங்கள் நடந்து கொண்டிருந்தன. ஜோசியர்கள், ரேகை சாஸ்திரத்தில் வல்லவர்கள், குறிசொல்லுகிறவர்கள், விஷக் கடிக்கு மந்திரிப்பவர்கள், இவர்களுக்கும் அங்கே குறைவில்லை. இதையெல்லாம் பார்த்துக் கொண்டு சென்ற வந்தியத் தேவன் ஓரிடத்தில் ஒரு பெருங்கூட்டம் நின்று கொண்டிருப்பதையும் அந்தக் கூட்டத்துக்குள்ளேயிருந்து யாரோ சிலர் உரத்த குரலில் வாக்குவாதம் செய்யும் சத்தம் வருவதையும் கவனித்தான். என்ன விவாதம் நடைபெறுகிறது என்பதை அறிந்து கொள்ள அவனுக்கு ஆவல் பீறிக் கொண்டு எழுந்தது. அந்த ஆவலை அடக்கிக் கொள்ள அவனால் முடியவில்லை. கூட்டத்துக்கு வெளியில் சாலை ஓரமாகக் குதிரையை நிறுத்தி விட்டுக் கீழே இறங்கினான். குதிரையை அங்கேயே நிற்கும்படி தட்டிக் கொடுத்துச் சமிக்ஞையால் சொல்லி விட்டுக் கூட்டத்தைப் பிளந்து கொண்டு உள்ளே போனான்.

அங்கே விவாதத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் மூன்றே பேர்தான் என்பதைப் பார்க்க அவனுக்கு வியப்பு ஏற்பட்டது. ஆனால் விவாதத்தில் ஈடுபட்டவர்கள் மூன்றே பேர்தான் என்றாலும், கூட்டத்திலிருந்தவர்கள் பலர் அவ்வப்போது அவரவர்களுக்கு உகந்த வாதக்காரரின் கட்சியை ஆதரித்துக் கோஷங்களைக் கிளப்பினார்கள். அதனாலேதான் அவ்வளவு சத்தம் எழுந்தது என்பதை வந்தியத் தேவன் தெரிந்து கொண்டான். பிறகு என்ன விவாதம் நடைபெறுகிறது என்பதைக் கவனித்தான்.

வாதமிட்ட மூவரில் ஒருவர் உடம்பெல்லாம் ஊர்த்வபுண்டரமாகச் சந்தனம் அணிந்து தலையில் முன் குடுமி வைத்திருந்த வைஷ்ணவ பக்த சிகாமணி. கையில் அவர் ஒரு குறுந்தடியும் வைத்திருந்தார். கட்டையாயும் குட்டையாயும் வைரம் பாய்ந்த திருமேனியுடன் விளங்கினார்.

இன்னொருவர் தமது மேனியெல்லாம் பட்டை பட்டையாய்த் திருநீறு அணிந்திருந்த சிவ பக்தர்.

மூன்றாவது மனிதர் காவி வஸ்திரம் தரித்துத் தலையையும் முண்டனம் செய்து கொண்டிருந்தார். அவர் வைஷ்ணவரும் அல்ல, சைவரும் அல்ல, இரண்டையும் கடந்தவரான அத்வைத வேதாந்தி என்று தெரிய வந்தது.

சைவர் சொன்னார்: ''ஓ ஆழ்வார்க்கடியான் நம்பியே! இதற்கு விடை சொல்லும்! சிவபெருமானுடைய முடியைக் காண்பதற்குப் பிரம்மாவும், அடியைக் காண்பதற்குத் திருமாலும் முயன்றார்களா இல்லையா? முடியும் அடியும் காணாமல் இருவரும் வந்து சிவபெருமானுடைய பாதங்களில் சரணாகதி அடைந்தார்களா இல்லையா? அப்படியிருக்கச் சிவபெருமானைக் காட்டிலும் உங்கள் திருமால் எப்படிப் பெரிய தெய்வம் ஆவார்?''

இதைக் கேட்ட ஆழ்வார்க்கடியான் நம்பி தன் கைத்தடியை ஆட்டிக் கொண்டு, ''சரிதான் காணும்! வீர சைவ பாத தூளி பட்டரே! நிறுத்தும் உம் பேச்சை! இலங்கை அரசனாகிய தசகண்ட ராவணனுக்கு உம்முடைய சிவன் வரங்கள் கொடுத்தாரே? அந்த வரங்கள் எல்லாம் எங்கள் திருமாலின் அவதாரமாகிய இராமபிரானின் கோதண்டத்தின் முன்னால் தவிடு பொடியாகப் போகவில்லையா? அப்படியிருக்க, எங்கள் திருமாலைக் காட்டிலும் உங்கள் சிவன் எப்படிப் பெரிய தெய்வமாவார்?'' என்று கேட்.



டான்.


இந்தச் சமயத்தில் காவி வஸ்திரம் அணிந்த அத்வைத சந்நியாசி தலையிட்டுக் கூறியதாவது: ''நீங்கள் இருவரும் எதற்காக வீணில் வாதம் இடுகிறீர்கள்? சிவன் பெரிய தெய்வமா, விஷ்ணு பெரிய தெய்வமா என்று எத்தனை நேரம் நீங்கள் வாதித்தாலும் விவகாரம் தீராது. இந்தக் கேள்விக்குப் பதில் வேதாந்தம் சொல்கிறது. நீங்கள் கீழான பக்தி மார்க்கத்தில் இருக்கிற வரையில்தான் சிவன்—விஷ்ணு என்று சண்டையிடுவீர்கள். பக்திக்கு மேலே ஞானமார்க்கம் இருக்கிறது. ஞானத்துக்கு மேலே ஞாஸம் என்று ஒன்று இருக்கிறது. அந்த நிலையை அடைந்துவிட்டால் சிவனும் இல்லை, விஷ்ணுவும் இல்லை. சர்வம் பிரம்மமயம் ஜகத். ஸ்ரீ சங்கர பகவத் பாதாச்சாரியர் பிரம்ம சூத்திர பாஷ்யத்தில் என்ன சொல்லியிருக்கிறார் என்றால்....''



இச்சமயம் ஆழ்வார்க்கடியான் நம்பி குறுக்கிட்டு, ''சரிதான் காணும். நிறுத்தும்! உம்முடைய சங்கராச்சாரியார் அவ்வளவு உபநிஷதங்களுக்கும் பகவத்கீதைக்கும் பிரம்மசூத்திரத்துக்கும் பாஷ்யம் எழுதிவிட்டுக் கடைசியில் என்ன சொன்னார் தெரியுமா?

'பஜகோவிந்தம் பஜகோவிந்தம்
பஜகோவிந்தம் மூடமதே!'

என்று மூன்று வாட்டி சொன்னார்.



உம்மைப் போன்ற மௌடீகர்களைப் பார்த்துத்தான் 'மூடமதே' என்று சங்கராச்சாரியார் சொன்னார்!'' எனக் கூறியதும், அந்தக் கூட்டத்தில், 'ஆஹா' காரமும், பரிகாசச் சிரிப்பும் கரகோஷமும் கலந்து எழுந்தன.

ஆனால் சந்நியாசி சும்மா இருக்கவில்லை. ''அடே! முன்குடுமி நம்பி! நான் 'மூடமதி' என்று நீ சொன்னது சரிதான். ஏனென்றால், உன் கையில் வெறுந்தடியை வைத்துக் கொண்டிருக்கும் நீ வெறுந்தடியனாகிறாய். உன்னைப் போன்ற வெறுந்தடியனோடு பேச வந்தது என்னுடைய மூடமதியினால்தானே?'' என்றார்.

''ஓய், சுவாமிகளே! என் கையில் வைத்திருப்பது வெறுந்தடியல்ல! வேண்டிய சமயத்தில் உம்முடைய மொட்டை மண்டையை உடைக்கும் சக்தி உடையதுங்காணும்!'' என்று கூறிக் கொண்டே ஆழ்வார்க்கடியான் கையிலிருந்த குறுந்தடியை ஓங்கினான். அதைப் பார்த்த அவன் கட்சியார் 'ஓஹோ!' என்று ஆர்ப்பரித்தனர்.

அப்போது அத்வைத சுவாமிகள், ''அப்பனே! நிறுத்திக் கொள்! தடி உன்னுடைய கையிலேயே இருக்கட்டும். அப்படியே நீ உன் கைத்தடியால் என்னை அடித்தாலும் அதற்காக நான் கோபங் கொள்ள மாட்டேன். உன்னுடன் சண்டைக்கு வரவும் மாட்டேன். அடிப்பதும் பிரம்மம்; அடிபடுவதும் பிரம்மம். என்னை நீ அடித்தால் உன்னையே அடித்துக் கொள்கிறவனாவாய்!'' என்றார்.



ஆழ்வார்க்கடியான் நம்பி, ''இதோ! எல்லோரும் பாருங்கள்! பிரம்மத்தைப் பரப்பிரம்மம் திருசாத்துச் சாத்தப் போகிறது. என்னை நானே தடி கொண்டு தாக்கப் போகிறேன்!'' என்று தடியை சுழற்றிக் கொண்டு சுவாமிகளை நெருங்கினான்.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தவல்லவரையனுக்குஒரு கணம் அந்த முன்குடுமி நம்பியின் கைத்தடியை வழிமறித்துப் பிடுங்கிக் கொண்டு, அவனை அந்தத் தடியினால் நாலு திருச்சாத்து சாத்தலாமா என்று தோன்றியது.

ஆனால் திடீரென்று சுவாமியாரைக் காணோம்! கூட்டத்தில் புகுந்து அவர் மறைந்து விட்டார். அதைப் பார்த்துக் கொண்டிருந்த வைஷ்ணவ கோஷ்டியார் மேலும் ஆர்ப்பரித்தார்கள்.

ஆழ்வார்க்கடியான் வீர சைவருடைய பக்கமாகத் திரும்பி, ''ஓய், பாததூளி பட்டரே! நீர் என்ன சொல்லுகிறீர்? மேலும் வாதம் செய்ய விரும்புகிறீரா? அல்லது சுவாமியாரைப் போல் நீரும் ஓட்டமெடுக்கிறீரா?'' என்றான்.

''நானா? ஒருநாளும் நான் அந்த வாய்வேதாந்தியைப் போல் ஓட்டமெடுக்க மாட்டேன். என்னையும் உம்முடைய கண்ணன் என்று நினைத்தீரோ? கோபியர் வீட்டில் வெண்ணெய் திருடி உண்டு மத்தால் அடிபட்டவன்தானே உம்முடைய கண்ணன்...!'' என்று பாத தூளி பட்டர் சொல்வதற்குள், ஆழ்வார்க்கடியான் குறுக்கிட்டான். ''ஏன் காணும்? உம்முடைய பரமசிவன் பிட்டுக்கு மண் சுமந்து முதுகில் அடிபட்டதை மறந்துவிட்டீரோ?'' என்று கேட்டுக் கொண்டுகைத்தடியைவீசிக்கொண்டு வீரசைவர் அருகில் நெருங்கினான்.

ஆழ்வார்க்கடியான் நல்ல குண்டாதி குண்டன். வீரசைவராகிய பாத தூளி பட்டரோ சற்று மெலிந்த மனிதர்.

மேற்கூறிய இருவரையும் விவாதத்தில் உற்சாகப்படுத்தி வந்தவர்கள், தாங்களும் கைகலக்க ஆயத்தமாகி ஆரவாரம் செய்தார்கள்.

இந்த மூடச் சண்டையைத் தடுக்க வேண்டும் என்ற எண்ணம் வல்லவரையன் மனத்தில் உண்டாயிற்று.

அவன் நின்ற இடத்திலிருந்து சற்று முன்னால் வந்து, "எதற்காக ஐயா நீங்கள் சண்டை போடுகிறீர்கள்? வேறு வேலை ஒன்றும் உங்களுக்கு இல்லையா? சண்டைக்குத் தினவு எடுத்தால் ஈழநாட்டுக்குப் போவது தானே? அங்கே பெரும் போர் நடந்து கொண்டிருக்கிறதே?" என்றான்.

நம்பி சட்டென்று அவனைத் திரும்பிப் பார்த்து, "இவன் யாரடா நியாயம் சொல்ல வந்தவன்!" என்றான்.

கூட்டத்திலே இருந்தவர்களில் சிலருக்கு, வந்தியத் தேவனுடைய வீரத் தோற்றமும் அவனுடைய அழகிய முக விலாசமும் பிடித்திருந்தன.

"தம்பி! நீ சொல்லு! இந்தச் சண்டைக்காரர்களுக்கு நியாயத்தை எடுத்துச் சொல்லு! உனக்குப் பக்கபலமாக நாங்கள் இருக்கிறோம்!" என்று அவர்கள் சொன்னார்கள்.

"எனக்குத் தெரிந்த நியாயத்தைச் சொல்கிறேன். சிவபெருமானும் நாராயணமூர்த்தியும் தங்களுக்குள் சண்டை போட்டுக் கொள்வதாகத் தெரியவில்லை. அவர்கள் சிநேகமாகவும் சுமுகமாகவும் இருந்து வருகிறார்கள். அப்படியிருக்க, இந்த நம்பியும் பட்டரும் எதற்காகச் சண்டை போட்டுக் கொள்ள வேண்டும்?" என்று வல்லவரையன் கூறியதைக் கேட்டு அக்கூட்டத்தில் பலரும் நகைத்தார்கள்.

அப்போது வீர சைவ பட்டர், "இந்தப் பிள்ளை அறிவாளியாகவே தோன்றுகிறான். ஆனால் வேடிக்கைப் பேச்சினால் மட்டும் விவாதம் தீர்ந்து விடுமா? சிவபெருமான் திருமாலை விடப் பெரிய தெய்வமா, இல்லையா என்ற கேள்விக்கு இவன் விடை சொல்லட்டும்" என்றார்.

"சிவனும் பெரிய தெய்வந்தான்; திருமாலும் பெரிய தெய்வந்தான். இருவரும் சமமான தெய்வங்கள். யாரை வேண்டுமானாலும் தொழுது கொள்ளுங்கள். சண்டை எதற்கு?" என்றான் வல்லவரையன்.

"அது எப்படிச் சொல்லலாம்? சிவனும் விஷ்ணுவும் சமமான தெய்வங்கள் என்று சொல்வதற்கு ஆதாரம் என்ன?" என்று ஆழ்வார்க்கடியான் அதட்டிக் கேட்டான்.

"ஆதாரமா? இதோ சொல்கிறேன்! நேற்று மாலை வைகுண்டத்துக்குப் போயிருந்தேன். அதே சமயத்தில் பரமசிவனும் அங்கே வந்திருந்தார். இருவரும் சம ஆசனத்தில் அமர்ந்திருந்தார்கள். அவர்களுடைய உயரம் ஒன்றாகவே இருந்தது. ஆயினும் ஐயத்துக்கு இடமின்றி என் கையினால் முழம் போட்டு இருவர் உயரத்தையும் அளந்து பார்த்தேன்...."

"அட பிள்ளாய்! பரிகாசமா செய்கிறாய்?" என்று ஆழ்வார்க்கடியான் கர்ஜனை செய்தான்.

கூட்டத்தினர், "சொல்லு, தம்பி! சொல்லு!" என்று ஆர்ப்பரித்தார்கள்.

"அளந்து பார்த்ததில் இருவரும் சமமான உயரமே இருந்தார்கள். அதோடு விடாமல் சிவனையும் திருமாலையும் நேரிலேயே கேட்டுவிட்டேன். அவர்கள் என்ன சொன்னார்கள் தெரியுமா? 'அரியும் சிவனும் ஒண்ணு, அறியாதவர் வாயிலே மண்ணு' என்று சொன்னார்கள். அவ்விதம் சொல்லி, தங்களைப் பற்றிச் சண்டை போடுகிறவர்களின் வாயிலே போடுவதற்கு இந்தப் பிடி மண்ணையும் கொடுத்தார்கள்!" என்று கூறிய வல்லவரையன், மூடியிருந்த தனது வலக் கையைத் திறந்து காட்டினான். அதற்குள்ளே ஒரு பிடி மண் இருந்தது. அதை வீசி உதறினான்.

கூட்டத்திலிருந்தவர்களில் பலர் அப்போது பெரும் உற்சாகங் கொண்டு தலைக்குத் தலை தரையிலிருந்து ஒரு பிடி மண் எடுத்து, நம்பியின் தலையிலும், பட்டர் தலையிலும் வீசி எறிய ஆரம்பித்தார்கள். இந்தத் துராக்ரகச் செயலைச் சிலர் தடுக்க முயன்றார்கள்.

"அடே! தூர்த்தர்களா, நாஸ்திகர்களா!" என்று சொல்லிக் கொண்டு ஆழ்வார்க்கடியான் தன் கைத்தடியைச் சுழற்றிக் கொண்டு கூட்டத்திற்குள் பிரவேசித்தான்.

ஒரு பெரிய கலவரமும் அடிதடி சண்டையும் அப்போது அங்கே நிகழும் போலிருந்தன.

நல்லவேளையாக, அந்தச் சமயத்தில்

சற்றுத் தூரத்தில் ஒரு பெரிய சலசலப்பு ஏற்பட்டது.

"சூராதி சூரர், வீரப்பிரதாபர், மாற பாண்டியன் படையை வீறு கொண்டு தாக்கி வேரோடு அறுத்த வெற்றி வேல் உடையார், இருபத்து நாலு போர்களில் சண்டையிட்டு அறுபத்து நான்கு விழுப் புண்களைப் பெற்ற திருமேனியர், சோழ நாட்டுத் தனாதிகாரி, தானிய பண்டார நாயகர், இறை விதிக்கும் தேவர், பெரிய பழுவேட்டரையர் விஜயம் செய்கிறார்! பராக்! பராக்! வழிவிடுங்கள்!" என்று இடி முழக்கக் குரலில் கட்டியம் கூறுதல் கேட்டது.

இவ்வாறு கட்டியம் கூறியவர்கள் முதலில் வந்தார்கள். பிறகு முரசு அடிப்பவர்கள் வந்தார்கள். அவர்களுக்குப் பின்னால் பனைமரக் கொடி தாங்குவோர் வந்தார்கள். பின்னர், கையில் வேல் பிடித்த வீரர்கள் சிலர் கம்பீரமாக நடந்து வந்தார்கள்.

இவர்களுக்குப் பின்னால் வந்த அலங்கரித்த யானையின் மீது ஆஜானுபாகுவான கரிய திருமேனியர் ஒருவர் வீற்றிருந்தார். மத்தகஜத்தின் மேல் அந்த வீரர் வீற்றிருந்த காட்சி ஒரு மாமலைச் சிகரத்தின் மீது கரிய கொண்டல் ஒன்று தங்கியதுபோல் இருந்தது.

கூட்டத்தில் இருந்தவர்கள் அத்தனை பேரும் சாலையின் இருபுறத்திலும் வந்துநின்றதுபோல்வல்லவரையனும் வந்து நின்று பார்த்தான். யானை மீது இருந்தவர்தான் பழுவேட்டரையர் என்பதை ஊகித்துக் கொண்டான்.

யானைக்குப் பின்னால் பட்டுத் திரையினால் மூடப்பட்ட சிவிகை ஒன்று வந்தது. அதற்குள் இருப்பது யாரோ என்று வல்லவரையன் சிந்திப்பதற்குள்ளே, செக்கச் சிவந்த நிறத்துடன் வளையல்களும், கங்கணங்களும் அணிந்த ஒரு கரம் சிவிகைக்குள்ளேயிருந்து வெளிப்பட்டுப் பல்லக்கின் பட்டுத் திரையைச் சிறிது விலக்கியது. மேகத்தினால் மூடப்பட்டிருந்த பூரண சந்திரன் மேகத் திரை விலகியதும் பளீரென்று ஒளி வீசுவதுபோல் சிவிகைக்குள்ளே காந்தி மயமான ஒரு பெண்ணின் முகம் தெரிந்தது.

பெண் குலத்தின் அழகைக் கண்டு களிக்கும் கண்கள் வல்லவரையனுக்கு உண்டு என்றாலும், அந்தப் பெண்ணின் முகம் பிரகாசமான பூரண சந்திரனையொத்த பொன்முகமாயிருந்தாலும், எக்காரணத்தினாலோ வல்லவரையனுக்கு அம்முகத்தைப் பார்த்ததும் உள்ளத்தில் மகிழ்ச்சி தோன்றவில்லை. இனந் தெரியாத பயமும் அருவருப்பும் ஏற்பட்டன.

அதே நேரத்தில் அந்தப் பெண்ணின் கண்கள் வல்லவரையனுக்கு அருகில் உற்று நோக்கின. மறுகணம் ஒரு பீதிகரமான பெண் குரலில் 'கிறீச்' என்றகூச்சல்கேட்டது. உடனே சிவிகையின் பட்டுத் திரை முன்போல் மூடிக் கொண்டது.

வல்லவரையன் தன் அக்கம்பக்கத்தில் நோக்கினான். தனக்கு அருகில் எதையோ யாரையோ பார்த்துவிட்டுத்தான் அந்த மாது 'கிறீச்' சிட்டு விட்டுச் சிவிகைத் திரையை மூடிக் கொண்டாள் என்று அவன் உள்ளுணர்ச்சி சொல்லிற்று. எனவே சுற்றுமுற்றும் பார்த்தான். ஆழ்வார்க்கடியான் தனக்குச் சற்றுப் பின்னால் ஒரு புளிய மரத்தில் சாய்ந்து கொண்டு நிற்பதைக் கண்டான்.

அந்த வீர வைஷ்ணவ நம்பியினுடைய முகம் சொல்ல முடியாத விகாரத்தை அடைந்து கோர வடிவமாக மாறியிருப்பதையும் பார்த்தான்.

வல்லவரையனுடைய உள்ளத்தில் காரணம் விளங்காத திகைப்பும் அருவருப்பும் ஏற்பட்டன.

(தொடரும்)

அட்டைப்படவிளக்கம்:

சோழர்களின் முக்கிய தலைநகரமாயிருந்த பழையாறையில், அரண்மனை உத்தியான வனத்தில்,குந்தவைப் பிராட்டியும் வல்லவரையன் வந்தியத்தேவனும் இன்னாரென்று ஒருவரையொருவர் தெரிந்து கொண்டு சந்திக்கும் காட்சி இது. இந்தச் சந்திப்பின் முக்கியத்தைப் பற்றிப் பின்னால் கதையில் விவரமாகத் தெரிந்து கொள்வோம்.

1950ல் 'பொன்னியின் செல்வன்' முதன்முறையாக வெளியானபோது ஓவியர் அமரர் மணியம் வரைந்த படமே மேலட்டையில் இடம் பெற்றுள்ளது.

புதுக்கவிதைப் போட்டி — 3

முதல் பரிசுக் கவிதை

வைதேகி....
தங்களின் தொகுதிப் பக்கங்களே
நினைவில் இல்லாத எம்
அரசியற் புள்ளிகளுக்கு
உனது முனகல் பக்கத்தைப்
புரட்டிப் பார்க்க நேரம் ஏது?
தாய்க்குலமே!
அடுத்த தேர்தலை எதிர்நோக்கி
நீ லிப்ஸ்டிக் போட்டுக் காத்திரு.

— வி. நாராயண நம்பி,
பி. ஏ. இரண்டாம் ஆண்டு (தமிழ்),
தாகூர் கலைக் கல்லூரி, புதுவை.

இரண்டாம் பரிசுக் கவிதை

சிறுபெண்ணின் தாவணிபோல்
சில்லென்றோடும் நீரைச்
சிலர்பெண் ணென்றுகூறுவதால்
சினிமாவில் தலைகாட்டி
சிறப்பான தன்பெயரைச்
சிறிதாக மாற்றிவிட்டாள்
சிரிசேர்க்கும் நடிகைபோன்று,
சுற்றுலாத் துறையினரால்
சுற்றுச்சூழல் புத்துயிர்பெற்றால்
வைதேகி,வருகிறவரை
வரவேற்கக் காத்திருப்பாள்

— ஆ. ம. ஜெயலெட்சுமி,
பி. லிட். முதல் ஆண்டு,
இராமசாமி தமிழ்க் கல்லூரி,
காரைக்குடி — 623 001.

23.11.86 கல்கியில் இடம் பெற்ற 'வைதேகி காத்திருக்கிறாள்' என்ற கட்டுரையின் அடிப்படையில் எழுதப்பட்ட கவிதைகள் ......

படத்தில் நடித்ததால்
நடிகைகளைப்போல் உனக்கும்
பெயர் மாற்றம்!
உன்னைப்போல் நடிகைகளுக்கும்
நாங்கள்
நதிமூலம் பார்ப்பதில்லை!
பீரிட்டெழும் உற்சாகத்தில்
'பீர்' இட்ட பாட்டில்களை
அருவியில்
விட்டெறிகிறார்கள் வில்லன்கள்,
சுற்றுலாக் கதாநாயகன்
சுற்றுலா அருவியைக் கைப்பிடித்து
கண்டி அருவியைக் கைப்பிடித்து
வில்லன்களைத் தண்டிக்க
வருவானோ?

— ஜெயஸ்ரீ கிருஷ்ணன்,
முதல் ஆண்டு பி. ஏ. (சரித்திரம்),
காயிதே மில்லத் அரசு கலைக் கல்லூரி (மகளிர்),
அண்ணா சாலை, சென்னை — 600 002.

வைதேகி!
உன் முகப்பூக்களில்
ஏன் கண்ணாடிப் பருக்கள்?
சினிமாவில் நடித்ததற்காக
இப்படியா சிலாகிப்பது?
இந்த மனிதர்களின்
புகழுரையால் பூத்துப் போகாதே!
ஞாபக மிருக்கட்டும்
இது கலியுகம் கண்ணே!

— கவிநாயகன்,
XII-'A', அரசினர் மேல்நிலைப் பள்ளி,
கன்னிகாபுரம், சென்னை — 12.

தேர்தல் வரும் வரை...



ANNAMALLAI FINANCE LIMITED

Regd. Office : 252, Mettupalayam Road, Coimbatore-641 043
Phone : 37653 - 8 Grams : 'RAJDOOT' Telex : 0855-399 FORD IN

PUBLIC DEPOSIT SCHEMES

Scheme - I FIXED DEPOSIT

Minimum Amount of Deposit	Period	Interest per annum	Interest Payment
Rs. 1,000/- (Any addition to be in multiples of Rs. 500/-)	6 Months	14%	★ Monthly
	1 year	15%	
	2 years		
	3 years		

★ Post-dated Monthly Interest warrants for the entire period payable at par at all branches of The Karur Vysya Bank Ltd., will be despatched in advance along with the Fixed Deposit Receipt.

All branches of Karur Vysya Bank (vide their circular No.92/86 dated 19-3-1986) Punjab National Bank (vide their circular No.163/86 dated 3-6-1986) will accept remittances on our behalf. Such deposits will earn interest from the date of such remittance.

All outstation cheques will be accepted at par and interest in such cases shall be calculated from the date of realisation. Application Forms can also be had from the offices of all important Brokers.

Particulars to be specified as per Non-Banking Financial Companies (Reserve Bank) Directions 1977 and Non-Banking Financial Companies and Miscellaneous Non-Banking Companies (Advertisement) Rules 1977 are as under:

a) Name of the Company : ANNAMALLAI FINANCE LIMITED

b) Date of Incorporation of the Company : 28th May 1980 (Converted into Public Limited from 28th Sept. 1983)

c) (i) Business carried on by the Company : Hire Purchase, Leasing & General Financing of Commercial Vehicles, Automobiles of every description, Plant & Machinery equipments and all types of Consumer Durables.

(ii) Branches : Bangalore, Bombay, Ernakulam, Erode, Karaikudi, Madras, Madurai, Salem, Sathyamangalam, Tirunelveli, Trichy & Vellore

d) Brief particulars of the Management of the Company : The Company is managed by Sri. S. V. Arumugam, Managing Director, under the supervision and control of the Board of Directors.

e) Names, Addresses & Occupation of the Directors :

NAME	ADDRESSES	OCCUPATION
1. Sri. S.V. BALASUBRAMANIAM, B.Com., A.C.A., A.C.S. (Chairman)	88/27 A Alagesan Road Coimbatore-641 011	INDUSTRIALIST Vice Chairman & Managing Director Bannariamman Sugars Ltd
2. Sri S.V. ALAGAPPAN, B.Com., B.L. (Vice Chairman)	14/3-1, Rajamian St., Rajapalai, Trichy 620 020	BUSINESS Vice Chairman Annamalai Rereading Company (P) Ltd.
3. Sri H. NAGARAJ, B.Com.,	1053 (B11) Rangai Gowder St., Coimbatore 641 001	INDUSTRIALIST Managing Director The Anandakumar Mills Ltd.
4. Sri R.K. KUMAR, B.A., LL.B., (Former Chairman Union Bank of India)	C/o Yashpal Kumar & Co. 94 Arcadia, Nariman Point Bombay 400 021	COMPANY DIRECTOR Orkay Silk Mills Ltd. Apple Leasing and Computers Ltd.
5. Sri. R.K. GARG, B.A., F.C.A.	33 SFS Houses, Sheik Sarai-1 New Delhi 110 017	FINANCIAL CONSULTANT
6. Sri K.N. LAKSHMINARAYANAN, B.A., B.L.,	83 Arokit Street, Ramnagar Coimbatore 641 009	SENIOR ADVOCATE
7. Dr. S.V. KANDASAMY, M.S., M.C.H. (URO).	31 West Club Road, Race Course Coimbatore 641 018	GENITOURINARY SURGEON Director - Vedanayagam Hospital (P) Ltd.
8. Sri. S.V. BALAKRISHNAN, B.Com., B.L.	73 Poes Garden, Madras-600 086	BUSINESS Director Annamallai Agencies (P) Ltd.
9. Sri. S.V. ARUMUGAM, B.Sc., A.C.A. (Managing Director)	22 Bharathi Park Road, Coimbatore-641 043	BUSINESS Managing Director Shiva Distilleries (P) Ltd.

Scheme - II CASH CERTIFICATE

Amount of Deposit Rs.	Period	Maturity Amount Rs.	Annual Yield %
1,000	6 Months	1,072	14.41
	1 Year	1,160	16.00
	2 Years	1,347	17.35
	3 Years	1,565	18.86

Rs.10,000/- deposited in our CASH CERTIFICATE SCHEME will become Rs.15,650/- in 3 years.

(f) Profits of the Company for three preceeding financial years & Dividends declared

Year ended	Profit before Depreciation & Taxation	Profit before Taxation	Profit after Taxation	Dividend Paid	Dividend Percentage
	Rs.	Rs.	Rs.	Rs.	%
30-6-1984	49,837	33,330	8,630	Nil	Nil
30-9-1985	3,01,506	2,61,336	1,84,336	42,800	20
30-9-1986*	22,64,720	20,42,611	20,42,611	8,76,250	21

★ Subject to approval by Share-holders.

(g) Summarised Financial Position of the Company as appearing in the latest two audited Balance Sheets : Rs. in lakhs

LIABILITIES	As at 30-9-1986	As at 30-9-1985	ASSETS	As at 30-9-1986	As at 30-9-1985
Share Capital	95.15	10.00	Fixed Assets	118.76	4.56
Reserve & Surplus	13.25	1.38	Investments	2.26	0.30
Secured Loans	45.12	2.18	Current Assets, Loans & Advances	179.75	46.77
Unsecured Loans	81.96	33.52	Miscellaneous Expenditure	7.87	0.03
Current Liabilities & Provisions	72.16	14.38			
Total	308.64	51.66		308.64	51.66

Contingent Liability : 1) Guarantees given on behalf of customers. Rs. 26.06 Lakhs.
2) Accrued Employee Gratuity : Rs. 0.23 Lakhs.
3) Sales Tax on Lease Rentals : Rs. 1.25 Lakhs.

h) The amount which the Company can raise by way of Deposits under the directions Rs.1003.30 Lakhs.

i) The amount of Deposits raised by the Company on 30-9-1986 Rs. 79.31 Lakhs.

j) The Company has no overdue Deposits other than unclaimed Deposits on date.

k) i) The Company has complied with the applicable provisions of the Directions.
ii) The Compliance with the Directions does not imply that repayment of Deposits is guaranteed by the Reserve Bank of India.
iii) The Deposits accepted by the Company are unsecured and rank pari passu with other unsecured liabilities.

This Advertisement is issued under the Authority and in the name of Board of Directors of the Company, the text of which was approved by them on 14-11-1986.

Coimbatore
14th November 1986

By Order of the Board
for ANNAMALLAI FINANCE LIMITED
S.V. ARUMUGAM
Managing Director

NOTE : A copy of this text duly signed by a majority of the Directors of the Company has been filed with the Reserve Bank of India, Bangalore.

Application Forms can be had from the Company's Registered Office at Coimbatore and the following branches. Completed Application Forms along with the remittance may be handed over at our nearest Branch or sent directly to the Registered Office.

1/1 Panthapalaya, Mysore Road, Bangalore-560 039. ★ Rajabahadur Mansion, (II) 2nd Floor Room No. 14-18, 28 Bombay Samachar Marg, Bombay-400 023 ★ P.K. Building, 36/810 Chittoor Road, Ernakulam, Cochin-682 011. ★ 20-A Sathy Road, Opp. C.N. College, Erode-638 004 ★ 33 HETHAPPA NILAYAM, Sekkalai Road, Karaikudi-623 001 ★ 1/3 Queens Court, 101 Montieth Road, 1st Floor Egmore, Madras-600 008. ★ ARUMUGHAM BUILDINGS, 26/27 Poonamallee High Road, Madras-600 003. ★ 246-C Aruppukottai Main Road, Anuppanadi, Madurai-625 012. ★ 210-211 Trichy Main Road, Salem-636 006 ★ 223, Mysore Main Road, Sathyamangalam-638 401 ★ 17-B, Thiruchendur Road, Palayamkottai, Tirunelveli-627 002 ★ 4-A, Bishop Road, Trichy-620 001 ★ 81-A, Arcot Road, Vellore-632 012.

SAS/AFL/18/86

கிணற்றடியில் குளித்துக் கொண்டிருந்தபோது உஷா குரல் கொடுத்தாள்.

"என்னங்க.... உங்களைத் தேடி யாரோ வந்திருக்காங்க!"

"என்னைத் தேடியா... போடிப் போ. நாம இந்தக் கிராமத்துக்கு வந்து அஞ்சுநாள்கூட ஆகலே. எவனாவது வீட்டு விலாசம் தவறி வந்திருக்கப் போறான்" என்று தலையை துவட்ட ஆரம்பித்தேன்.

"ஆமா... பெரிய டவுன் இது. வீட்டு விலாசம் தவறி வரதுக்கு. கிராமம் தவறி வந்தால்தான் உண்டு."

"கிராமத்துக்கு வந்து நீ அடிக்கிற முதல் ஜோக்காக்கும் இது?" என்றேன்.

"விஷயத்துக்கு வாங்க. எல்லாம் விசாரிச்சேன். பாங்குல வேலை பார்க்குற ஆபீஸரைப் பாக்கணும்னு சொல்றான்."

"ஓஹோ, அப்படியா விஷயம். நான் ஊருக்கு வந்திருக்கிற விஷயத்தை டூரிங் தியேட்டர்ல ஸ்லைடு போட்டே காமிச்சிட்டான் போலிருக்கு."

"ஐயாவுக்குப் பெருமை பிடிபடலையாக்கும்" உள்ளே போனான்.

ஆனால் அவனைச் சந்திக்கும்வரை நான் நிறைய ஊகங்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது. இந்தச் சின்ன கிராமத்திற்கு நான் முற்றிலும் புதியவன்; ஊருக்கு வந்து அதுவும் ஆபீஸில் சேர்ந்து ஒரு வாரம் கூட ஆகவில்லை. வீட்டு வேலைகளைக் கவனித்துக் கொள்ள ஒரு ஆள் வேண்டும் என்று மானேஜரிடம் சொல்லியிருந்தேன். அவனாக இருக்குமோ?

வேட்டியைக் கட்டிக் கொண்டேன். ஈரத் துண்டைத் தோளில் போர்த்தியபடி வாசலுக்குப் போனேன்.

வாசலில் ஒரு கிழவன் குத்துக்காலிட்டு அமர்ந்திருந்தான்.

"யாருப்பா, என்ன வேணும்?"

உடனே எழுந்து நின்றான். "கும்பிடறேன் சாமி. இந்தக் கிராமத்துல வண்ணானுங்க நானு. ஐயாவுடைய துணிமணிகளைத் தோச்சுப் போட அனுமதி கொடுக்கணுமுங்க."

உஷாவைப் பார்த்தேன். "எம் பெண்டாட்டி கோச்சுக்கிடுவாய்யா. சரி, உங்கிட்டே ஆடினரிக்கு எத்தனை நாளாகும்?"

டோபி நிமிர்ந்தான். இப்போதுதான் அவனை நன்றாகக் கவனிக்க முடிந்தது. கூனல் முதுகு. நரைத்த தலை. தேசிய வரை படம் மாதிரி கவலை நதிகள் ஓடிய முகம்.

"ஐயாவுக்குப் பட்டண வாசம். அதான் அப்படிக் கேக்குறீக. இங்க எல்லாம் மறு நாளு ஐயா."

பட்டணத்துப் புத்தியை நறுக்கென்று குட்டினேன். நான் அசடு வழிவதைப் பார்த்து ரசிப்பவள்போல் உஷா சிரித்துக் கொண்டிருந்தாள்.

"என்ன உஷா, இவன் கிட்டேயே போட்டுடலாமா?"

"இந்தக் கிராமத்துல எனக்குன்னு இருந்த ஒரே பொழுதுபோக்கு துணி தோய்ச்சுப் போடறதுதான். அதுவும் போச்சா!" என்று சலித்துக் கொண்டாள்.

"இந்தக் கிண்டல்தானே வேணாங்கறது. உனக்கு உண்மையிலேயே பொழுது போகலைன்னா இவன்கூடப் போய்க் குளத்தங் கரையிலே நின்னு தோய்ச்சுட்டு வா" என்றேன்.

"என் பொழப்புல கைவெச்சிடாதீங்கம்மா" என்பவன்போல் கிழவன் என் மனைவியைப் பார்த்துக் கொண்டு நின்றான்.


சிறிது நேரம் யோசித்துப் பின்னர், "சரி, அவன்கிட்டயே போட்டுடலாம்" என்றாள்.

"என்ன பெரியவரே, திருப்திதானே. நாளைலேர்ந்து துணி எடுக்க வந்துடு" என்று ஒப்பந்தமானோம்.

விஷயத்தை அதோடு விட வேண்டியது தானே. பாங்க் ஆபீஸராய் லட்சணமாக வீட்டுக்குள்ளே போயிருக்கலாம். விதி செய்த சதி! வார்த்தையைக் கொட்டிவிட்டேன்.

"ஏம்பா துணி எடுத்தே உனக்குக் கூனல்

பூசாரி கொடுத்த வரம்



விழுந்திடுச்சே...பொதி சுமக்க ஏதாவது ஏற்பாடு பண்ணிக்கக் கூடாதா?'' என்று கேட்டேன்.

உடனே கிழவன் பிடித்துக் கொண்டான்.

''அட என்னங்க, நீங்க வேறே. என்னால் கொடுக்க முடிஞ்ச கூலிக்கு எந்தக் கழுதை வருதுங்கறீங்க. வர்ற கழுதைகளும் பாதியிலேயே சண்டித்தனம் பண்ணுதுங்க. ஐயா மனசு வெச்சீங்கன்னு எனக்கு உங்க பாங்குல கடன் வாங்கித் தர முடியுமில்லே. ஒரு இஸ்திரிப் பெட்டியும் ஒரு கழுதைக் குட்டியும் வாங்கணும்னு ரொம்ப நாளா ஆசை.''

ஏண்டா சொன்னோம் என்றாகிவிட்டது எனக்கு.

''அட போ பெரியவரே. இஸ்திரி குட்டியும், கழுதைப் பெட்டியும். ஸாரி, கடன் வாங்கறது பெரிய விஷயமில்ல. திருப்பிக் கட்டணும் தெரியுமா?''

''என்ன ஸார். பெரிய வார்த்தை சொல்லிட்டீங்க. என்னைப் பாத்தீங்கன்னு ஏமாத்தறவன் மாதிரியா தெரியுது? ஏமாத்தறவன் ஏதாவது கட்சி மூலமாத்தான் வந்து ஒங்களைத் தொட்டுக் கடன் கேட்டு அதிகாரம் பண்ணுவான். என்னைப் பாருங்க, ஒங்களைத் தொட்டுக் கும்பிட்டுக் கேக்கறேன். நான் சாகறதுக்குமுன்னாலஎனக்குன்னுசொந்தமா இஸ்திரிப் பெட்டியும் கழுதைக் குட்டியும்.''

செண்டிமெண்ட்ஸ்... உஷாவைப் பார்த்தேன்.

''பாவங்க கிழவன்'' என்று கண்ணால் சொன்னாள்.

''சரி நாளைக்கு ஆபீஸுக்கு வா'' என்றேன்.

''அப்ப பாங்குக்கு...?'' என்றான்.

''அட எல்லாம் ஒண்ணுதான்யா'' என்றேன் எரிச்சலுடன்.

''கிராமத்துல ஆளாளுக்கு ஜோக்கடிக்கிறாங்க'' என்று முணுமுணுத்தபடி உஷா உள்ளே போனாள்.

மறுநாள் காலை பத்து—பதினொரு மணிக்கெல்லாம் ஆபீஸிற்குக் கிழவன் வந்தான். உடனே மானேஜர் அறைக்குக் கூட்டிப் போய் விஷயத்தைச் சொன்னேன்.

''வந்தவேகத்துலேயேரெகமண்ட்பண்ணியிருக்கீங்க. அப்ப நல்லபார்ட்டியாத்தானிருக்கும். என்ன பெரியவரே ஒழுங்கா பணம் கட்டுவீங்களா?''

''என்ன ஸார் எல்லாரும் அப்படியே கேக்குறீங்க. நம்பிக்கைதான் சார் முக்கியம். நீங்க கடன் குடுத்துப் பாருங்க. ஒவ்வொருத்தன் மாதிரியில்ல சார் நான்.''

''சரி, நீங்க வெளில வெயிட் பண்ணுங்க'' என்றார் மானேஜர்.

ஹெச்.என்.ஹரிஹரன்



அவன் வெளியே போனவுடன், "என்ன சார் கடன் ஒண்ணும் பிரச்னை இல்லையே" என்றேன் நான்.

"பிரச்னை என்ன பெரிய பிரச்னை. ஆனால் கிழவனை நம்பிக் கொடுக்க முடியுமா? ஒரு பேச்சுக்குச் சொல்றேன். இப்ப நாம் கடனைக் கொடுத்த உடனே கிழவன் மண்டையைப் போட்டா என்ன பண்றது?" என்று கேட்டார் மானேஜர்.

"என்ன பண்ண முடியும். கழுதைன்ய பாங்க் வாசல்ல கட்டி வைச்சுக் காப்பாத்த வேண்டியதுதான்" என்று நான் சொல்ல இருவரும் சேர்ந்து சிரித்தோம்.

திடீரென்று ஒரு ஐடியா தோன்றியது.

"ஸார் ரீபேமெண்ட் கூடக் கவலை இல்லை சார். எப்படியிருந்தாலும் நான் சலவைக்குத் துணி அவன்கிட்டேதான் போடறேன். அதுக்குத்தரவேண்டியகூலியைக்கணக்கிலே அட்ஜஸ்ட் பண்ணிடறேன்" என்றேன்.

"வெரிகுட் ஐடியா. அப்படியே பண்ணிடுங்க. லோன் டாக்குமெண்ட்ஸ் ரெடி பண்ணுங்க" என்றார்.

மிக மோசமான ஐடியா அது என்று அப்போது எனக்குத் தோன்றவில்லை.

காதில் டோக்கன் நம்பருடன் எங்கள் வீட்டு வாசலில் கழுதை வந்து நிற்க ஆரம்பித்தது. அதைப் பார்க்கும்போதெல்லாம் நான் உஷாவைக் கிண்டல் அடிக்க ஆரம்பித்தேன்.

"வாங்கினதுதான் வாங்கினான். பொட்டைக் கழுதையா வாங்கக் கூடாதா?" என்பேன்.

"ஏன் கிராமத்துல 'சைட்' அடிக்கமனுஷங்களே கிடைக்கலியா ஒங்களுக்கு?"

"நீ ஒருத்தி போதாதா எனக்கு. அதுக்கு சொல்லலை. பொட்டைக் கழுதைன்னா தினசரி அரை லிட்டர் கழுதைப் பால் வாங்கி நீ குளிச்சியானா கிளியோபாட்ரா மாதிரி ஆயிடுவே இல்லியா?"

உடனே கோபம் வந்துவிடும்.

"இருக்கிற அழகு போதும். ஒங்களுக்கு ஆசையாயிருந்தா சொல்லுங்கோ. கழுதைப் பால் வாங்கிக் காப்பிப் போட்டுத் தரேன்; அவன் கடனை அடைச்ச மாதிரியும் இருக்கும்" என்று ஒரு போடு போடுவாள்.

"கடை வைக்க பாங்க்—லோன் கேட்கிறீயே! என்ன கடை வைக்கப் போறே?"

"வட்டிக் கடை."



ஆரம்ப காலத்தில் கிழவனிடம் துணிகளைப் போட அவன் பவ்யமாய்த் துணிகளைச் சுருட்டி ஏதோ எங்களுக்கு மரியாதை தர விரும்புபவன் போல் அதைக் கழுதையின் மேல் ஏற்றாமல் தானே சுமந்து மறுநாள் வெயில் காய்ந்த மணத்தோடு அயர்ன் பண்ணித் தருவான் அவனிடம் ஏற்கெனவே சொன்னபடி நானும் மாதா மாதம் அவனுக்குத் தரவேண்டிய தொகையை பாங்கில் கட்டிக் கொண்டிருந்தேன்.

பழகப் பழக (கழுதை...?) பாலும் புளிக்கும் என்பார்கள். நாங்கள் செய்து கொண்டிருந்த 'ஜென்டில்மேன் அக்ரிமெண்ட்' காலாவதியாகிவிட்டதுபோல் கிழவன் நடவடிக்கைகள் மாறிவிட்டன.

திடீரென்று தொடர்ந்தாற்போல் இரண்டு மூன்று நாட்கள் கிழவன் வரவில்லை. துணிகள் குவிந்து வீடே 'டோபிகானா' மாதிரி ஆகிவிட்டது. வீட்டில் இருப்பது நாங்கள் இருவர்தான் என்றாலும் கிழவன் குறைந்த செலவில் தோய்த்துத் தருகிறான் என்கிற தைரியத்தில் இஷ்டம்போல் துணி உடுத்திக் கொண்டிருந்தோம். அதிலும் உஷா கனவு சீனில் வருகிற ஹீரோயின் மாதிரி அடிக்கடி புடவைகளை மாற்றிக் கொண்டிருந்தாள்.

அதைச் சொன்னால் "நீங்கள் மட்டும் என்ன, கார்த்தால ஒரு சட்டை, மத்யானம் ஒண்ணுன்னு போட்டுக்கலியா?" என்று பதிலடி வரும்.

இந்தச் சூழ்நிலையில் கிழவன் வராமல் போனது மிகவும் கஷ்டமாகிவிட்டது. பணக்கார ஹீரோ திடீரென்று ஏழையாகி ஒரே சட்டையையே போட்டுக் கொள்வது போல் என் நிலைமையும் ஆகிவிட்டது.

ஆபீஸிற்குப் போனால், "என்னப்பா கிழவன் வரலியா?" என்றார்கள் கிண்டல் தொனிக்க.

"கழுதை செத்துப் போச்சோ, கிழவன் செத்துப் போனானோ" என்று புளியைக் கரைத்தார்கள்.

ஆனால் அதற்கெல்லாம் முற்றுப் புள்ளி வைப்பதுபோல் இரண்டு மூன்று நாட்களில் கிழவன் வந்துவிட்டான். எனக்கோ கோபமான கோபம். அதை அடக்கிக் கொண்டு கேள்வி கேட்க ஆரம்பித்தேன்.

"என்ன பெரியவரே. ஒரு வாரமாச்சு, ஆளையே காணோம்?"

கிழவன் ஒரு மாதிரி பார்த்தான். அதில் முன்னர் ஒட்டிக் கொண்டிருந்த அன்னியோன்யம் பவ்யம் எல்லாம் அம்பேலாகியிருந்தது.


"ஒரு வாரம் ஆகத்தானே செய்யும். ஆடினரின்னா ஒரு வாரம் சார்" என்றான்.

எனக்குச் சொரேலென்றது. தலை நிமிர்ந்து உஷாவைப் பார்த்தேன்.

"இவனைப் பாரேன். ஆட்னரின்னு சொல்லக் கூடத் தெரியலை... ஒரு வாரம் ஆகுங்கறான்."

"என்னப்பா பட்டணத்து பாஷையெல்லாம் பேசறே" என்றாள் உஷா.

"அமாம்மா. இனிமே ஆடினரின்னா எம



நாள். அருசண்டுன்னு ரெண்டு நாள்.''

எனக்குப் 'பாலூட்டி வளர்த்த கிளி' என்று பாட்டு பாடத்தான் தோன்றியது.

''ரொம்ப அர்ஜண்டுன்னு நீங்களே தோச்சுக்கணும்னு சொல்லுவே போலிருக்கே'' என்றான் உஷா.

கடன் வாங்கிக் கொடுத்தவனின் மனைவி என்பதற்காகவாவது அவள் அடித்த ஜோக்கிற்கு அவன் சிரித்திருக்கலாம்.

''ஆடினரின்னு ஒரு சார்ஜ். அருசண்டுன்னு ரெண்டு மடங்கு'' என்று வியாபார நோக்கத்திலேயே இருந்தான்.

உஷா அவனைப் பார்த்துப் பிரமித்துப் போயிருந்தாள்.

சரி, கடன் கொடுத்துத் தொலேத்தாயிற்று. அதை முழுக்கத் தீர்க்கும் வரையிலும் இவன் சொற்படி கேட்டு ஆடத்தான் வேண்டும். பிற்காலத்தில் அசடு வழிந்து மானேஜரின் காலில் விழுவதைவிட, கடன் வாங்கினவன் காலில் விழுவதே புதிய பழமொழி ஆகிவிட்டது. என்னுடைய வீக்னஸ் அவனுக்குத் தெரிந்திருக்கும் என்றும் தோன்றியது.

''எப்படியோ பெரியவரே... நல்லாயிரு'' என்று வாய் வார்த்தையாகச் சொல்லி அனுப்பினேன்.

விஷயம் அதோடு நின்றால் பரவாயில்லே.

ஒருநாள், வெளுத்து வந்த துணிகளே எண்ணி அடுக்க ஆரம்பித்த உஷா திடீரென்று 'ஓ'வென்று அலறினாள்.

நான் என்னவோ ஏதோவென்று கை கால் பதற உள்ளே ஓடினேன்.

கல்யாணத்துக்கு முன்னால் நான் அவளுடைய பிறந்த நாளுக்கு வாங்கிக் கொடுத்த புடைவை—அதில் கத்திரிக்கோலால் திறப்பு விழா பண்ணின மாதிரி நீளமாய் ஒரு கிழிசல்.

''நீங்க ஆசையா வாங்கிக் கொடுத்தது. ஒரு வருஷம்கூட ஆகலே. கிழக் கடங்காரன் கிழிச்சுட்டான்'' என்று சந்தத்தோடு திட்டினாள், கன்னங்களில் அழுகையின் கோடு.

எனக்குக் கோபத்தில் முகம் சிவப்பதை உணர முடிந்தது. 'என்ன பண்றேன் பாரு அவனே?' என்றபடி வாசலுக்கு விரைந்தேன்.

என்னைப் பார்த்ததுமே, ''என்னு சார் புடைவைதானே?'' என்றான் சர்வசாதாரணமாக.

அதைக் கேட்டதும் எனக்குக் கோபம் எகிறி விட்டது.

''என்னய்யா, கிழவா! சாதாரணமா கேக்கறே? நல்ல புடைவை! அதைக் கிழிச்சுட்டியே!'' என்று கத்தினேன்.

''அட என்னு சார் நீங்க ஒண்ணு. நல்ல புடைவை எது, கெட்ட புடைவை எதுன்னு பாத்தா கிழிக்கிறோம். நான் பார்க்காத புடைவையா. பெரிசா அலட்டிக்கிறீங்களே. அந்தப் புடைவை நூத்தம்பது ரூபா பெறுமா? வேணும்னு அதையும் கடன் கணக்கிலே ஏத்திக்குங்க. துணி துவைச்சுப் போட்டுக் கழிச்சுடறேன்'' என்றபடி எழுந்து வெளியில் போனான்.

ஒரு வருஷம் ஆகிவிட்டது. புடைவை கிழி கடனுக்கும் பாங்க் கடனுக்கும் இந்த ஒரு வருடத்தில் எங்களால் முடிந்த அளவிற்குத் துணிகளைச் சலவைக்குப் போட்டுக் கிழவன் முதுகை ஏறக்குறைய ஒடித்துவிட்டோம். (அவன் சலவையைத் தாங்க முடியாத எங்கள் துணிகள் கிழிந்து போய்ச் செலவு வந்தது இன்னொரு கதை.)

அதுவும் கடைசித் தவணையாக பாங்க் கடனை அடைக்கும்போது நிம்மதியாகப் பெருமூச்சுவிட்டேன். இனிமேல் கிழவனைத் துரத்தியடித்துவிடலாம். கையிலிருந்த சாட்டையை அவனிடம் கொடுத்து அடி வாங்கிக் கொண்டிருந்தது போதும்.

கடன் வாங்கினவனைவிடக் கடன் கொடுத்தவனே அதிகம் பயப்பட வேண்டியிருக்கிறது. அதிலும் இடையில் புகுந்து வரத்தைக் கொடுத்த பூசாரி நான்... என்று நினைத்தபோது சிரிப்பு வந்தது.

ப்யூன் மேஜைக்கு வந்தான்.

''சார்... மேனேஜர் வரச் சொல்றாரு'' என்றான்.

உள்ளே போனேன்.

''வெரிகுட் சார். டோபியோட கடனே முடிச்சுக் கொடுத்திட்டீங்க. வெரிகுட் பார்ட்டி.''

'ஒரு வருஷம் நான் பட்ட கஷ்டம் உங்களுக்கு எப்படித் தெரியும்?' என்று முனகிக் கொண்டேன்.

''தாங்க்யூ சார்.''

''ஒரு சஜ்ஜஷன் கொடுக்கலாமா?'' என்றார் மானேஜர்.

''என்ன சார்?'' என்றேன்.

''உங்க வீட்டுக்குப் பால்காரர், மளிகைக் கடைக்காரர் வராங்க இல்லையா?''

எதற்கு இப்படிச் சுற்றி வளைக்கிறார்?

''அவங்களுக்கும் இதே மாதிரி லோன் ரெகமண்ட் பண்ணி வாங்கிக் குடுங்களேன். நம்ம பிராஞ்ச் டார்கெட்டும் ரீச் பண்ணின மாதிரியிருக்கும்'' என்றார்.

எனக்கு உடனே கிழிசல் புடைவைதான் ஞாபகம் வந்....

. . . .

அரை மணி நேரம் மயங்கிக் கிடந்தேன் என்று நண்பர்கள் பின்னர் சொன்னார்கள்.

''என் பெண்ணைப் பார்க்க வந்த பையனுக்குக் குழந்தை மனசு...''


''எப்படிக் கண்டுபிடிச்சீங்க?''

''அவன் சாக்லேட் நிறப்புடைவை கட்டிட்டு வந்து நின்றதும் பையன் நாக்கு வேர்த்து நீர் வழிய ஆரம்பிச்சிட்டுது...''



பரம்பொருளை போற்றி வணங்குவதற்கு வெவ்வேறு வடிவங்களில் ஆலயங்களை ஆந்திரப் பிரதேசம் கொண்டிருக்கிறது . திருமலை பாரெங்கும் புகழ் பெற்ற வேங்கடேசுவரர் பெருமாள் ஏழுமலைகளில் தனிச்சிறப்புடன் எழுந்தருளியிருக்கிறார். திருமலையிலிருந்து சிறிது தொலைவில் பாபவிநாசம், ஆகாச கங்கை நீர் அருவிகள் மற்றும் புராதன வராக சுவாமி கோவில்.

திருப்பதி — மலை அடிவார ஆலய நகரத்தைச் சுற்றிலும் கோவில்கள் மயம்தான். வேங்கடேசுவரப் பெருமாளின் துணைவியார் கோவில் கொண்டிருக்கும் திருச்சானூர், கோவிந்தராஜஸ்வாமி ஆலயம், ஸ்ரீகாளஹஸ்தி, நாராயணவரம், கைலாசநாத கோணா, திருப்பதியிலிருந்து 144 கிலோ மீ...



தொலைவில் உள்ளது ஹார்ஸ்லி குன்றுகள். யாத்ரிகர்கள், சோலைகளின் அழகை அனுபவிக்கக்கூடிய மலை வாசத்தலம்.

ஆந்திரப் பிரதேசத்தின் மற்ற பாகங்களிலும் ஆத்மீக அழைப்புக்குக் குறைவில்லை. லேபாக்ஷி புராதன வீரபத்ர ஆலயத்திற்குப் பெயர் போனது. ஸ்ரீசைலத்தில் மல்லிகார்ஜுன ஆலயம், எழில் மிகுந்த சூழலில் காட்சியளிக்கிறது. வன விலங்குகள் நிறைந்த




...ந்த வனங்கள் வசீகரமான விடுமுறைத்தலம்.

விசாகப்பட்டணத்திலிருந்து சிறிது பயணம் செய்தால், சிம்மாசலம். குன்றின் மீது கோவில் கொண்டிருக்கும் வராக நரசிம்ம மூர்த்தி! இது ஒரு பிரசித்தி பெற்ற ஆலயம். சிம்மாசலத்தைச் சுற்றிலும் பல 'பிக்னிக்' இடங்கள். பத்ராசலத்தில் ஸ்ரீராம பிரானின் ஆலயம் புனிதத்தின் சிறப்பிடம். துங்கபத்ரா நதிக்கரையில் அமைந்திருக்கும் மந்திராலயம், ஸ்ரீ ராகவேந்திரஸ்வாமி ஆலயத்திற்கு புகழ் பெற்றது. ஆத்மீகப் பயணத்திற்கு அநேகமாக முடிவே கிடையாது.

ஒரு ஆத்மீக அனுபவத்திற்கு ஆந்திரப் பிரதேசத்திற்கு வருகுங்கள்.


ஆந்திரப் பிரதேஷ் டூரிசம்,
1வது ஃப்ளோர், ககன் விஹார்,
எம்.ஜே. ரோடு,
ஹைதராபாத் 500 001.
டெலிபோன்கள்: 556493, 42835, 77192
70087, 233384, 233385

ஆந்திர பிரதேசம் — வழிபாட்டின் பன்முகங்கள்



Akshara H/361/APT


பொங்கல் வாழ்த்துகள்
பஞ்சாப்
கூர்க்காலாந்து
அஸ்ஸாம்
திரிபுரா
சவால்! நான் அவர் மேலேயே சிலந்தி வலை பின்னிக் காண்பிக்கறேன்!
ராணுவத் தீர்வு
பேச்சு வார்த்தை
• என்னய்யாது? எல்லாரும் இப்படி விழுந்தடிச்சு ஓடறோம்? என்னாச்சு?
• ஏதோ ஒரு புதுப்பானையிலே வெடி குண்டு வெச்சிருக்காம்!..
எங்களுக்கு ஒரு நாள் தான் பொங்கல்! உனக்கு வருஷம் பூரா தினமும் உன் பானையிலே பொங்கல்!


டேய், கண்ணுங்களா! போகின்னு சொல்லி குப்பை, காகிதங்களைக் கொளுத்தாதீங்க! நான் எம்.எல்.ஏ.! வம்புலே மாட்டிக்கப் போறேன்!
இந்தி திணிப்புக்கு எதிர்ப்பு
ஜானகி
ஆலோசகர் சம்பத்
கன்னிப் பொங்கல்
வஞ்ச ஒழிப்பு இயக்கம்
வஞ்சம்
ள்ளச்சாராயம்
என்ன மனுஷன்யா நீ! எத்தனை பேருக்கு நான் பொங்கல் வாழ்த்து தபால்லே அனுப்பறேன். வழக்கமா கொடுக்கிற ஒத்தை ரூபா கொடுத்தா என்ன?



11

பாசம் என்பது இதுதானே?

உஷா சுப்பிரமணியன்

இதுவரை.....

கோவில் ஓதுவாராக இருந்திருக்க வேண்டிய சுந்தரம், இசை அறிவு மிக்கவர். சின்ன ஊரில் பள்ளி ஆசிரியராகப் பணிபுரிகிறார். அவர் இரண்டாம் மகளான பதின்மூன்று வயதான புவனேஸ்வரி, தந்தையிடமிருந்து இசை ஞானம் பெறுகிறாள். ஆனால் தாயார் ஞானசுந்தரி மகளை அரசியல் மேடைப் பாடகியாக்கிப் பணமும், புகழும் சம்பாதிக்க விரும்புகிறாள். சுந்தரத்தின் நெருங்கிய நண்பரின் மகனான சந்திரசேகர் என்னும் பள்ளி மாணவன், புவனேஸ்வரியின் நெருங்கிய நண்பனாக இருக்கிறான்.

சுந்தரம் தம் பெரிய மகள் லோகேஸ்வரியைத் தம் சகோதரி மகன் நித்தியானந்தத்திற்கு நிச்சயம் செய்திருக்கிறார். திடீரென ஊருக்கு வரும் நித்யா, தான் ஒரு நடிகரின் ரசிகர் மன்றத்துக்குத் தலைமை ஏற்றிருப்பதாகவும், அவசரச் செலவுக்குத் தேவை யென்றும் கூறி யாருமறியா வண்ணம் லோகுவின் காதுக் கம்மலைப் பெற்றுக் கொள்கிறான். அவன் ஒழுங்கீனமான நடத்தையின் காரணமாகக் கல்லூரியிலிருந்து வெளியேற்றப்பட்டிருப்பதாக அவன் பெற்றோருக்குச் செய்தி வர, அவன் தாய், தன் மகனை இனிமேலும் நம்ப வேண்டாம் என வெறுப்புடன் கூறுகிறாள். ஆனால் சுந்தரம் அவன் திருந்துவான் என நம்புகிறார்.

அந்த ஊரில் வசித்து, இன்று அரசியல் பெரும் புள்ளியாக மாறியுள்ள தமிழ்ச் செல்வன் என்னும் முறை தவறிய இளைஞனிடமிருந்து ஞானசுந்தரி அச்சாரம் பெற்று, புவனேஸ்வரியைச் சென்னைக்குக் கட்சிக் கூட்டத்தில் பாட அழைத்து வரச் சம்மதிக்கிறாள். சுந்தரத்திற்கும் ஞானசுந்தரிக்கும் வாக்குவாதமும் மனமுறிவும் ஏற்படுகிறது. எளிமையாகவும், இனிமையாகவும் அமைதியாகவும் சென்று கொண்டிருந்த குடும்பத்தில் அரசியல் வாதியும், சினிமா விசிறியும் குழப்பங்களை உண்டு பண்ணுகிறார்கள்....

மேலே.....

"பாட்டி இல்லையா சேகர்?" என்று புவனா, சுற்றுமுற்றும் ஆள் அரவமற்றிருப்பதைப் பார்த்துக் கேட்டாள்.

பாட்டி தாயாதிக்காரர்கள் வீட்டில் துக்கம் கேட்கத் தஞ்சாவூர் போவது பற்றி முன்கூட்டியே அறிந்திருந்து, புவனாவுடன் மனமாரப் பேச இந்த வாய்ப்பை விட்டால் வேறு சமயம் கிடைக்காது என்றுதான் சேகர் அவளை 'ஞாயிற்றுக் கிழமை வீட்டுக்கு வாயேன். பாட்டி 'எங்கே புவனா வர்றதே யில்லேன்னு கேட்டாள்' என்று அழைத்திருந்தான்!

புவனா கேட்டவுடன் ஒன்றுமறியாத சாது வாய், "பாட்டி வீட்டிலில்லே புவனா. யாரோ உறவுக்காரர் செத்துட்டார்னு இமர்னு தஞ்சாவூருக்குப் போய்விட்டாள்!" என்று புளுகினான்.

நாகம்மாப் பாட்டி வீட்டிலில்லை என்றதும் புவனா, பாட்டி வழக்கமாய் உட்காரும் பளபளவென்ற வெண்கலச் சங்கிலியில் மாட்டப்பட்டிருந்த தேக்கு மர ஊஞ்சலில் சுவாதீனமாக உட்கார்ந்து வீசி வீசி ஆடலானாள்.

சேகர் குழந்தையின் குதூகலத்துடன் ஆடும் புவனாவை ஆர்வத்துடன் பார்த்தான். அதேசமயம் அவன் மனத்தில் ஓர் ஏக்கமும் எழுந்தது. புவனாவை அவனுடன் விடுமுறைக்கு அனுப்பும்படி தான் எழுதியிருந்ததையும், அவள் தாயார் மறுத்துவிட்டதையும் கிருஷ்ணன் மகனுக்கு எழுதியிருந்ததிலிருந்து அவன் மனத்தை ஏமாற்ற உணர்வு அழுத்தியது. இன்னும் இருபது நாட்களில் அவன் பரீட்சை முடிந்துவிடும். அதன் பிறகு....

இந்த ஊர் இந்த இந்திய மண் வாசனை, பாட்டியின் ஒழுக்கக் கோட்பாடுகள், எல்லாமே அன்னியமாகிவிடும். அதெல்லாம் கூடப் பொறுத்துக் கொள்ளலாம். ஆனால் புவனாவின் பிரிவு, சாதாரணமாக ஏற்கக் கூடிய விஷயமா அது? ஓர் ஆணுக்கும் பெண்ணுக்குமான நட்பு, அது எவ்வளவு இயல்பானதாக இருந்தாலும், தொடர முடியுமா? அவனுடன் புவனாவை ஊருக்கு அனுப்பவே மறுக்கும் அவள் தாய், அவனுடன் கடிதத் தொடர்பு கொள்வதை அனுமதிப்பாளா? அப்படிக்கடிதம் எழுதினாலும், அது நேர்முகச் சந்திப்புக்கு ஈடாகுமா? அவன் வாழ்வில் புவனாவின் நட்பு என்னும் சகாப்தம் இன்னும் சில நாட்களில் முடிந்துவிடுமா? அவன் நெஞ்சை இனம் புரியாத ஏக்கம் அழுத்தியது. இதே ஏக்கம் ஏன் புவனாவிடம் இல்லை?

"ஏய் சேகர், என்ன பேசாமல் உலகமே கவிழ்ந்து விழுந்தாற்போல உட்கார்ந்திருக்கே?"

"ஏன் புவனா, இவ்வளவு வீசி வீசி ஆடறியே, தலை சுத்தவில்லே?"

"ஊஹூம் வாயேன், நீயும் உட்காரு, ரெண்டு பேரும் சேர்ந்து ஆடலாம்."

சேகர் அவளை வியப்புடன் பார்த்தான். இவள் மனம் வளர்ச்சியே அடையாதா? ஊஞ்சலில் உட்கார்ந்து சேர்ந்து ஆடுவது என்றால் அவன் மனத்தில் பாடத்துவங்கும் லாலியின் எதிரொலி அவளிடம் தோன்ற

மறுக்கிறதே.... புவனாவுக்கு அவனிடம் அன்பில்லையா, அவனைப் பிரியப் போகிறோமே என்னும் ஏக்கம் தோன்றவில்லையா?

சேகர், ஆடும் ஊஞ்சலைப் பிடித்து நிறுத்தினான். திகைப்புடனும், கோபத்துடனும் அவனை நோக்கிய புவனாவின் கண்களில் நேரே பார்வையைப் பதித்தான். ''புவனா, இன்னும் இருபது நாட்கள், இருபதே நாட்கள்.... அதன் பிறகு நான் குவெய்த்துக்குப் போய்விடுவேன். விடுமுறைக்குப் பிறகு காலேஜ் படிப்புக்கு அமெரிக்கா செல்லப் போறேன். அப்புறம் இங்க ஊருக்குத் திரும்ப எத்தனை நாளோ, எத்தனை வருஷமோ...''

இப்போதுதான் உண்மை உரைத்தது புவனாவுக்கு. வழக்கம்போல் இரண்டு மாத விடுமுறைக்கு அவன் பெற்றோரிடம் சென்று திரும்புவான் என்றல்லவா அவள் நினைத்திருந்தாள்? சேகர் மேல் படிப்புக்கு அமெரிக்கா செல்லப் போகிறான் என்று அப்பா கூறியிருந்தார். ஆனால் அது உடனே தொடரும் விஷயம் என்று அவளுக்கு இது வரை உரைக்கக் கூட இல்லையே. காதளவோடிய கண்கள் இன்னும் விரிய, உதடு பிரிய அவள் அதிர்ச்சியுடன் சேகரைப் பார்த்தாள்.

''உனக்குத் தெரியுமா புவனா, எங்கப்பா உன்னையும் விடுமுறைக்கு அனுப்பும்படி எழுதியிருந்தார், உங்கம்மாதான் அதற்கு மறுத்து விட்டாள்!''

''எனக்குத் தெரியும் சேகர். அந்தச் சமயத்திலே மெட்ராஸில் பாட்டுப் பாடணுமாம்.''

''எனக்கு ரொம்ப வருத்தம் புவனா. உன்னோடகுவெய்த்தெல்லாம்சுத்தலாம்,வீடியோவில படம் பார்க்கலாம். புதிசு, புதிசாப் பாட்டெல்லாம் கேட்கலாம்னு நினைச்சுண்டிருந்தேன்.''


''எனக்கும் ஆசைதான் சேகர். ஆனால் எங்க அம்மாவை எதிர்த்து யாரும் எதுவும் செய்ய முடியாது.''

சேகர் அவளை ஆழமாகப் பார்த்தான். ''புவனா, நான் ஊரை விட்டுப் போன பிறகு என்னை மறந்துடுவேயில்லையா?''

''போடா, உன்னை அப்படியெல்லாம் மறப்பேனா?''

''மறந்தாலும் மறப்பே. யாரு கண்டா, நீ பெரிய பாடகியாகி ஊர் ஊராப் பாடிண்டு இருப்பே. அப்போ என் ஞாபகம் இருக்குமா?''

''எல்லாம் இருக்கும். நீதான் அமெரிக்கா



விலே படிக்கப் போன பிறகு, கவுன் போட்ட வெள்ளைக்காரப் பொம்பளைங்களோட 'தஸ் புஸ்'னு பேசிக்கிட்டு என்னை மறந்துடுவே. எனக்கு இங்கிலீஷ் கூடப் பேசத் தெரியாதே. சேகர், உனக்கு இங்கிலீஷ் பேசத் தெரியுமோ?'' என்று புவனா குழந்தைத்தனமாகக் கேட்டாள்.

''ஊஹூம். எனக்கும் சரியாகப் பேசத் தெரியாது. ஆனால் கத்துக் கொண்டுவிடுவேன்.''

புவனாவின் மனக்கண்ணில் அவள் கற்பனை செய்திருந்த அமெரிக்காவில், அவள் சினிமாக்களில் பார்த்திருந்த கதாநாயகன் போல் உடையணிந்த சேகர், மேற்கத்தியப் பெண்களுடன் நடனமாடிக் கொண்டிருக்க, சேகரின் உணர்வில் புவனா இந்திய மேடைகளில் நளினமாய் இசைத்துக் கொண்டிருந்தாள்.

''புவனா வாயேன் தோட்டத்திலே போய் உட்கார்ந்துக்கலாம்.''

''மல்லிப் பூ பறிச்சுத் தர்றியா?'' என்று புவனா அவனைப் பின்தொடர்ந்து நடந்தாள்.

நடுவே துளசி மாடம். அதன் நடுவில் பித்தளை அகல் விளக்கில் ஆழாக்கு எண்ணெயில் மங்காமல் எரிந்து கொண்டிருந்த தீபம். கீழே சிமெண்டுத் தரையில் அழகான கோலம். புவனா துளசி மாடத்தை ஒருமுறை சுற்றி வந்து கும்பிட்டாள்.

சேகர், தான் பேச நினைத்தது எதுவுமே நெஞ்சுக்குழியிலிருந்து எழும்பாமல் அடைத்துக் கொள்ளுவதை உணர்ந்தான். அவன் அவளிடம் என்ன என்னவோ பேச விழைந்தான். அவளில்லாத வாழ்க்கை அவனுக்கு மிகவும் அர்த்தமற்றதாகிவிடும் என உணர்த்த விழைந்தான். வாழ்வில் அவன் உலகின் எந்த மூலைக்குச் சென்றாலும் புவனாவின் இடத்தை வேறு யாருமே பிடிக்க முடியாது என அவள் அறிய வேண்டும். எப்படிச் சொல்லுவது அவன் உணர்வுகளை? புரிந்து கொள்வாளா புவனா?

சேகரின் மௌனம் மெள்ள, மெள்ளப் புவனாவைப் பாதித்தது. ஆழ்ந்த உணர்வுகளின் தாக்கம் அவளையும் ஆக்கிரமித்தது. இனமறியாத ஒரு வெட்கம் அவளை ஆட்கொண்டது. வியர்வை பூத்தது. ''சேகர் நீ எத்தனையோ மைல் தள்ளிப்போயிடுவேன்னு நினைச்சாலே எனக்கு மனசை என்னவோ செய்கிறதுடா'' குனிந்த அவள் கண்களிலிருந்து இரண்டு சொட்டு நீர் கீழே விழுந்தது.

சேகர் புவனாவின் அருகே நெருங்கினான். இன்றுதான் அவளை முதல்முறையாகப் பார்ப்பதுபோல் உற்றுப் பார்த்தான். மெல்ல அவள் கைகளைப் பற்றினான். ஓர் ஆணின் முதல் ஸ்பரிசம், அதுவும் மனத்தால் நெருங்கியவனின் முதல் ஸ்பரிசம். புவனா மெய் மறந்து, தன்னை இழந்து நின்றாள். சேகர் அவள் கையை மெல்லத் தன் உதட்டில் வைத்து முத்தமிட்டான். அவளை அப்படியே தன் உடலுடன் சேர்த்து அணைத்துக் கட்டிக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தை அடக்கிக் கொண்டான். உணர்வுத் தாக்கலையும் மீறிய சுயக்கட்டுப்பாடு அவனுக்கு வரம் பிட்டது.

''புவனா, நாம் எவ்வளவு தூரம் பிரிஞ்சாலும் நம்ம மன நெருக்கம் மட்டும் குறையவே கூடாது. நீ என்னிக்கும் இன்றைக்குப் போலவே இருப்பேன்னு சத்தியம் செய்து தா!''

அவன் பற்றியிருந்த புவனாவின் கை அவன் கைக்குள் வேகமாக நெருங்கியது. ''புவனா!'' சேகர் நெகிழ்ச்சியுடன் அழைத்தான். ''நம்ம ரெண்டு பேருக்குமான உறவு எப்படிப் பட்டதுன்னு எனக்குப் புரியல்லே. ஆனா அதோட பலத்தை என்னால் உணர முடியறது. அது எனக்கு நிறையத் தைரியத்தையும், தன்னம்பிக்கையையும் சந்தோஷத்தையும் தர்றது.''

''எனக்கும்தான்!'' என்று புவனா மெல்லிய குரலில் சொன்னாள்.

''நான் வாழ்க்கையிலே என்னவெல்லாமோ லட்சியங்களும் கனவுகளும் வைத்திருக்கேன். எங்கப்பாவை விடவும் பெரிய இன்ஜினியராக ஆகணும். கம்ப்யூட்டர் துறையிலே நிறைய ஆராய்ச்சி செய்யணும். சொந்தமாக ஒரு கம்ப்யூட்டர் கம்பெனி ஆரம்பிக்கணும். இசையைப் பற்றி நிறைய ஆராய்ச்சிகளைக் கம்ப்யூட்டர் உதவியுடன் செய்யணும். இன்னும் எத்தனை எத்தனையோ... உன்னோட அன்பு இருந்தால்தான் என்னால் இதெல்லாம் செய்ய முடியும் புவனா.''

''நீ படித்து முன்னேற நான் என்ன விதத்தில் உதவி செய்ய முடியும் சேகர்?''

''உனக்கு இப்போது புரியாது புவனா!'' சேகர் சற்றே விலகி நின்று பெருமூச்சுவிட்டான். ''நான் அமெரிக்காவுக்குச் சென்ற பிறகு புரிந்து கொள்வாய். பிரிவு உனக்கு நான் பேசியதன் அர்த்தத்தைப் புரிய வைக்கும்.''

புவனா தலைகுனிந்து நின்றாள்.

''புவனா! நான் உன்னைப் பற்றித்தான் கவலைப்படறேன். நான் மட்டுமல்ல உங்கப்பாவும்தான். உங்கம்மா உனக்கு நல்லாப் பாட்டு சொல்லித் தந்து மேடையேற்ற விரும்பறதிலே தப்பு ஏதுமில்லே. ஆனா அவங்க அதுக்காக கையாள்கிற குறுக்கு வழி உன்னை அழிச்சிடுமோன்னு எனக்குப் பயமாயிருக்கு. உங்க வீட்டுக்கு வர்ற ஆட்கள் எவ்வளவு மோசமானவர்கள்னு ஊரிலே எல்லாருக்கும் தெரியும். ஏன் உங்கம்மாவுக்கு மட்டும் புரியவில்லே?''

தன் தாயைச் சேகர் குறை கூறுவதைப் புவனா விரும்பவில்லை. ''ஆமாம் இந்த ஊரிலே இருந்தால் தேங்காய் மூடிக் கச்சேரிக்குக் கூட வாய்ப்புக் கிடைக்காது. அங்கெல்லாம் முன் பணமே நானூறு ஐந்நூறுன்னு கொடுக்கிறாங்க. மெட்ராஸுக்குக் காசில்லாமல் அழைச்சுக்கிட்டுப் போறாங்க.''

''காசுக்காக எதை வேண்டுமானாலும் செய்வியா புவனா. உனக்கு இன்னும் மன முதிர்ச்சியே வரவில்லே. உன் படிப்பு, எதிர் காலத்தையும் உங்கம்மா கெடுத்துடுவாங்க.

கல்லில் நார் உரித்தவர்!

சுனில் காவஸ்கர் பண விஷயத்தில் மிகவும் உஷாரானவர் என்பது ஜகத் பிரசித்தி. பம்பாய் திரைப்பட நட்சத்திரங்களுக்கு உடை தைக்கும் 'டார்ஜி' என்ற தையல் நிறுவனத்தின் உரிமையாளர், சமீபத்தில் காவஸ்கரைச் சந்தித்து, அவருக்கும் அவரது சகாக்களுக்கும், சட்டைகள் தைத்துத் தருவதாகச் சொன்னார். இவர் விளம்பரத்துக்காகவோ அல்லது கிரிக்கெட் வீரர்கள் மீதுள்ள பற்றுதலாலோதான் இப்படிச் செய்ய முன் வந்திருப்பதாக நினைத்து காவஸ்கரும் சரி என்று சொல்லிவிட்டார். ஆனால் சட்டைகளுடன் 'பில்' வந்தபோது காவஸ்கர் 'கிளீன் போல்டு' ஆனார்!

ஆதாரம்: ஸண்டே

— சம்பத்குமாரி

நீதான் உன்னைக் காத்துக்கணும்....''

''சரி, எங்கம்மாவுக்குத் தெரியாதது, பெரிய தாத்தா உனக்குத் தெரியுமாக்கும்'' ஸ்பரிச புளங்கிதத்திலிருந்து ஏற்கெனவே விடுபட்டிருந்த புவனா அவனுடன் வாதிடத் துவங்கினாள்.

சேகர் மெல்ல அவள் தோளில் தட்டினான். ''கோபப்படாதே... உன் நல்லதுக்குத் தான் சொன்னேன்.''

''நான் கிளம்பட்டுமா சேகர்?''

''ம், கிளம்பு, ஆனால் நான் சொன்ன எதுவும் மறக்கக் கூடாது, குறிப்பாக என்னை மறக்கக் கூடாது. என்ன ...?''

புவனா அழகாகக் கண் விரியச் சிரித்தாள். சேகரின் மனத்தில் ஆயிரம் பூக்களை அள்ளிச் சொரிந்துவிட்டு வேகமாக ஓடி வெளியேறினாள்.

வீட்டில் நுழைய முற்படும்போதே, மூடிய கதவினுள் அப்பா உரத்துக் கத்தும் சத்தம் கேட்டது. அப்பா, அப்பாவா... இப்படிக் கோபித்துக் கொள்கிறார்? அப்பா வகுப்பில் பாடம் எடுக்கும்போதோ, தவறு செய்த மாணவனைத் திட்டும்போதோ கூடக் குரல் இப்படி உயராதே. என்ன விஷயம்? புவனாவுக்குப் பயமாக இருந்தது. மனம் திகிலில் படபடவென்று அடித்துக் கொண்டது.

கதவைத் தட்டலாமா... கோபமாக ஒருவர் கத்தும்போது எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று தெரிந்து கொள்ள அவளுக்கு இதுவரை வாய்ப்பே வந்ததில்லையே. புழக்கடை வழியாக உள்ளே சென்றுவிடலாம். வீட்டைச் சுற்றி சென்று பின் புறக் கதவைத் தள்ளினாள். நல்லவேளை கதவு தாழ் போடாமல் வெறுமே மூடப்பட்டிருந்தது. சத்தமில்லாமல், தள்ளித் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தவள், பின்புற ரேழியில் தன்னைப் போலவே மிரண்டபடி லோகுவும் நின்றிருப்பதைக் கண்டாள். ''என்ன விஷயம்?'' என்று அவளிடம் சைகையால் கேட்கவும், அவள் பதில் கூறாமல் தலையை மட்டும் அசைத்தாள். புவனாவும் அவள் அருகில் சென்று பதுங்கிக் கொண்டாள்.

''ஞானம் உன்னை, மனைவியாகத் தோழியாக ரொம்ப மரியாதையான ஸ்தானம் கொடுத்து நான் வச்சிருக்கேன். ஆனால் நீ என்னை ஒரேயடியாகக் கீழே தூக்கி எறிந்து மிதிக்கப் பார்க்கறே. அது ஒருகாலும் முடியாது. என்னைக் கேட்காமல் இந்த வேலையெல்லாம் நீ செய்ய முடியாது. புவனாவை உன் கைப்பொம்மையாக ஆட்டி வைக்க முயன்றே, நான் ரொம்பப் பொல்லாதவனாகிவிடுவேன். புவனா உன்னோடு வரப் போவதில்லை. ஒன்பது வகுப்புக்களை ஒழுங்காகப் படிச்ச பெண்ணைப் பரீட்சை எழுத விடாமல் கெடுக்க உனக்கு எப்படி மனசு வந்ததுன்னு கேட்கறேன்... பெத்த தாயார் எவளாவது தன் மகளுக்கு இந்தத் துரோகம் செய்வாளா?''

''எதுங்க துரோகம், நாங்கள்ளாம் படிச்சு என்னத்தைக் கிழிச்சுட்டோம்? அவ பரீட்சை எழுதல்லேன்னா ஒண்ணும் குடி முழுகிப் போகாது. அடுத்த வருஷம் எழுதறா.''

''குடி முழுகாது. ஆனா ஒரு வருஷப் படிப்பு போகும். படிப்பு இல்லேன்னா வாழ்க்கையே போகும்.''

''ஆமா, நீங்க படிச்சுச் சாதிக்கிறதைத் தான் தெனம், தெனம் பார்க்கறேனே. என்னால் எந்த முடிவையும் மாத்திக்க முடியாது. ஏன்னா, நான் கை நீட்டி அச்சாரம் வாங்கிட்டேன்.''

''புருசன்கிட்ட சொல்லாம எவன்கிட்டேயோ கைநீட்டிப் பணம் வாங்கிட்டேன்னு சொல்ல உனக்கு வெட்கமா இல்லே. நீ என் பெண்டாட்டியா வாழ்க்கைப்பட்டு வந்த அந்த ஞானமான்னே சந்தேகமா இருக்கு. அந்தக் கேடு கெட்டவன் முகத்திலே அவன் தந்த காசை வீசி எறி. இனிமே என் பொண்ணுக்கோ, உனக்கோ அரசியல் சம்பந்தமே வேண்டாம்.''

''நான் அச்சாரத்தைத் திருப்பித் தரவும் மாட்டேன். தரவும் முடியாது. நான் அந்தப் பணத்துக்குத் துணிமணி எடுத்தாச்சு. இனிமேயும் உங்க கைப்பொம்மையா நான் ஆடப் போறதில்லே. வியாழக்கிழமை நான் புவனாவைக் கூட்டிக்கிட்டு அவங்களோட போகத்தான் போறேன்...'' ஞானம் அழுத்தமாகக் கூறினாள்.

''நான் தடுத்தால்....''

''தாண்டிட்டுப் போவேன்'' ஞானத்தின் பதிலில் முடிவிருந்தது.

(தொடரும்)

ஒரு பரிமாணம்

ஐந்து மணிக்கு நலுங்கு என்றாலும் நாலரை மணியிலிருந்தே அவசரப்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

சைக்கிளில் விரைந்து போய்ப் பூ வாங்கி வந்தான் ஒருத்தன்.

இரண்டு பேர் பெரிய ஜமுக்காளங்களை உதறி விரித்தார்கள்.

வசந்தி — தங்கை — ஒரு தடவை கதவைத் திறந்து பார்த்துவிட்டுத்" தயாரா அண்ணா?" என்று கேட்டாள்.

அவசரம் அவசரமாக டிபனை முடித்து விட்டு, மாப்பிள்ளை பெண்ணைக் கிண்டல் செய்யவும், கேலியாகப் பேசவும் வயது வித்தியாசமின்றி ஆணும் பெண்ணுமாக உறவின் கூட்டம் சூழ்ந்து கொள்ள...

எனக்கு மூச்சு முட்டியது.

தலைநிறையப் பூவைச் சுமந்து கொண்டிருந்த பெண்ணிற்கு இன்னும் வெட்கம்; நிமிர்ந்து பார்க்கத் தயக்கம்.

மாமன் மகள்தான் என்றாலும்.... புதுப் பெண் மாதிரி.

நேர் எதிர்த்தாற்போல் ஒரு நாடா நாற்காலியில் மாமா உட்கார்ந்து கொண்டு....

இரண்டு மாதங்களுக்குமுன் நடந்த ஸ்கூட்டர் விபத்தில் அவர் கால் ஊனமானது.

அந்த நிகழ்ச்சிதான் அவரின் பல திடீர்த் தீர்மானங்களுக்குக் காரணமாகியது.

அதுவரை பணம் தந்த தைரியத்தில் சொந்த பந்தங்களைப் பாராமுகமாய் இருந்தவர் — தன் ஆண் வாரிசற்ற சொத்துக்கு ஆசைப்பட்டுத்தன் பெண்ணைக்கண்டவனிடமும் கொடுத்துவிடக் கூடாதென்ற அக்கறையில் அம்மாவிடம் கேட்டிருக்கிறார் — என்னை!

அம்மாவையும் தப்பு சொல்லிப் புண்ணி



புரிகிறது

நா. நாகராஜன்

யம் இல்லை. ஆண் துணையில்லாமல் பணக் கஷ்டத்தின் நடுவே வாழ்க்கையைக் கழித்த அம்மா பணத்திற்கு ஆசைப்பட்டதில் தப் பில்லைதான்.

மாமாவின் தயவில்தான் வசந்தியின் திருமணம் தடபுடலாக நடந்தது.

எல்லாருக்கும் வாழ்க்கை கிடைத்தது மாமாவின் மனமாற்றத்தால்தான்.

இருந்தாலும் இழப்பு வித்யாவுக்கு மட்டும் தான்.

சாதாரண இழப்பா அது...?

அம்மாவின் பேச்சு சாமர்த்தியத்தால் வசந்தியின் வேண்டுகோளால்... அந்தப் பெண் தன் மனக்கதவை மூடிக் கொள்ள தீர்மானித்துவிட்டாள்.

''வித்யா!'' — மறுபடியும் அவள் நினைவு கள்....

''மாப்பிள்ளை... என்ன நினைப்புல இருக்கீங்க...? பொண்ணு அரிசி வைச்சுண்டு பருப்பைக் கேப்பா. காது கேட்காத மாதிரி இருந்துடுங்கோ... இன்னிக்கு ஒருநாள் மட்டும்தான் அப்படி'' என்று ஒருத்தர் தமாஷ் செய்ய, கூட்டம் சிரித்தது.

மணப் பெண்ணுக்கும் இலேசாகச் சிரிப் பும் தைரியமும் வந்தன.

இன்னொரு தடவை கேட்டான்...

'அரிசி கொடுத்துப் பருப்பா? எப்படி? உங்க அப்பா பணத்தைக் கொடுத்து என் காதலையேவாங்கிட்டாரே...அந்தமாதிரியா?' மனத்துக்குள் கேட்டுக் கொண்ட கேள்வி கள்.

அப்பளம் உடைத்து நொறுக்கப்பட்டது. எங்கள் மனங்களைப் போல....

கர்லுக்கு மருதாணி மாதிரி குங்குமம் தடவி விட்டு, சீப்பு வைத்துத் தலைவாரிப் பொட்டு வைத்து.... கண்ணாடி காட்டும் பொழுது... மனக் கண்ணில் வித்யாவின் முகம் தெரிந்





தது. அந்த ஒரு நிமிஷத்தில் என் முகம் பிரகாசமாகியது.

ஒருநாள் வசந்தியின் பள்ளித் தோழியாய் விழி நிறையத் தயக்கமும் அப்பாவித்தனம் நிறைந்த முகமுமாய் நுழைந்த வித்யா...

"இதுதான் எங்க அண்ணன்" — வசந்தி அறிமுகப்படுத்தினாள்.

"வணக்கம்.

நான் சிரித்துக் கொண்டே அவளிடம் நிறையப் பேசினேன்.

அவளின் ரசனைகளை அறிந்து கொண்டேன். அவள் இத்தனை பேசுகிற, சிநேகம் காட்டுகிற வசந்தியின் அண்ணனாய் என்னை எதிர்பார்க்கவில்லை.

போகும்போது, "ஒரு நாள் வீட்டுக்கு வாங்க" என்று அழைத்தபோது, பின்னாலிருந்து வசந்தி என்னைப் பார்த்துக் கண் சிமிட்டினாள்.

"என்ன அண்ணே.... முதல் நாள் பழக்கத்துலேயே அசத்திட்டே! எவ்வளவு பேச்சு... எங்கிட்டக்கூட இவ்வளவு பேச மாட்டே..." என்று வசந்தி பிறகு கேட்ட போது, சிரிப்பு வந்தது.

வாஸ்தவம்தான். அதிகம் பேசாத, படிப்பு உண்டு நான் உண்டு என்றிருந்த என்னைப் பேச வைத்தது வித்யாதான்.

அவளிடம் மட்டும்தான். அந்த அப்பாவித்தனமான, எதையும் அக்கறையுடன் கேட்கிற, கிண்டல் செய்யாத சிநேகிதியுடன்தான் பேச மனம் வருகிறது.

நிறைய விஷயங்களில் ரசனை ஒன்றாகி... புதிதாக ரசிப்பதும் ஒரே சிந்தனையில் என்றாகி கேரம், சீட்டு விளையாட்டுக்களில் கூட அவளே பார்ட்னராகி....

ப்ரிட்ஜ் கேம் விளையாடச் சொல்லிக் கொடுத்து ஞாயிறு ஹிண்டுவில் வருகிற க்ராஸ் வர்டை இரண்டு பேரும் சேர்ந்து விவாதித்து....

அவளின் சிந்தனை சக்தியில் அசந்து போய்...

வசந்தி மட்டும் டிகிரி சேர்ந்தபோது அவர்கள் உறவில் ஒரு திரை விழுந்தது.

"வசந்தி, வித்யா காலேஜ் போகலையா?"

"வசதிப்படலை.... டைப்பிங் சேரப் போறா..."

ஒருநாள் தனிமையில் சந்தித்தபோது, தயங்கித் தயங்கிச் சொன்னேன்."ஏன் வித்யா, இப்போ என் வீட்டுக்கு அடிக்கடி வர்ற தில்லை. வசந்தி மட்டும்தான் உன் சிநேகிதியா? நான் இல்லையா.... என்னைப் பார்க்க வரக் கூடாதா? அவளுக்காவது புது சிநேகிதிகள் கிடைச்சிருக்கலாம்... எனக்கு?" எப்படிப் பேசினேனோ தெரியவில்லை.

என் பேச்சு முழுவதையும் அவள் கேட்டாளா என்று தெரியவில்லை.

என் குரலில் ஓர் இரக்கம், கனிவு யாசகம் இருந்தது எனக்கே தெரிந்தது.

அந்த வார்த்தைகளை அந்த அர்த்தத்தில் அப்படிப் பேச வேண்டும் என்று நான் நினைத்திருக்கக் கூட இல்லை.

அடுத்த வாரம் அவள் சிரித்துக் கொண்டே உள்ளே நுழைந்தபோது என் வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட மாதிரி தோன்றியது.

"இப்போ எல்லாம் வித்யா உன்னையே தேடி வர ஆரம்பிச்சுட்டா. காதலா..." என்று வசந்தி கேட்டபோது கோபம்தான் வந்தது.

ஊருக்குக் கதை தேவையாக இருந்தது. பேச்சுக்கு அடுத்தவரின் அந்தரங்கம் அவசியமாக இருந்தது.

முகத்துக்கு நேராகப் பேசாமல் முதுகுக்குப் பின்னால் ஆயிரம் கதைகளாய்...

வித்யாவுடன் பேசிக் கொண்டிருக்கும் நேரத்தில்தான் வாசலில் கார் வந்து நின்றது.

மொட்டைக் காலும், கட்டையுமாக இறங்கிய வரை முதல் பார்வையில் அடையாளம் தெரியவில்லை. அம்மாதான் கூப்பிட்டாள்.

"வா அண்ணே...."

வித்யா விடைபெற்றாள்.

வந்த அண்ணன் சும்மா வரவில்லை. அம்மா சொல்கிற மாதிரி லக்ஷ்மியையும் காரில் கூடவே அழைத்து வந்திருக்கிறார்.

லக்ஷ்மி வந்ததும் வித்யா வெளியேறி விட்டாள்.

பணமும் உறவும் அம்மாவைப் பிரமிக்க வைத்தன.

வசந்தியிடம் என்னைப் பற்றிய மதிப்பு உயர்ந்து போனது.

என் ஸ்தானம் உணர்த்தப்பட்டது. அதில் என் காதல் அழிக்கப்பட்டது.

அம்மாவின் வேண்டுகோளின்படியோ அல்லது வசந்தி கேட்டுக் கொண்டதன் பேரிலோ வித்யா பிறகு வரவில்லை.

வசந்தியின் கல்யாணத்தின்போது மட்டும் தலையைக் காட்டிவிட்டுப் போய்விட்டாள்.

பேச நேரமில்லை.

வசந்தி அவளை மாமாவின் பெண்ணிடம் அழைத்துக் கொண்டு போய் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தாள்.

அம்மா மிகவும் சந்தோஷத்திலிருந்தாள்.

வசந்தி தன் புதுக் கணவனைத் தன் தோழிகளுக்கு அறிமுகம் செய்து கொண்டிருந்தாள்.

வசந்தியின் கல்யாணத்துக்கு வித்யா கொடுத்த கவரில் — என் மனமார்ந்த வாழ்த்துக்கள் — எல்லாருக்கும் — என்றிருந்த

போது — புரிந்து போனது!

அவளிடம் எல்லாவற்றையும் சொல்லியிருக்கிறார்கள்.

நாங்கள் பேசக்கூட நேரம் தராமல் பெண்களே பேசிக் காரியத்தை முடித்திருக்கிறார்கள்.

ஊர் அந்தக் கதைகளையெல்லாம் மறந்து இன்றைய சந்தோஷத்தில் இதோ என்னைச் சுற்றி உட்கார்ந்து கொண்டு, கண்ணாடி காட்டிக் கொண்டிருக்கிறது.

இதுதான் வாழ்க்கை! இங்கே இப்படித்தான் இருக்க வேண்டும்.

'காதல் தியாகம்—இந்த மண்ணின் சாபம்!

கண்ணாடி திருப்பிக் காட்டப்பட்டது. ஒரு கிண்டல் பேர்வழி அப்படிக் காட்டச் சொன்னார்.

பூப்பந்து உருட்டப்பட்டது. விட்டுடாதே. தக்க வைச்சுக்கோ. அவள் இழுக்கட்டும்.

இழுத்துவிட்டாளே... என் வித்யாவிடம் இருந்துஎன்னையேஇழுத்துவிட்டாளே. அதை விடவா.... இது...

பூப்பந்து கை நழுவியது!

''மாப்பிள்ளை சரியில்லை! கவனமா இருங்க மாப்பிள்ளை.''

முதல் இரவு.

சினிமாக்களிலும் கதைகளிலும் பார்த்த, படித்த, மிகச் சில சமயங்களில் வித்யாவுடனும் என்று கற்பனை செய்து கொண்ட இரவு. இன்று நிஜ இரவாய்...

என்ன பேச? எதைப் பேச ஆரம்பித்தாலும் அவள் பெயர் குறுக்கிட்டுவிடக் கூடாது.

அவளே பேச ஆரம்பித்தாள்.

''என்னை உங்களுக்குப் பிடிச்சிருக்கா? நீங்க ஒரு பெண்கிட்டே சிநேகமா இருந்ததை வசந்தி சொன்னாள். அப்பா உங்களை விலைக்கு வாங்கிவிட்டதால உங்கள் காதலை நான் பிரிச்சுட்டதா நினைச்சு, தயவு செய்து என்னை ஒதுக்கிடாதீங்க. என் சம்மதம் கேட்கவே இல்லை. எனக்கு உங்களைப் பிடிச்சிருக்கு. அந்தப் பெண்ணை நினைச்சாலும் பாவமாத்தான் இருக்கு. என்னால் இதுல எந்த முடிவையும் ஏற்படுத்த முடியாது. எனக்குக் கிடைச்ச வாழ்க்கையை ஏத்துண்டேன். அவ்வளவுதான்...'' என்று சொல்லிவிட்டு அமைதியானாள்.

இதுவரையில் என்னையும் வித்யாவையும் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தவனுக்கு இந்தக் கல்யாணத்தின் மூலம் இவளின் எதிர்காலமும் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது என்ற விஷயம் இப்போதுதான் மனத்தில் இடித்தது.

பணக்காரப் பெண் என்ற கர்வம் இல்லாமல், அப்பாவின் தப்பை ஏற்றுக் கொண்டு, வித்யாவைப் பாராட்டி, என்னையும் ஏற்றுக் கொண்டு அவள் பேசியது... மிகவும் பிடித்திருந்தது.

அவளை மெதுவாக அணைத்துக் கொண்டு படுக்கையில் சாய்ந்தபோது எதிர்க்கண்ணாடியில் அவள் முகம் அழகாய்த் தெரிந்தது!

11

சுபா

சின்னச் சின்ன கனவுகள்

பயணத்தைத் தொடருமுன்......
போன ஸ்டாப்பிங் வரை:

அன்புக் கணவன் பாபு இறந்ததும், இந்திராவுக்கு வேறு வழியில்லை. ஒன்பது வயது மகன் நந்தகுமாருடன் அண்ணன் வீட்டுக் கதவைத் தட்டுகிறாள். அண்ணன் ஜெயபாலும் சரி, அண்ணி சுகந்தியும் சரி, வார்த்தைகளில் விஷம் தெளிக்கிறார்கள். எப்போது இடத்தைக் காலி செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறார்கள்.

உபயோகமில்லாத பாரமாய் இருக்க இந்திராவுக்கு இஷ்டமில்லை. அண்ணனின் நண்பன் பாண்டியன் மூலம், அவன் வேலை பார்க்கும் தீப்பெட்டித் தொழிற்சாலையில் கூலி வேலைக்குச் சேர்கிறாள். நந்துவை ஸ்கூலில் சேர்க்கிறாள். நைஸ், நைஸ் என்று பேசும் தொழிற்சாலை முதலாளி மாயகிருஷ்ணன், துணையில்லாத இந்திரா பட்சியை எப்படியும் தன் கூண்டில் மடக்கிப் போடலாம் என்று திட்டம் தீட்டுகிறார்.

இந்திராவுக்குப்பாக்டரியில்பரிமளா அறிமுகமாகிறாள். கன்னம், கபடுகளைத் தன் அகராதியில் சேர்க்காத பெண். சூப்பர்வைசர் தங்கராஜ், அடுத்த மாதம் நகைச்சீட்டு முடிந்து, தங்கத் தாலி வாங்கிப் பரிமளாவின் கழுத்தில் கட்டத் துடிப்போடு காத்திருப்பதும் இந்திராவுக்குத் தெரிய வருகிறது.

கூலி வாங்கிக் கொள்ள முதலாளி கூப்பிட்டனுப்ப, அவருடைய அழுத்தமான 'வாங்கிக்க இந்திரா'வில் விபரீதம் இருக்கிறது. அவருடைய பிடியிலிருந்து விடுபட்டு இந்திரா வெளியே ஓடுகிறாள். 'நாளையிலேர்ந்து நான் வேலைக்குப் போகலே.' காரணம் கேட்பவர்களிடம் 'உடம்பு சரியில்லே' என்று கூறிச் சமாளிக்கிறாள்.

வீட்டு வேலைகள் அதிகரிக்க, பாண்டியன் எப்போதும் சிரித்த முகத்துடன் "நான் உதவட்டுமா?" என்கிறான். நிஜமான பரிவு, உண்மையான கவலை. ஒருநாள், "இந்திரா, உங்களை நான் கல்யாணம் செய்துக்கலாம்னு..." வரை தயக்கத்துடன் வளர்ந்து விடுகிறது. அவனுடைய அப்பழுக்கில்லாத குணம் ஒருபுறம் தூண்டினாலும், இந்திரா பதில் சொல்லாமல் மழுப்புகிறாள். முடிவெடுக்க பயம்.

இடையில் நந்தகுமாரின் ஸ்கூலில் ஆண்டு விழா. ரௌடிகள் கலெக்டருக்குக் குறி வைத்து எறிந்த அந்த அரைச் செங்கல், பரிசு வாங்கப் போன நந்துவின் நெற்றியைத் தாக்க, அத்தனை ஒலிபெருக்கிகளிலும் அவனுடைய தீனமான "அம்மா" என்ற அலறல்.

(ஃஹா... ஃஹா... பத்து ஸ்டாப்பையும் ஒரே ஓட்டமாய் ஓடி வந்தது மூச்சிரைக்கிறது! இனி...)

ஆஸ்பத்திரி வாசலில், ஜீப் டயர் தேய நின்றது.

கலெக்டரின் ஜீப் என்ற வாசனை உள்ளேயிருந்த இரண்டு டாக்டர்களையும் வாசலுக்கு இழுத்திருந்தது.

டிரைவர் குதித்து, பின்புறக் கதவை அவிழ்த்துவிட, பாண்டியன் நந்தகுமாரைச் சுமந்து இறங்கினான். அவன் கட்டியிருந்த வேட்டி குறுக்கில் கிழிக்கப்பட்டு நந்தகுமாரின் நெற்றியில் சுற்றப்பட்டுச் சிவப்பாகிக் கொண்டிருந்தது. பூப்போன்ற ஒரு ஸ்ட்ரெச்சர் நீண்டு நந்தகுமாரை ஏந்திக் கொள்ள, கலெக்டருடன் டாக்டர்களும் உள்ளே விரைந்தனர்.

சற்றுத் தயங்கியபடியே இந்திரா ஜீப்பிலிருந்து இறங்கினாள். அழுகையின் சகல உயரங்களிலும் சஞ்சரித்து வந்த களைப்பு அவளிடம் இருந்தது. செடியின் நுனியில் ரசனையோடு பூத்திருந்த மலரைத் திடீரென்று யாரோ பறித்துப் போய்விட்டதுபோல் ஒரு வெறுமை அவள் பார்வையை மெழுகியது.

"ஒண்ணும் பயப்படாதீங்க. சின்ன அடி தான்..." என்றான் பாண்டியன். "கலெக்டரே நேரே வந்திருக்காரு. டாக்டருங்க சொந்தப் புள்ளே போல் பாத்துப்பாங்க."

கலெக்டர் காஷுவாலிட்டி வார்டை விட்டு வெளியே வந்தார். இந்திராவை நெருங்கிப் பெரிதாய்ப் புன்னகை வீசினார்.

"கவலைப்பட ஒண்ணுமில்லேம்மா. நெத்தில ஒரு சின்ன கட். தையல் போட்டாச்சு. ரெண்டே நாள்ல எல்லாம் சரியாய்ப் போயிடும். வீட்ல அவன் ரெஸ்ட் எடுக்க வசதி இருக்காம்மா?"

வார்த்தைகள் நழுவி வந்த அதே நேரம் பார்வை இந்திராவின் தோளோரப் புடைவைக் கிழிசலை வருடியது. அவள் அவசர மடிப்பில் அதை மறைக்க முயன்றதைக் கவனிக்காதவர்போல, "இங்கேயே ரெண்டு நாளும் இருக்கட்டும். டாக்டர் கிட்டே சொல்லிடறேன்..." என்று உள்ளே நடக்க, இந்திராவும் பாண்டியனும் அவரைத் தொடர்ந்தார்கள்.

"உங்க பேரு என்னம்மா?"

"இந்திரா" என்றான் பாண்டியன். சட்டை

யில் திட்டாய்க் காய்ந்துவிட்ட நந்தகுமாரின் ரத்தம் கருஞ்சிவப்பாக நிறம் மாறியிருந்தது.

''பையன் தைரியமாத்தான் இருக்கான். நீங்க பயமுறுத்திடாதீங்க...'' என்றார். படுக்கையை நெருங்கி, ''அம்மா வந்திருக்காங்க, நந்தகுமார்'' என்று அவன் கையில் தட்டிக் கொடுத்தார்.

''அம்மா....''

''நந்து...''

''ஏம்மா அழறே? எனக்கு ஒண்ணுமேயில்லேம்மா. சூடா ஒரு காப்பி சாப்பிடணும் போல இருக்கு.''

''நான் வாங்கி வரேன்...'' என்று பாண்டியன் உடனே விலகினான்.

டாக்டர் மறுபடியும் கலெக்டருக்காக ஸ்டெத்தஸ்கோப்பை நந்தகுமாரின் நெஞ்சில் பொத்தி எடுக்க, ''இப்ப எப்படி இருக்கே நந்தகுமார்?'' என்றார் கலெக்டர்.

''நல்லா இருக்கேன், சார்...''

''நான் படுத்திருக்க வேண்டிய பெட் இது. நீ படுத்திருக்கே....'' என்றார். சற்று குனிந்து அவன் கண்களை நேரடியாகப் பார்த்தார்.



''நந்தகுமார், கையை நீட்டு....'' என்றார் ரகசியமாக.

''ஏன் சார்?'' என்றான், கையை நீட்டினான்.

''இந்தா அம்மாவுக்கு நல்லதா ஒரு புடைவை வாங்கிக் கொடு...'' என்று ஒரு நூறு ரூபாயை அவன் கையில் அழுத்தினார்.

''வேண்டாம் சார்...'' நந்தகுமார் கையை நத்தை போல் சுருட்டிக் கொண்டான். ''அம்மாவுக்கு நானே சம்பாதிச்சு ஒரு நல்ல பொடவை எடுத்துக் கொடுப்பேன் சார்.''

''ஸ்மார்ட் பாய்'' என்றார் கலெக்டர். அவனுடைய பெருமிதமான கண்களைச் சந்தித்து.

சர்க்கிள் இன்ஸ்பெக்டர் வந்து விறைப்பானதும், ''என்ன மேன் ஆச்சு?'' என்றார்.

''ரெண்டு பேரு சார். தண்ணி கேஸ். பிடிச்சுட்டோம்.''

''ஸோ, நான் வரட்டுமா நந்தகுமார்?''

''சரி சார்'' என்றான் பிரகாசமாக.

''வரேம்மா...''

பாண்டியன் எங்கேயோ சம்பாதித்த ஃப்ளாஸ்க்கோடு வார்டில் நுழைந்தான்.

''நீங்கதான் ரொம்ப ஹெல்ப் பண்ணீங்க. தாங்க்யூ'' கலெக்டர் அவனிடமும் ஒரு புன்னகையை வீசிவிட்டு நடந்தார்.

இந்திரா அப்போதுதான் பாண்டியனைச் சரியாகப் பார்த்தாள். உடனே பதறினாள்.

''ஐயோ, உங்க சட்டையெல்லாம் கறையாயிடிச்சு.''

''காப்பி உங்களுக்கும் சேர்த்து வாங்கிட்டு வந்திருக்கேன்'' என்றான் பாண்டியன். ''வேறே ஏதாவது வேணுமா?''

''உங்களுக்கு எவ்வளவு கஷ்டம்!''

''நான் போய் ஜெயபால்கிட்ட சொல்லிட்டு, அப்படியே ஸ்கூல்ல சைக்கிளைக் கண்டு பிடிச்சு எடுத்திட்டு வரேன். நீங்க நந்து பக்கத்திலேயே இருங்க....''

பாண்டியன் மின்னல் போல விலகி விட்டாலும், அந்த அறையின் ஒவ்வொரு சதுர மில்லி மீட்டரிலும் இந்திராவின் மனத்திலும் வியாபித்திருந்தான்.

மாயகிருஷ்ணன் அவருடைய பிரத்யேக அறையில் மெத்தையில் சாய்ந்திருந்தார். இந்திரா காயப்படுத்திய இடத்தை முழுக்கை சட்டை மறைத்தது. சுருட்டைப் பொருத்திக் கொண்டார். சின்ன கிளாஸில் திரவம் ஊற்றி அதில் ஐஸ் கட்டிகளை 'சிலுங் சிலுங்' என்று சேர்த்தார். மூக்கில் உள்காயம் மெலிதாக வலித்தது.

''ரத்தினம்.''

''சொல்லுங்க மொதலாளி...''

ஒரு விசுவாச நாய் போல் ரத்தினம் பணிந்து நின்றான்.

''விசாரிச்சியா?''

''அந்த இந்திராப் பொண்ணுதானுங்களே. அது அமுக்கமாத்தான் இருக்கு. இங்கே நடந்ததுஎதையும்வெளியே விட்டுக்கலீங்க.''

''படியும்னு சொன்னியேடா மடப்பய மவனே...''

''தப்புக் கணக்குப் போட்டுட்டேன் மொதலாளி. பாண்டியனுக்கு வேறே அந்தக் குட்டி மேல ஒரு கண்ணுன்னு கேள்விப்பட்டேன் மொதலாளி....''

மாயகிருஷ்ணன் தேள் போல் திரும்பினார். ரத்தினத்தின் கன்னத்தில் புறங்கையால் வெடித்தார்.

''இப்ப சொல்லுடா... இப்ப சொல்லு. பாண்டியன் ஆளுன்னு... அவன் யூனியன் லீடரு. அது இதுன்னு வெவகாரத்துக்குன்னே அலையறவன்.''

''இந்த மாதிரி அசிங்கத்தையெல்லாம் அந்தப் பொண்ணு அவன்கிட்ட மூச்சு விடாது மொதலாளி....''

''ஆமா, இவரு காந்தி.... சொல்றதெல்லாம் கரெக்டா இருக்கும்....''

ரத்தினம் பதில் பேசாமல் அவர் கிளாசில் இன்னும் கொஞ்சம் திரவத்தைச் சேர்த்தான்.

''என்னடா, தயங்கித் தயங்கி நிக்கறே?''

''முத்து வந்திருக்கான் மொதலாளி...''

''எந்த முத்துடா?''

''என் தம்பிங்க... சாராயம் காய்ச்சி ஜெயிலுக்குப் போய்ட்டுக் கொத்தவரங்கா மாதிரி வெளியே வந்திருக்காங்க. அவனுக்கு ஒரு எடத்தில ஒழுங்கா வேலே கெடைச்சிட்டா, எனக்கு நிம்மதியாயிருக்கும்.''

''நம்பிக்கையான ஆளாடா அவன்?''

''நெருப்பை வச்சு நாக்கில சுட்டாலும் இங்கஇருக்கறவிஷயத்தைவெளியேசொல்ல மாட்டாங்க....''

''அப்படி ஒரு ஆளு பட்டாசுக் கம்பெனில தேவைதான்.''

''மத்தாப்பு வேலைக்குங்களா?''

''மத்தாப்பு இல்லேடா... அதுக்கு மேலே... அண்டர்கிரவுண்டுல ரகசியமா செய்யற வேலே.... எங்கே உள்ளே கூப்பிடு பாப்போம்.''

மாயகிருஷ்ணன் சுருட்டை ஆழமாக இழுத்துவிட்டு, திரவ கிளாஸை எடுத்துக் கொண்டார்.

ஆஸ்பத்திரியில் இரண்டாவது நாளே நந்தகுமாருக்குப் போரடித்தது. டாக்டர்கள் மாறி மாறிக் கொடுத்த கலர் கலரான வைட்டமின் மாத்திரைகளை வெறுக்க ஆரம்பித்தான். அம்மா எப்போது வருவாள் என்று காத்திருக்க ஆரம்பித்தான்.

கலெக்டர் கையில் வைத்து அழுத்திய நூறு ரூபாய் இன்னும் நெஞ்சில் கனத்தது. அம்மாவுக்கு நல்ல புடைவை வாங்க வேண்டும். பணம்?

படுக்கையின் கசப்பு தாங்காமல் எழுந்து உட்கார்ந்த நேரம், இந்திரா ரூமுக்குள் நுழைந்தாள். கையில் தூக்கு ஊஞ்சல் ஆடியது.

''வாம்மா... வாமமா... வீட்ல ரொம்ப வேலையா, லேட்டாயிடிச்சே?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லேடா...''

''நான் உனக்கு ரொம்ப வேலே வைக்கறேன். இல்லேம்மா? நியாயமாப் பார்த்தா, நான்தானே வேலே செய்ஞ்சு உனக்குச்



அவள்: அந்த நடிகையை ஏன் தேர்தல் நடிகைங்க ளுங்க?

இவள்: அஞ்சு வருஷத்துக்கொருதரம் அவள் கல் யாணம் பண்ணிக்கிறதினாலதான்!

— லக்ஷ்மணு.

சோறு போடணும்?''

''இந்தமாதிரி உளறணும்னு யார் உனக்குச் சொல்லிக் கொடுத்தாங்க நந்து? ஏம்ப்பா, எதுக்கு அழுறே?''

''அம்மா, நான் வளர்ந்து பெரியவனாகி உன்னை ராணி மாதிரி வெச்சுக்கப் போறேன் பாரு...'' சடாரென்று அவன் கண்களில் ஒரு வெட்கம் சூழ, ''அம்மா, 'பாண்டியன் மாமா வராரும்மா. கூடவே யாரோ வராங்க?'' என்று கிசுகிசுத்தான்.

இந்திரா சட்டென்று மேலாடையை எடுத்து முகத்தைத் துடைத்துக் கொண்டாள். எழுந்து திரும்பிப்பார்த்தாள். பாண்டியனும், அவன்கூடத் தங்கராஜும் சேர்ந்து நுழைந் தார்கள்.

''வாங்க தங்கராஜு....''

''வேலையிலேர்ந்து நீங்க நின்னப்புறம் நான் பார்க்கவேயில்லை. இந்த விவகாரத்தை இப்பத்தான் பாண்டியன் சொன்னான்.'' ''இவர் தான் கலெக்டரா?'' என்றான் தங்கராஜ் நந்தகுமாரைப் பார்த்துச் சிரித்து.

பாண்டியன் ஃபிளாஸ்க்கை வைத்து விட்டு, பழங்களை ஓரமாய் அடுக்கினான்.

''இன்னிக்குத்தானே தையல் பிரிக் கறாங்க?'' என்றான்.

''ஆமாம்... மாமா, இவரு உங்ககூட வேலை பார்க்கறாரா?''

தங்கராஜ் உடனே கைகளைத் தட்டிக் கூப்பினான்.

''கும்பிட்டுக்கறேங்க... நாளைக்கு நம்ப பேட்டை வேலை ஏதாவது ஆவணும்னு ஐயா கிட்டதானே வரணும்?''

''கிண்டல் பண்றாரும்மா...'' என்றான் நந்தகுமார்.

''கலெக்டருக்கு நடக்கற உபசாரம் நடக்கு தாமே. ஒருநாள் ராஜான்னாலும் ராஜா தானே கலெக்டரய்யா?'' தங்கராஜ் விட வில்லை.

''நான் ஒரு நாள் இல்லாட்டி ஒரு நாள் கலெக்டரா இதே ஊருக்கு வரத்தான் போறேன்.''

''அடி சக்கை....''

''பரிமளா எப்படி இருக்குது தங்கராஜு?'' என்று இந்திரா குறுக்கில் பதிலுக்கு வெட்டி னாள். தங்கராஜ் என்னவோ தானே மணப் பெண் போல குனிந்து கொண்டான்.

''பரிமளா யாரு?'' என்றான் நந்தகுமார்.

''சொல்லுங்க தங்கராஜ்.''

''நான் யாரு?'' என்றான் தங்கராஜ், நந்த குமாரைப் பார்த்து.

''யாருக்கு?''

''ஒனக்கு?''

''அண்ணன்னு வெச்சிக்கங்களேன்...''

''அப்பப் பரிமளாவை அண்ணின்னு வெச்சிக்கயேன்.''

''ஓஹோ, அப்படியா சமாசாரம்?''

''ஆமா இவருக்கு எல்லாம் தெரியும். அப் படியா சமாசாரமாமே... கலெக்டரய்யா உங்களுக்கு என்ன பிஸ்கெட் பிடிக்கும்?''

''கிராக்—ஜாக்.''

''டேய் நந்து...''

''என்னாங்க நீங்க... அவன் என்ன இந்தியாவே வேணும்னா கேட்டுட்டான். பிஸ்கெட்டுக்குப்போயி....'' என்றுவெளியே நடந்தான் தங்கராஜ்.

''நாளைக்கு வீட்டுக்கு அனுப்பிடுவாங் களாமே?'' என்று கேட்டான் பாண்டியன்.

''ஆமா...'' இந்திரா மெலிந்த குரலில் சொன்னாள்.

பாண்டியன் மட்டும் எப்போதும் எப்படி இவ்வளவு அன்பாய் இருக்கிறான்? ஃபாக்டரிக்குப் போன நேரம் தவிர மற்ற நேரங்களில் ஆஸ்பத்திரி வராந்தாவில்தான் படுக்கிறான். நந்தகுமார் சின்னதாய் முனகி னால்கூட உடனே எழுந்து போய் நெற்றியில் கைவைத்துப் பார்க்கிறான். காப்பியா, பழங் களா, ஆஸ்பத்திரியில் இல்லாத மாத்திரையா, உடனே சைக்கிளை எடுத்துக் கொண்டு ஓடு கிறான்.

'ஜாக்கிரதையா இருந்திருக்கக் கூடாது?' என்று ஒற்றை வாக்கிய விசாரிப்போடு ஒதுங் கிக் கொண்ட ஜெயபால்கூட இத்தனை அக்கறை எடுத்துக் கொள்ளவில்லையே? நெருக்கடியான நேரங்களில் ஓர் ஆண் மகனின் அவசியம் பற்றி அழுத்தமாகவே புரிபட்ட மாதிரி இருந்தது இந்திராவுக்கு.

பாண்டியனைப் பார்த்துப் புன்னகை செய்ய முயன்றபோது இந்திரா தடுமாறி னாள்.


அப்போது அறைக்குள் திமுரென்று ஓர் ஆசாமி நுழைந்தான். காக்கி உடுப்பும், முடியின் க்ளோஸ்வெட்டும், முகத்துக்கடுமை யும் போலீஸ் போலீஸ் என்று அலறின.

இந்திராவுக்கு அனாவசியமாய் முதலாளி மாயகிருஷ்ணனின் நினைவு வந்தது. அன் றைக்குத் திமிறிக் கொண்டு வந்த காழ்ப்பில் ஏதாவது பொய்த் திருட்டுக் குற்றம் சாட்டி, போலீஸை ஏவிவிட்டுவிட்டாரோ? நாற்பது ரூபாய் கூலிக்கு நூறு ரூபாய் எடுத்து வந்தது தப்புத்தானே? நெஞ்சில் பீதி தாக்க, ஆதர வாகக் கட்டிலைப் பிடித்துக் கொண்டாள்.

''யாருவேணுங்க?'' என்றான் பாண்டியன்.

கையில் வைத்திருந்த ஒரு நோட்டுப் புத் தகத்தைப் பிரித்துப் பார்த்துவிட்டு, ''இங்கே இந்திராங்கறது யாரு?'' என்றான் போலீஸ் மனிதன்.

(தொடரும்)



ஒரு வரப்பிரசாதத்தின் மறுபக்கம்



நிர்வாக அதிகாரி ராமபத்ரன் அந்த அலுவலகத்துக்குக் கிடைத்த வரப்பிரசாதம் மாதிரி!

தன் கண்காணிப்பில்பணிபுரியும்அத்தனை உதவியாளர்களிடமும் அன்போடு பேசுவார்; அரவணைப்பாகப் பழகுவார்.

குற்றம் கண்டபோதும், கோபிக்காத பரந்த மனம் அவருடையது.

பாருங்களேன்.

மணி பத்தரை ஆகிறது. இப்போதுதான்—

கழுத்துப் பிடரியைத் துடைத்துக் கொண்டே, ''உஸ்....ஸ்...'' என்று ஆசுவாசத்துடன் வந்து உட்கார்ந்தாள், டைப்பிஸ்ட் கனகாம்புஜம்.

''ஏன் தாமதம்?''

அதட்டி ஒரு கேள்வி கேட்டாரா, ராமபத்ரன். அதுதான் இல்லை.

''அரைமணி நேரம் லேட் போலிருக்கே'' எனச் சிரித்துக் கொண்டே வினவினார் அவர்.

''எக்ஸ்க்யூஸ் மீ சார். பஸ் கிடைக்கவில்லை'' மாராப்பைச் சரிப்படுத்திக் கொண்டே எழுந்தாள், அவள்.

''தட்ஸ் ஆல் ரைட்.'' மறுபடியும் ஒரு தோழிச் சிரிப்பு. ''உட்காருங்கள். பஸ் பிடித்து வருவதானால் நான்கூடத் தினமும் லேட்டாய்த்தான் வருவேன்.''

ஆதரவாய்ப் பேசிக் கொண்டே நிலம் அதிராமல் நகர்ந்தார், ராமபத்ரன்.

ஸ்டேஷனரி சுரேஷ் வேகமாக வந்தான்.

''சார்...ஸ்டெனோலட்சுமணனுக்குமுந்தா நான்தான் ஒரு பென்சில் கொடுத்தேன். இன்றைக்கு மறுபடியும் ஒன்று கேட்கிறார் சார்!'' என்று புகார் சொன்னான். தொடர்ந்து, ''வீட்டிலுள்ள பிள்ளைகளுக்கெல்லாம் பென்சில் சப்ளை செய்யவா ஆபீசில் ஸ்டேஷனரி இருக்கிறது'' என்று அடிக்குரலில் முணுமுணுத்தான்.

அதைக் காதில் வாங்காதவர் மாதிரி, ''எங்காவது தொலைந்திருக்கும். வேறொன்று கொடுத்துவிடு'' என்றுபரந்தமனப்பான்மையுடன் உத்தரவிட்டார் ராமபத்ரன்.

. ''சார்....'' தலையைச் சொறிந்தான் மனோகரன். ''நேற்று டிவிஷனல் இன்ஜினியருக்கு அனுப்பிய மாதாந்திர அறிக்கையில் ஒரு சின்னத் தப்பு பண்ணிட்டேன் சார்.''

''என்ன?''

''ஆர்.சி.சி. யார்டில் அறுநூறு போல்ஸ்தான் வேலை முடிந்திருக்கிறது. நான் ஆறுவிரம் என்று எழுதிவிட்டேன் சார்'' குற்றத் தோரணையில் அவனது உடல் குறுகியது.

''அவ்வளவுதானே?'' என்று அலட்சியமாய்க் கடைவாயைச் சுழித்தார், ராமபத்ரன். ''உடனே அந்த அறிக்கை எண்ணை ரெஃபர் பண்ணிச் சரியான எண்ணிக்கையை எக்ஸ்பிரஸில் ஒரு டெலிகிராம் கொடுத்திடுங்கள் ஓ.கே.''

''தாங்க்யூ சார்.''

போன் ஒலித்தது. காதலிக்குக் கைலாகு கொடுக்கும் மென்மையுடன் ரிசீவரை மெள்ள எடுத்து, ''ஏ.டி.ஓ. ராமபத்ரன் பேசுகிறேன்'' என்றார்.

''குட்மார்னிங் சார்! பி.எஃப். செக்ஷனிலிருந்து பரமானந்தன் பேசுகிறேன். நம்ப ப்யூன் வெங்கடாசலத்துக்குப் பழைய பி.எஃப். கடனிலே பாதிகூட இன்னும் ரிக்கவரி ஆகலை. அதற்குள் அடுத்த கடனுக்கு இன்னிக்கு அப்ளிகேஷன் தர்றார் சார்'' என்றது போன்.

''பாவம், பிள்ளைக் குட்டிக்கார மனுஷன். பெண்ணுக்கு இந்த மாதம் கல்யாணம் பண்ணணும் என்று சொல்லிக் கொண்டிருந்தார். அப்ளிகேஷனை ஏற்றுக் கொள்ளுங்கள், மிஸ்டர் பரமானந்தன். ஸ்பெஷல் கேஸாக சாங்ஷன் பண்ணச் சொல்லி சிபாரிசு எழுதிவிடுகிறேன்.''

இப்படி அப்பெரிய அலுவலகத்தின் நான்கு சுவர்களுக்குள் எதிரொலிக்கும் அன்பு, அக்கறை, உதவி, ஒத்தாசை எதுவானாலும் அவற்றின் மொத்த உருவம், ராமபத்ரன்தான்.

இப்படி ஓர் உத்தம சீலனைக் கோபிக்க எப்படி மனம் வந்தது, ஒரு பெண்ணுக்கு.

தாலி கட்டிய மனைவி. ஆயுள் பரியந்தம் சேவை செய்ய வந்த மனைவி. ராமபத்ரனைப் போன்ற ஒரு கணவனுடன் வாழ முடியவில்லை' என்றால் அவள் வேறு யாருடன் வாழப் போகிறாள்?

பாவம், அந்த மனுஷன்!

ஓட்டல் சாப்பாடு.

உடம்பு இளைத்துவிட்டார். என்ன இருந்தாலும், கட்டிய மனைவி விட்டு விட்டுப் போன வருத்தம் உள்ளூற நோகத்தானே செய்யும்.

''இதற்கு ஒரு பரிகாரம் கண்டாக வேண்டும்'' என்றான் மனோகரன்.

''நம் சந்தோஷத்துக்கெல்லாம் காரணமான ஏ.டி.ஓ.வை, நாம் சந்தோஷமாக வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்'' என்று யோசனை சொன்னான், கோவிந்த்.

அதன் விளைவாக —

சேர்ந்தாற்போல் மூன்று நாட்கள் லீவு வந்தது.

அலுவலகத்தில் பதினைந்து பேர்கள் சேர்ந்து ஒரு ஸ்டாண்டர்டு வேனில் சுற்றுலா கிளம்பினார்கள்.

திருவனந்தபுரம்,நாகர்கோயில்,கன்னியாகுமரி போய்விட்டுத் திரும்பும் வழியில் —

திருநெல்வேலி.

வேன், அந்த வீட்டு வாசலில் நின்றது.

மாளிகை போல் பெரிய வீடு. ''அடேயப்பா...'' வாய் பிளந்தான், ஒருவன்.

''ராமபத்ரனின் மாமனார், ரிடையர்டு மாஜிஸ்திரேட் ஆயிற்றே, சும்மாவா...''

''அதனால்தான் மகள் இந்த மாதிரி திமிர் பண்ணுகிறாளாக்கும்.''

அடிக்குரலிலும், அரைத்தொனியிலும்

தமிழினியன்

அருள்வாக்கு



நாம் உட்கார்ந்திருக்கும் இந்தக் கொட்டகையை யார் போட்டார்கள் என்றால் சொல்லத் தெரிகிறது. இந்த வாழை மரத்தை யார் செய்தார்கள்? கண்ணில் காட்டும்படியாக அதைச் செய்தவனைச் சொல்லத் தெரியவில்லை. ஆனாலும் ஒருவன் அதைச் செய்திருக்கிறான். அதனால் தான் இப்படி அழகாகப் பட்டை பட்டையாகக் கணக்குப் பிசகாமல் உள்ளுக்குள்ளே அடுக்கிக் கொண்டே இந்த வாழை உண்டாகியிருக்கிறது. எந்த ஆயுதத்தை வைத்துக் கொண்டு அந்த ஒருவன் இத்தனை அழகாகப் பட்டைகளை அடுக்கினான் என்றால் தெரியவில்லை. இப்படியே அந்த மலையை, இதோ மேலே உள்ள நட்சத்திரங்களை, சந்திரனைச் செய்தவனை நம்மால் காட்ட முடியவில்லை. 'இவையெல்லாம் எத்தனையோ காலம் முன்னால் உண்டானவை. செய்தவனை எப்படிக் காட்டுவது?' என்று கேட்கலாம். சரி, இந்த ரோஜாப் புஷ்பம் இருக்கிறதே, இது அந்த வாழையை விடச் சமீபத்தில் உண்டானதுதான். முந்தாநாள் சிறு மொட்டாக இருந்தது. இப்போது அழகிய பூவாகியிருக்கிறது. இதில் நூற்றுக் கணக்கான இதழ்கள். ஒவ்வொன்றிலும் நுண்ணிய நரம்புகள், வாசனை எல்லாம் வந்திருக்கின்றன. நம் கண் முன்னேயே இது மலர்ந்தது. ஆனாலும் மலர்த்தினவனை நமக்குத் தெரியவில்லை.

மனிதன் எல்லாம் தெரிந்த கெட்டிக்காரன் என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் ஒரு காட்டு மிருகம் சென்னைப் பட்டணத்தைச் சுற்றி வந்தால் எதுவுமே தனக்குத் தெரியவில்லை என்று எப்படி ஆச்சர்யப்பட்டுப் பார்க்குமோ, அப்படித்தான் இந்தப் பிரபஞ்சத்தில் நாம் இருந்து கொண்டிருக்கிறோம். மனிதனைவிடக் கெட்டிக்காரனான ஒருவன் அவனை இப்படி வைத்திருக்கிறான்.

கெட்டிக்காரன் என்று தன்னை நினைத்துக் கொண்டிருக்கும் மனிதன், இத்தனையையும் இவனையும் செய்த அந்த மகா கெட்டிக்காரனைத் தெரிந்து கொள்ள வேண்டும். ஏனெனில் அவன் மகா கெட்டிக்காரன் மட்டுமல்ல; மகா நல்லவனும்கூட. இத்தனையைத் திட்டமிட்டுப் படைத்த பேரறிவு என்பதோடு இத்தனையையும் ரட்சிக்கும் பெருங் கருணையும் அவன். நமது கெட்டிக்காரத்தனம் அவன் தந்ததே என்று தெரிந்து கொண்டு அவனிடம் பிரார்த்தித்துக் கொண்டால் நமக்கு அவன் நல்லது செய்வான்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

தலைக்குத் தலை விமர்சனம் பேசிக் கொண்டு, காம்பவுண்டைத் தாண்டிக் கும்பலாக உள்ளே நுழைந்தார்கள்.

மஞ்சுளா — அவள்தான் ராமபத்ரனின் இளம் மனைவி, சிட் அவுட்டில் புத்தகம் படித்துக் கொண்டிருந்தாள்.

'யார் இவர்கள்?'

கேள்விக்குறியுடன் மெள்ள எழுந்து, கெந்திக் கெந்தி அடி எடுத்து வைத்தாள்.

'வேணும், நன்றாய் வேணும். கனவில் கூடக் கோபிக்காத மகராசனுடன் சண்டை போட்டுக் கொண்டு வந்தாய் அல்லவா? கடவுள் தண்டிச்சுட்டார்...' எல்லோருடைய மனமும் ரகசியமாய்ச் சலசலத்தது.

வந்தவர்களை அடையாளம்புரிந்துகொண்டாள் மஞ்சுளா. ''வாருங்கள்... வாருங்கள்...'' என்று சிரித்துக் கொண்டே வரவேற்றாள்.

சற்றைக்கெல்லாம் எல்லோருக்கும் சர்பத் விநியோகம் நடந்தது.

நான்கு வயது மகேஷ், அவர்களின் முதல் பையன் அவன். இடக் கண்ணில் பாண்டேஜ் போட்டிருந்தான்.

'கட்டிய புருஷனை விட்டுவிட்டு வந்தால் எல்லாம் குளறுபடிதான். பார்த்தாயா... பிள்ளைக்கும் கண்ணிலே கட்டுப் போடும்படி ஆயிட்டது' என்று கிசுகிசுத்தான், கோவிந்த். பிறகு குரலை உயர்த்தி, ''பையனுக்குக் கண்ணிலே என்ன?'' என்று விசாரித்தான்.

''ஒரு சின்ன ஆபரேஷன்.''

''அப்புறம், நாங்கள் வந்த நோக்கம் என்னவென்றால்....'' நண்பர்கள் சொன்னார்கள்.

''ஊஹும்...'' விரக்தியுடன் சிரித்தாள் மஞ்சுளா.

''உங்கள் முயற்சியை நான் பாராட்டுகிறேன்'' என்றார் மஞ்சுளாவின் அப்பா. மாநிறத்தில் அளவான உயரம். அறுபது வயதைக் கடந்தாலும் ஆரோக்கியமான உடம்பு. பொறுப்பான உத்யோகம் பார்த்தவர் என்பதற்கான சாயல், பேச்சிலும் செயலிலும் வியாபித்திருந்தது.

''என் மாப்பிள்ளை ராமபத்ரன் நல்லவர்தான். வெளியிலேயும் சரி, ஆபிசிலேயும் சரி அன்போடுதான் பழகுகிறார். நீங்கள் என்ன தப்பு பண்ணினாலும் அவருக்குக் கோபம் வராது என்பதெல்லாம் வாஸ்தவம்தான். ஆனால்...'' அந்த நிறுத்தம் வந்தவர்களுக்குத் திகில் மூட்டியது.

''என்ன சார்?''

''அந்த அன்பிலும் பொறுமையிலும் ஒரு கடுகளவுகூட அவர் வீட்டில் கடைப்பிடிக்கிறது இல்லை என்பதுதான் வருத்தப்பட வேண்டிய விஷயம்.''

''நிஜமாகவா....?'' அத்தனை பேர் விழிகளும் நம்ப முடியாமல் விரிந்தன.

''ஆம்...'' என்றவராய் ஒரு பெருமூச்சு விட்டார், அப்பெரியவர். ''கைபட்டால் குற்றம், கால் பட்டால் குற்றம் என்பார்களே, அதுபோல் எதுவானாலும் அடி உதை

சமுதாய-பொருளாதார வளத்திற்கு
''சக்தி''யின் துணை

ஒப்பீட்டு விவரம்	ரூபாய் லட்சத்தில்		
விவரம்	31-3-85 முடிய	31-3-86 முடிய	30-9-86 அரையாண்டு முடிய
வைப்பு நிதி	329.35	1012.33	1568.00
வழங்கப் பெற்ற கடன்கள்	563.34	1461.56	2356.87
மொத்த வருவாய்	82.65	323.67	304.10
தேய்மானம் நீங்கலாக லாபம்	17.70	116.63	96.65
வழங்குவதற்கு உரிய லாபம்	22.73	129.24	125.52
டிவிடெண்ட்	8.13 (20%)	17.81 (20%)	16.52 12% (Interim)

"... நமது நாட்டில் எண்ணற்ற நிதி நிறுவனங்கள் உள்ளன. அவற்றின் பங்குகளை விட எங்களது பங்குகளின் ஈட்டுவிகிதமே மிக உயர்ந்து, 211 சதவிகிதமாக உள்ளது என்பதைப் பல பத்திரிகைகள் பாராட்டியுள்ளன. இது எங்களது பெருமையைப் பற்றிப் பலபடப் பேசும். மற்றைய பல நிலைகளிற் கூட, எங்களது நிறுவனத்தின் செயல்முறைகள் பிற நிறுவனங்களை ஒத்துள்ளன."

"... நமது சாலைகளில் ஓடும் ஒவ்வொரு வாகனமும் கிட்டத்தட்ட 20 நபருக்கு வேலைவாய்ப்பு நல்குவதாகச் சொல்லப்படுகிறது. நாங்கள் இதுவரை 1000 வாகனங்களுக்கு கடன் வழங்கியிருக்கிறோம். எவ்வளவு பேருக்கு நாங்கள் மறைமுகமாக வேலைவாய்ப்பு தருகிறோம் என்பதை இதன் மூலம் நீங்கள் அறிவீர்கள். கிட்டத்தட்ட 6000 பேருக்கு வாழ்க்கை நலப்பொருளாகிய டெலிவிஷன், குளிர் சாதனப் பெட்டிகள் வாங்கக் கடன் வழங்கியதன் மூலம் 6000 குடும்பங்களின் நல்வாழ்விற்கு உதவியிருக்கிறோம், என்று நான் உரிமை கொள்வது பொருத்தம் தானே. வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் குடும்பங்களின் பொருளியல் நிலையை உயர்த்தவும் நாங்கள் இவ்வாறு பணிபுரிந்து வருகிறோம் என்பதில் ஏதேனும் ஐயமுண்டோ.

மூன்றே மூன்று ஆண்டுகளில் ஐந்து மாநிலங்களில் 23 கிளைகளையும் 7 பாதுகாப்புப் பெட்டகங்களையும் திறப்பது, 27000க்கும் அதிகமானோரிடமிருந்து 18 கோடி ரூபாய் டெபாசிட் பெறுவது, 7000க்கும் அதிகமானோர்க்கு 25 கோடி ரூபாய் கடன் வழங்கி நாட்டு மேம்பாட்டிற்குத் துணை நிற்பது. இவற்றைச் சாதித்து முடித்த நிறுவனம் ஒரு சாதாரண நிதி நிறுவனம் மட்டுமன்று, ஒரு சிறு வங்கியே என்பதை நீங்கள் உடன்படுவீர்கள் என்று நம்புகிறேன்"

1986 நவம்பர் 23-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை ஷண்முகானந்தாஹாலில், சயான், பம்பாயில் நடைபெற்ற பம்பாய் கிளை அலுவலக தொடக்க விழாவில் நிர்வாகத் தலைவர் திரு. என்.என். பை அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து சில பகுதிகள்.

SAKTHI FINANCE LIMITED

சக்தி பைனான்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம் : 475, டாக்டர் நஞ்சப்பா சாலை, கோயம்புத்தூர்-641 018
டெலிபோன்: 32240, 30500.

கிளை அலுவலகங்கள்:

தமிழ்நாடு: தி. நகர்-சென்னை; அடையாறு-சென்னை; அண்ணா நகர் கிழக்கு-சென்னை; ஆர்.எஸ். புரம்-கோயம்புத்தூர்; கிராஸ் கட் ரோடு; கோயம்புத்தூர்; காரைக்குடி; மதுரை; பொள்ளாச்சி; சக்தி நகர்; திருநெல்வேலி; திருச்சி; தூத்துக்குடி; வேலூர்; கோபி செட்டிப்பாளையம்; பட்டுக்கோட்டை; ஈரோடு. கேரளா: கஞ்சிக்கோட்டை; பாலக்காடு; எர்ணாகுளம்; திருவனந்தபுரம். கர்நாடகா: பெங்களூர். மஹாராஷ்டிரா: பம்பாய். பாண்டிச்சேரி

UPC SF 30.86

தான். அற்ப விஷயத்துக்குக்கூட எட்டு வீட்டுக்குக் கேட்கிற மாதிரி கூச்சல் போடுவார். ஒருநாள் காப்பியில் கொஞ்சம் சர்க்கரை அதிகமாயிட்டுதாம். காப்பி டம்ளரைக் கொதிக்கக் கொதிக்க அப்படியே என் பெண்ணின் முகத்தில் விட்டெறிந்துவிட்டார்.''

''இனிட்?''

''மஞ்சுளா... வாயைத் திறந்து காட்டும்மா...''

வெட்கமும் வேதனையுமாக அவள் வாய் திறந்து காட்ட, கடைவாய்ப் பற்கள் இரண்டைக் காணோம்.

"இராத்திரி வேளையில் உடனே வந்து கதவைத் திறக்காவிட்டால் கதவிலேயே அவள் தலையை மொத்து மொத்தென்று இடிப்பார். நெற்றியைப் பார்த்தீர்களா, தழும்பு. இப்படி ஏராளம் சொல்லலாம். அன்றைக்கு அப்படித்தான் என்னவோ கோபம். மாடிப்படியிலே தள்ளிவிட்டு உருண்டதில் இடுப்பு எலும்பு பிசகிவிட்டது. இங்கே கொண்டு வந்து வைத்தியம் பார்க்கிறேன். கவனித்திருப்பீர்களே, இன்னும் அவளுக்குச் சரியாய் நடக்க வரவில்லை.''

நண்பர்கள் அனைவரும் அடித்த சிலையானார்கள்.

''மனைவி என்றில்லை. பிள்ளையையும் அப்படித்தான். கேஜி வகுப்புக்கு 'ராங்க்' என்ன வேண்டிக்கிடக்கிறது? முதல் ராங்க் வரவில்லை என்று, இந்தப் பிஞ்சுப் பாலகனை விளக்குமாற்றால் நையப் புடைத்ததில் குச்சி ஒடிந்து கண்ணில் குத்தி, பார்வை திரும்புவது சந்தேகம் என்கிறார் டாக்டர்'' தலையைத் துயரத்துடன் உலுப்பி, மோவாயைத் தடவிக் கொண்டார் அவர்.

''ச்சோ.... ச்சோ....'' அனுதாபச் சூள் வெடித்தது, அத்தனை பேரிடமும்.

''இப்போது சொல்லுங்கள். உங்கள் ஏ.டி.ஓ. உங்களுக்கு நல்லவராக இருக்கலாம். ஆனால் என் மகளுக்கும், பேரனுக்கும் நரகாசுரனாய் இருக்கிறாரே.''

''எங்களை மன்னியுங்கள் சார். நாங்கள் உங்கள் பெண்ணைத்தான் தப்பாய் நினைத்து விட்டோம்.''

''அது உங்கள் தப்பு இல்லை. மாப்பிள்ளை, கௌரவமான உத்யோகத்தில் இருக்கிறார். நாங்களும் பெருந்தன்மையான குடும்பம். வெளியில் சொல்ல முடியவில்லை. அதனால் பார்க்கிறவர்கள் ஏதோ.... என் மகள்தான் சண்டை போட்டுக் கொண்டு வந்துவிட்டதாக நினைக்கிறார்கள்.''

எல்லோருடைய முகத்திலும் இரக்கம் வழிய என்ன பேசுவதென்று புரியாத ஓர் இறுக்கம் பரவிற்று.

பெரியவரே ஒருபெருமூச்சுடன் அதைக் கலைத்தார்.

''திருச்செந்தூர் போவீர்கள் என்று நினைக்கிறேன்.''

''ஆமாம் சார்.''

''அங்கே எங்களுக்காக ஒரு பிரார்த்தனை செய்யுங்களேன். உங்கள் ஏ.டி.ஓ.வும் விருப்பு, வெறுப்பு உடையவர்தான். கோபமும், குற்றத்தைத் தண்டிக்கும் மனோபாவமும் அவரிடம் இருக்கிறது. ஆனால் வெளியில் நல்ல பேர் சம்பாதிக்க வேண்டும் என்பதற்காக அந்தக் குரோதங்களை மனசுக்குள்ளேயே போட்டு அடைத்துக் கொள்கிறார். அப்படி அடக்கி வைத்த ஆவேசம் எல்லாம் வீட்டுக்கு வந்ததும் மூடி திறந்துவிட்ட பாம்பு மாதிரி மனைவி மீதும், பிள்ளை மீதும் சீறிப் பாய்கிறது.''

''சார்...''

''ஆகவே, உங்கள் ஏ.டி.ஓ. ஆபீசிலேயே கோபப்படவும், கண்டிப்பு காட்டவும், தண்டிக்க வேண்டிய தவறுகளை ஆபீசிலேயே தண்டிக்கவும். அப்படி அவர் ஆபீசில் உண்டாகும் வெறுப்பு உணர்ச்சிகளை, உள்ளுக்குள்ளே அடக்காமல் அங்கேயே வடிகாலாக்கினால், அவர் மனம் பஞ்சு போல் இலேசாகிவிடும். ஆத்திரத் தணல் ஆறித் தணிந்து, சாந்த மனசோடு வீட்டுக்கு வருவார். அப்போதுதான் மனைவியிடமும், பிள்ளையிடமும் அவரால் பிரியமுடன் பழக முடியும். இதை அந்த முருகப் பெருமானிடம் முறையிட வேண்டும். செய்வீர்களா....''

அப்பாவும், மகளும் கண்களில் நீர் கோக்கக் கையேந்திக் கொண்டார்கள்.

''நிச்சயமாகச் செய்வோம் சார்'' என்று ஏகமாய் உறுதி சொன்னார்கள், நண்பர்கள். அப்போது அவர்களின் குரலும் தழுதழுத்தது.



ஆசிரியர்: ''என் சைக்கிள்ல காத்தைப் பிடுங்கி விட்டவங்க மரியாதையா கையைத் தூக்குங்க!''

மாணவன்: ''டயர்ல ஆணி குத்தினவங்க கையைத் தூக்கக் கூடாதா சார்?''

— நிலாப்ரியன்.

பேரன்: எப்படித் தாத்தா எங்க கிளாசில் மொத்தம் 48 பையன்கள் படிக்கிறாங்கன்னு கரெக்டா கண்டுபிடிச்சீங்க?

தாத்தா: உன் ராங்க்கை வெச்சுத்தான்!

— லஞ்ஜனு



வேத வைதிக நூல்கள் (விலை தபால் செலவு உட்பட)

I 1. ஸாமவேத அஷ்ட ப்ராம்மணம் — நாகராக்ஷரம் — 3 பாகங்கள், விலை ரூ 210/—
2. ஸாமவேத ஸம்ஹிதா — நாகராக்ஷரம் — 2 பாகங்கள் (ஸ்வரத்துடன்) விலை ரூ 110/—
3. ஸாமவேத ஸம்ஹிதா (ஸ்வரத்துடன்) கிரந்தாக்ஷரம் — 2 பாகங்கள் விலை ரூ 235/—
4. சாந்தி குஸுமாகரம் (கிரந்தாக்ஷரம்) — 2 பாகங்கள் விலை ரூ 75/—

II க்ரந்தாக்ஷரத்தில் ஸ்வரத்துடன் மணக்கால் பிரம்மஸ்ரீ முத்து ச்ரௌதிகளால் பதிப்பிக்கப்பட்ட கிரந்தங்களின் மறுபதிப்புக்கள்

1. போதாயன பூர்வாபர ப்ரயோகம், விலை ரூ 70/—; 2. ஆபஸ்தம்ப பூர்வாபர ப்ரயோகம், விலை ரூ 65/—; 3. ஆபஸ்தம்ப ச்ரார்த்த ப்ரயோகம், விலை ரூ 30/—; 4. ஆச்வலாயன பூர்வர்பர ப்ரயோகம், விலை ரூ 60/—; 5. ஆச்வலாயன ச்ரார்த்த ப்ரயோகம், விலை ரூ 25/—; 6. கல்ப சிந்தாமணி விலை ரூ 35/—

III நாகர அக்ஷரம் — நாகர பதத்திற்கு தமிழ் அர்த்தத்தோடு

1. ஸ்ரீமத் பாகவதம் — 5 Volumes — 12 ஸ்கந்தங்கள், விலை ரூ 415/—; 2. ஸுந்தர காண்டம், விலை ரூ 80/—; 3. ஸ்ரீ நாராயணீயம், விலை ரூ 55/—.

IV 1. மனுசேச்லோக & ராமமந்த்ராசேச்லோக, விலை ரூ 9/—; 2. ஸ்ரீ ராதா க்ருஷ்ண பூஜாவிதானம், விலை ரூ 10/—; 3. நளோதந்தம் (நைஷத காவ்யத்தின் சுருக்கம்), விலை ரூ 9/—; 4. வேதபாட வழிமுறை (Syllabus) (ரிக், யஜுர், ஸாம), விலை ரூ 8/—.

V.P.P.யில் அனுப்புவதில்லை. பூராத் தொகையையும் M.O. (or) Draft மூலம் அனுப்பவும். செக் மூலம் அனுப்ப வேண்டாம்.

அத்வைத வித்யாசார்ய மஹாராஜா ஸாஹேப் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்ய ஸ்மரண ஸமிதி
D-76, மூன்றுவது கிராஸ், ஸ்ரீநகர்காலனி, கும்பகோணம் — 612 001

அனைவருக்கும் எங்களது புத்தாண்டு வாழ்த்துக்கள்.



"அப்பா, நான் கீழே சறுக்கி வரும்போது, என்னைப் பிடித்துக் கொள்வாயா?"



சுயமாக சறுக்கப் போவதில் உள்ள பரபரப்பு, கீழே விழுந்து விட்டால் அணைத்துக்கொள்ள உங்கள் அன்புக் கரங்கள் இருக்கின்றன என்ற எதிர்பார்ப்பு. இதுவே பாதுகாப்பிற்கு உங்கள் குழந்தை உங்களையே நம்பி உள்ளது என்பதை குறிக்கிறது. விளையாட்டோ, படிப்போ, உங்கள் ஆக்கமும், ஊக்கமும், அரவணைப்பும் அதற்கு எப்போதும் தேவை. உங்களால் அதனை எப்போதும் அளிக்க முடியுமா? அதாவது உயர்படிப்பு, தனி வாழ்க்கை துவக்கம், திருமணம் முதலிய கால கட்டங்களில்—உங்கள் உதவி தொடர்ந்து கிடைத்திட வழி வகை செய்திருக்கிறீர்களா? இன்றே ஆயுள் பாதுகாப்பு செய்து, உங்கள் குடும்பத்தின் பாதுகாப்பை உறுதி செய்யுங்கள், எனெனில் நீங்கள் இன்று இடும் திட்டங்களே நாளைய நல்வாழ்வுக்கு அடித்தளம். ஆயுள் பாதுகாப்பு உங்கள் குடும்பத்தினரிடம் உங்களுக்குள்ள அன்பினைக் குறிக்கும் பொருள் பொதிந்த சின்னம்.

அதிக போனசுடன்கூடிய ஆயுள் பாதுகாப்பு இப்பொழுது நிறைந்த பயனைத் தருகிறது.

லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா

30 ஆண்டுகள் மக்கள் சேவையில்

NPS/LIC/TA

* தேவேந்திரன்



* மனோஜ்குமார்



ராதா உருவாக்கிய புதிய வார்த்தை!

புலமைப்பித்தன் அடித்த ஜோக்!

'மண்ணுக்குள் வைரம்' பட இயக்குனர் மனோஜ்குமார் பாரதிராஜாவின் மைத்துனர் தான் என்றாலும் சாயலில் அவரைப் போலவே இருக்கிறார். அவரைப் போலவே பேசுகிறார். அதே பணிவு.... உற்சாகம்...

படம் வெளிவந்த நாள் முதல் இவர் ஏற்றிருக்கும் விரதத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்.

''படம் நூறு நாள் ஓடி விழாக் கொண்டாடும்வரை நான் அசைவமே சாப்பிடுவதில்லை என்று சபதம் எடுத்திருக்கிறேன். என்னுடன் பணியாற்றும் இசை அமைப்பாளர் தேவேந்திரன் நூறு நாட்கள் வரை காவி உடையே அணிவதாகச் சபதம் செய்துள்ளார்'' என்றார்.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த கவிஞர் புலமைப்பித்தன் நாற்காலியை விட்டு எழுந்து, ''நான்கூட நூறு நாள் வரை சைவமே சாப்பிடப் போவதில்லை என்று சபதம் எடுத்துக் கொள்ளப் போகிறேன்'' என ஜோக் அடித்தாரே, பார்க்கலாம்!

மலேவி சொல் மந்திரம்

மணிவண்ணனின் இயக்கத்தில் சிவாஜி கணேசன் முதன்முறையாக நடிக்கும் 'ஜல்லிக் கட்டு' படத்திற்காக முதல் காட்சி படப்பிடிப்பு. காட்சி முடியும்வரை மணிவண்ணன் சிகரெட்கூடப் புகைக்கவில்லை. நடிகர் திலகத்திடம் அத்தனை மரியாதை!

தயாரிப்பாளர்களான சித்ரா லட்சுமணனும், சித்ரா ராமுவும் தூக்க முடியாமல் பிரும்மாண்டமான ரோஜா மாலையைச் சுமந்து வந்து சிவாஜி கணேசனுக்கு அணிவித்தனர். (அடேயப்பா, அத்தனை பெரிய மாலையை நான் பார்த்ததே இல்லை!)

''சிவாஜி டாக்டர் பட்டம் பெற்ற பிறகு முதன்முறையாக நடிக்க வந்திருப்பதற்காக இந்த வரவேற்பு'' என்றார் சித்ரா. ஒன்றோடு போயிற்றா, தொடர்ந்து ஒன்பது ரோஜாப்பூ மாலைகள் அவரைத் திணற வைத்தன.

இன்னொரு சேதி: சிகரெட் புகைப்பதைக் கடந்த இரண்டு ஆண்டுகளாக நிறுத்திவிட்டதாகச் சொன்னார் சிவாஜி. தொடர்ந்து பெண்ணாகப் பிறந்தவர்கள் பெருமைப்படக் கூடிய ஒரு விஷயத்தையும் சொன்னார் சிவாஜி:





* காயத்ரி

''என் மனைவி நிறுத்திவிடும்படி சொன்னாள். நிறுத்திவிட்டேன்'' என்றார்.

அகராதியில் இல்லாத வார்த்தை!

மதர்லேண்ட் பிக்சர்ஸ் சார்பாக சூபர் கேஸட் இசைத்தட்டு விழாவில் பேசிய போது ராதா ஒரே ஒரு வார்த்தை கூறி அனைவரையும் சிரிக்க வைத்துவிட்டார். அந்த வார்த்தை தமிழ் அகராதியிலேயே இடம் பெறாத வார்த்தை! அப்படி அவர் என்ன பேசினார்?

''நான் நிறைய பேசினால் சொதப்பிடுவேன். அதனால் இதோடு நிறுத்திக் கொள்கிறேன்'' என்றார். அந்த 'சொதப்பல்'தான் அனைவரையும் சிரிக்க வைத்தது.

ஷாலினி Vs சுஜிதா

பேபி ஷாலினிக்கு இதுவரை போட்டி குழந்தை நட்சத்திரம் உருவாகாமல் இருந்தாள். 'புன்னகை மந்திரம்' வெளி வந்த பிறகு அதில் நடித்த பேபி சுஜிதா மீது தயாரிப்பாளர்களின் கவனம் திரும்பியிருக்கிறது.

காரணம் பேபி ஷாலினியிடம் காணப்படும் குழந்தைத்தனத்தை மீறிய துடிப்பு ஏதும் இல்லாமல் யதார்த்தமான பார்வையாலேயே அடக்கமாக நடித்திருப்பதுதான்.

சுஜிதா வேறு யாரும் இல்லை. 'முந்தானை முடிச்சு' படத்தில் பாக்யராஜைப் படாத பாடு படுத்தி வைத்த அதே குழந்தைதான்.

புதுமையான எம். ஜி. ஆர். படம்

'சிவப்பு மலர்' நாயகி காயத்ரி வீட்டில் புதுமாதிரியான — முதலமைச்சர் எம்.ஜி. ஆர். படம் ஒன்று மாட்டி வைக்கப்பட்டுள்ளது. அப்படத்தில் அவரது தலைக் குல்லாய், சட்டை எல்லாம் நிஜமாகவே தைத்து அணியப்பட்டுள்ளது. வலது பக்க பாக்கெட்டில் இரண்டு பேனாக்களும் செருகி வைக்கப்பட்டுள்ளன!

''டெல்லியில் உள்ள என் அப்பாவின் நண்பர் இப்படத்தைப் பரிசாக அளித்தார்'' என்கிறார் காயத்ரி.

— திரைஞானி

புகைப்படம்: கே. சண்முகம்.



''என்னங்க இது. நம்ம கட்சிக்கு கொ. ப. செ. தவிர நேர்மை பரப்புச் செயலாளர், நீதி பரப்புச் செயலாளர்னு புதுசு புதுசா நியமிச்சிருக்கீங்க?''

''நம்ம கட்சியில் நேர்மை இல்லே. நீதி இல்லேன்னு சொல்றவங்களோட வாயை அடைக்கத்தான்!''

— இளை. அ. கதிர்வேல்.

வாசகர் கருத்து

என்னைக் காணவில்லை

• பட்டுக்கோட்டை பிரபாகரின் 'என்னைக் காணவில்லை' தொடர் ஒவ்வொரு வாரமும் எதிர் பார்த்துப் படிக்க வைத்த கதை. கதையின் முடிவு மனத்துக்கு இதமாக இருந்தது. கதைக்கு உயிரூட்டிய ஓவியர் ஜெயராஜுக்கு எனது பாராட்டுக்கள்.

மதுரை — 5. வெ. சி. பாலகிருஷ்ணன்.



• பரத் — சுசீலா காமெடி உரையாடல் இக்கதையில் குறிப்பிடத்தக்க ப்ளஸ் பாய்ண்ட் ஆகும். ஆரம்பம் முதல் இறுதிவரை மிகவும் விறுவிறுப்பாக எழுதி என்னை மிகவும் கவர்ந்து விட்ட பட்டுக்கோட்டை பிரபாகருக்கு என் பாராட்டுக்கள்.

ஈரோடு. அருண்.

• பட்டுக்கோட்டை பிரபாகர், கடந்த பல வாரங்களாக வெகு இயல்பாகவும், வாசகர்களுக்கு அலுப்புத் தட்டாத வகையிலும், கதையை அருமையாகக் கொண்டு சென்றார். வக்கீல் பரத் பாத்திரம் நன்றாக அமைந்து உள்ளது. கடைசிக் கட்டத்தில் எண்களை வைத்துக் கொண்டு பரத், அசோக் இருக்கும் இடத்தைக் கண்டுபிடிப்பது பட்டுக்கோட்டையாருக்கே உரிய ஸ்டைல்.

விருத்தாசலம். ஏ. டி. பூவராகவன்.

• நாகராஜனைக் கொன்றது யார் என்ற கேள்வி கதைக்கு விறுவிறுப்பு டானிக்கைத் தந்தது. அந்தக் கேள்விக்கான விடையை இறுதிப் பகுதி வரை ஆசிரியர் மறைத்து வைத்திருந்ததோ, வாராவாரம் மூளையைக் கசக்கிக் கொள்ள வைத்தது.

திருத்துறைப்பூண்டி. டி. டேவிட் ஜான் பிரிட்டோ.

• கதை விறுவிறுப்பான வேகத்துடன் சென்றது. ஆனால், முடிவு மிகவும் 'சினிமாடிக்'காகவும், ஜீரணிக்கத் தகாததாகவும் இருந்தது.

விக்கிரபாண்டியம். ஆர். கே. அருள்செல்வன்.


பாம்பினோ. இத்தாலிய தானியங்கி தொழிற்சாலையில் சுகாதாரத்துடன் உருவாக்கப்பட்ட அதிசய சேமியா கையில் ஒட்டாத இந்த பாம்பினோ. கொழுப்பு கலவாத, புரதச்சத்து மிக்கது. இப்பொழுது பாம்பினோவைப் பயன்படுத்தி நாவிற்குச் சுவையூட்டும் பாயாசம் போன்ற இனிப்புகளையும், புளியோதரை போன்ற கார வகைகளையும் சமையுங்கள். சாதாரண சமையலில் அசாதாரணச் சுவையை விதவிதமாய் பாம்பினோ எப்படித் தருகிறது என்பதைக் கண்டறியுங்கள்.
பாம்பினோ அல்வா
செய்முறை: சேமியாவை பொன்னிறமாக நெய்யில் வறுத்துக் கொள்ளவும். பாத்திரத்தில் தண்ணீரைக் கொதிக்க வைத்து பாம்பினோவை சேர்க்கவும். அடுப்பை மெதுவாக எரியவிட்டு தண்ணீர் நன்றாக சுண்டிய பின் சர்க்கரையை சேர்த்து 2 நிமிடங்கள் கிளறவும். நன்றாக நறுக்கிய பிஸ்தா பருப்பு, முந்திரி பருப்பு, திராட்சைப் பழம் இவற்றை மேலே தூவி அழகுபடுத்தி சூடாக பரிமாறவும்.
அளவான செலவிலே
அறுவகை சுவைகளை
பாங்கோடு துவங்குவீர்
பாம்பினோ உணவுடன்.
இலவசம்
உங்கள் இலவச செய்முறைக் குறிப்புகள் அடங்கிய புத்தகத்திற்கு கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதவும்.
ஜன ஜீவன் ஃபுட்ஸ் பிரைவேட் லிமிடெட்.,
பஷீர்பாக் பாலஸ், பஷீர்பாக்,
ஹைதராபாத்-500 029.
IS 1485
பாம்பினோ
வர்மிசெல்லி
இனிப்போ காரமோ ருசிதரும் பாம்பினோ!
associated



நிமிர்ந்த,
நேர்கொண்ட பார்வை
நல்லதுதான்
அதற்காக......

நாணமென்ற
நல்லியல்பை
நலிவடைய விடுவானேன்,
எதற்காக?

மலர் மங்கையரை வண்ணப்படம் எடுத்து அளிப்பவர்: பாலா அய்யர், பம்பாய்





• வடுகபட்டி கிராம மக்கள் பாராட்டி வழங்கிய பரிசு

வழிகாட்டும் வடுகப்பட்டி!

உறங்குகிறது கொடைக்கானல் மலைத் தொடர், அமைதியாக.

''அதோ பாருங்கள்... இந்த அழகில் மனம் பறி கொடுக்காமல்... எழுதாமல் எப்படி இருக்க முடியும்?'' என்றார் வைரமுத்து.

அன்று — அவருடைய பிறந்த மண்ணில், வடுகப்பட்டியில் பாராட்டு விழா. 'மண்ணின் மைந்தர் கவிஞர் வைரமுத்து' தேசிய விருது பெற்றதை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தி, அக்கம்பக்கத்துக் கிராமத்தார் எல்லாம் சேர்ந்து கொண்டு விழா எடுத்தார்கள்.

'இந்தப் பையன்' என்றும் 'தம்பி' என்றும் உரிமையோடு உறவு கொண்டாடி மகிழ்கிற நண்பர்கள், ஊர் மக்கள் அவருடைய திறமை வெளிப்பாட்டை முளைவிடும்காலத்திலேயே அறிந்துமகிழ்ந்திருக்கிறார்கள். அந்தக் கிராம மக்களின், ஆசிரியர்களின் ரசனையைப் பார்க்கிறபோது வைரமுத்து மாதிரி ஒரு கவிஞன் அங்கு பிறக்காமலிருந்தால்தான் ஆச்சரியப்பட முடியும்.

கண்களின் பனிப்பை அடக்கிக் கொள்ள முடியாமல், கைவிரலை நீட்டி மைதானத்தில் பல இடங்களைச் சுட்டிக் காட்டி.... ''இதோ இங்கேதான், அரை நிஜார்ச் சிறுவனாக நின்று கொண்டு, கண்ணதாசனைக் கவனித்தேன். இந்த இடத்தில் நின்று கொண்டுதான்... கலைஞரின் சொற்பொழிவைக்கேட்டேன். அதோ... அந்த இடத்தில்தான், அண்ணா காலமான அன்று, இரவு முழுவதும் அமர்ந்து... அவருடைய கட்டுரைகளை வாய் விட்டுப் படித்தேன்...'' என்றும் தன்னுடைய ஆசான்களை, தன்னை வழி காட்டி உயர்த்தியவர்களையெல்லாம் மரியாதையோடு குறிப்பிட்டு, என் காதுகளைத் திருகியவர், என் கன்னத்தில் கிள்ளியவர் என்றும் நினைவுபடுத்திய போது... மைதானத்தில் கனிசமானவர்களின் கண்கள் குளமாகியிருந்தன.

''நான் ஓடை என்று எழுதினால் அது இந்த ஊருக்குத் தெற்கேயுள்ள ஓடைதான். ஆறு என்று எழுதினால் அது இந்த ஊரைத் தொட்டுக் கொண்டு ஓடும் வராக நதிதான். நான் கோவில் என்று குறிப்பிட்டால் இந்த ஊரின் பகவதியம்மன் கோவில்தான்'' என்று தன் ஏற்புரையில் கவிதைகளின் குலமுறை சொன்ன போது, மைதானத்தின் இடப்புறத்தில் சற்றே சாய்ந்து நின்றிருந்த அந்த மூன்று தென்னை மரங்கள் கூட முன்னிலும் நேராகத் தலைநிமிர்ந்து நிற்பதாகத் தோன்றியது.

நாடாளுமன்ற உறுப்பினரைக் கூட எம்.பி., பட்டம் இன்றி, 'செல்வேந்திரன்' என்று மட்டுமே சுவரொட்டிகளிலும், அழைப்பிதழ்களிலும் குறிப்பிட்டு

தொலைவிலைப் பார்க்க ஒரு மைல் தூரம் செல்லுங்கள்; இரண்டு பேரிடையே சமாதானம் செய்ய இரண்டு மைல் செல்லுங்கள்; நண்பனைக் காண மூன்று மைல் தூரம் செல்லுங்கள்.......

புண்ணிய காரியங்களை ஸங்கிராந்தியில் ஏன் அனுஷ்டிக்க வேண்டும்?

மேஷம் முதலிய பன்னிரெண்டு ராசிகளில் கிரமமாக மாதந்தோறும் சஞ்சரிக்கும் ஸூரிய பகவான், ஒரு ராசியிலிருந்து வேறு ராசிக்கு பிரவேசிக்கின்ற சமயம் ஸங்கரமணம் ஸங்கிராந்தி என்று சொல்லப்படுகிறது. அந்தப் புண்ணிய காலங்களில் செய்கிற ஸ்நானம், தானம், ஹவ்யம், கவ்யம், முதலிய புண்ணிய காரியங்களுக்கு ஏழு வருஷம் ஸூரியன் நல்ல பலன்களைக் கொடுக்கிறார். ஆகையால் புண்ணிய காரியங்களை அவசியம் அனுஷ்டிக்க வேண்டும்.

தேவலர்: ஸங்கராந்தி சமயம் ஸூக்ஷ்மமானது. நம்மால் அறிய முடியாதது. ஆகையால் ஸ்ங்கரமணத்திற்கு முன்பு முப்பது பின்பு முப்பது நாழிகைகள் புண்ணிய காலமாகும்.

ராசி	ஸங்கிரமணத்தின் நாமதேயம்	(ப்ருஹஸ்பதி வாக்குப்பலன்) புண்ணிய காலம்	புண்ணிய பலன்
மகரம்	உத்திராயணம்	பின் இருபது நாழிகை	கோடி புண்ணியம்
கும்பம்	விஷ்ணுபதீ	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
மீனம்	ஷடசீதி	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
மேஷம்	விஷீ	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
ரிஷபம்	விஷ்ணுபதீ	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
மிதுனம்	ஷடசீதி	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
கர்கடகம்	தக்ஷிணாயனம்	முன் இருபது நாழிகை	கோடி புண்ணியம்
சிம்மம்	விஷ்ணுபதீ	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
கன்னி	ஷடசீதி	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
துலா	விஷீ	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
விருச்சிகம்	விஷ்ணுபதீ	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
தனுசு	ஷடசீதி	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்

ஸம்க்ஷேப தர்மசாஸ்திரம்

இலக்கிய விழாவாக மட்டுமே நடத்திக் காட்டிய பெருமை,விழா ஏற்பாடு செய்த வர்களுக்கு உண்டு. பேராசிரியர் சால மன் பாப்பையாவின் நகைச்சுவை கலந்த சொற்பெருக்கால், உணர்ச்சிபூர்வமாக நடைபெற்ற நிகழ்ச்சியில் கணிசமாகச் சிரித்ததோடு சிந்திக்கவும் முடிந்தது. திருமதி இளம்பிறை மணிமாறனின் கடல் மடை திறந்த சொற்பொழிவைக் கேட்ட போது மீண்டும் மாணவனாகி அவர் பணி யாற்றும் கல்லூரியில் சேர்ந்துவிடலாமா என்று ஆசை ஏற்பட்டது! செல்வேந்திர னின் இலக்கியத் திறனை உணர முடிந்த போது. அவருடைய தொகுதி மக்களின் மீதும் அவரை எம்.பி.யாகப் பெற்ற கட்சி யின் மீதும் கூடப் பொறாமை ஏற்பட்டது. சிலம்பொலி டாக்டர் செல்லப்பன், நாட்டுப் பாடல் முத்துக்களை அள்ளி யெடுத்து. அந்தக் கால நாடக மேடைப் பாடல்களையெல்லாம் நினைவூட்டிய போது. கூட்டத்தில் யாராவது 'ஒன்ஸ் மோர்' கேட்டுவிடுவார்களோ என்று கூடத் தோன்றியது.

நான்கு மணி நேரம் நடைபெற்ற இந்த இலக்கியக் கூட்டத்தில் யாரும் யாருக்கும் முதுகு சொறியாமல் நெஞ்சத்தின் ஆழத் திலிருந்துபேசியதால்தான் 'முழுஇலக்கிய விழா' என்கிற தகுதி கிடைத்தது.

கவிஞர் விரும்பியிருந்தால் யாராவது திரைத் துறைப் பிரமுகர்களை அழைத்துப் பெருமை காட்டியிருக்க முடியும். வீடியோ எடுத்து வெளிச்சமாவது போட்டிருக்க முடியும். ஆனால் பாழ்படாத இலக்கியச் சூழல் இதுபோல் அமைந்திருக்காது.

கவிஞனையும் அறிஞர்களையும் அவர் கள் வாழும்போதே பாராட்டுவதில் நாம் பின்தங்கியவர்கள் என்கிற நிஜம் நம்மை உறுத்துகிறது. ஆனால் வடுகபட்டிக்காரர் கள், கவிஞர் வாழ்கிறபோது மட்டுமில்லை, வாழ்க்கையின் முதல் படிகளில் ஏறிக் கொண்டிருக்கும்போதே பாராட்டுவது. 'அட, தமிழன் திருந்திவிட்டானே' என்று மகிழச் செய்கிறது.

வெறும்குருட்டுத்தனமான பூஜா மனப் பான்மைக்கு அப்பால் சென்று, வைர முத்துவின் 'நன்னம்பிக்கை முனை' போன்ற உவமைகள் பொருத்தமற்றவை என்று விமரிசனம் செய்கிற நக்கீர நண் பர்களும் இங்கே அவருக்கு உண்டு.

இந்தக் கிராமத்தின் இனிமையான மனிதர் என்று புகழப்படுகிற மனித நேயம் நிறைந்த 'எம்.பி.பி.எஸ். டாக்டர்' செல்வ ராஜ், கவிஞரின் கவிதைச் சிறப்புக்கு வழி காட்டிய ஆசிரியர் வெ.ஆ. உத்தமன், கிராமத்தின் முதல் கவிஞன் என்கிற பெருமைக்குரிய புவனேந்திரன் மற்றும் நான்கைந்து பேர் ஒரு குழுவாக அமைந்து ஜமாய்த்துவிட்டார்கள்.

ஒருவருடைய வளர்ச்சி கண்டு வதை படாமல் வாழ்த்தத் தெரிந்து கொண்டு விட்ட வடுகபட்டி மக்கள் வழிகாட்டிகள்.

கலைசைக்கிழார்

அர்த்தமற்ற அவலங்களை

பயம், 'டென்ஷன்', கோபம், மறதி, கெட்ட பழக்கங்களுக்கு அடிமையாதல் போன்றவையெல்லாம்மனவலிமைஇல்லாததால் ஏற்படும் கோளாறுகளே. இவையும் தாழ்வு மனப்பான்மை போன்ற பிற பிரச்னைகளும் மருந்துகளால் தீர்க்கப்பட முடியாதவை. சில மருந்துகள் தற்காலிகத் தீர்வு போல் தோன்றலாம். உதாரணமாக டென்ஷன் அல்லது ஸ்ட்ரெஸ் என்ற உணர்வு அதிகமாகி, தூக்கம் பிடிக்காமல் தவிக்கும்போது தூக்க மாத்திரை விழுங்கலாம். ஆனால் தூக்க மாத்திரைக்கே அடிமைப்பட்டுப் போகும் ஆபத்து உண்டு! இன்ன நோய்க்கு இன்ன மருந்து• என்பதுபோல் மனக் கோளாறுகளைத் தீர்த்துக் கொள்வதற்கில்லை. எனினும் அறிகுறிகள், காரணங்கள், சூழல் இவற்றை வைத்து அலசிப் பார்த்து மனத் தெளிவு பெற்று, விடாமுயற்சியினாலும் படிப்படியான பயிற்சியினாலும் நம்மை மேம்படுத்திக் கொள்ள முடியும். மிகவும் மோசமான அல்லது தீவிரமான மனநிலைகளில் மன நோய் மருத்துவரின் ஆலோசனையும் உதவியும் தேவைப்படும்.

யோகாசனம், உடல் வலிமை அளிக்காவிடினும் உடல் ஆரோக்கியம் காக்கும். தியானம் மனவலிமையை அளிக்கும். மன வலிமை குன்றுவதால் ஏற்படும் உடல் உபாதைகளை நீக்கும். இதை இன்று அகில உலகிலும் உள்ள எல்லா டாக்டர்களும் ஒப்புக் கொண்டு இவற்றை அளித்த இந்திய

பழக்கங்களின் அடிமை



நம்முடைய தலைமுறையின் மிகப் பெரிய கவிஞராக விளங்கிய கண்ணதாசன்... பெத்தடின் என்ற போதை ஊசிக்கு அடிமையாகிப் போனார். தவறு என்று தெரிந்தும் அவரால் மீள முடியவில்லை. வருந்தி எழுதினார். எந்தச் சூழலிலோ எப்படியோ பழகிவிட்ட வேண்டாத பழக்கங்கள் தனி மனிதனுடைய வாழ்க்கையை மட்டும் அல்லாமல், ஒரு சமுதாயத்துக்கேகூடத் தீங்கு விளைவித்துவிடுகிறது. இன்னும் சில ஆண்டுகள் அவர் உயிர் வாழ்ந்திருக்கக் கூடுமானால் பல இலக்கிய லாபங்கள் தமிழுக்குக் கிடைத்திருக்கும்....

மனிதன் பிறவியிலேயே பழக்கங்களுக்கு அடிமையாகிப் போனவன்தான். தினமும் காலையில் எழுந்து, பல் துலக்கி முகம் கழுவி, உணவு கொண்டு, வேலைகளில் ஈடுபட்டு, மீண்டும் உறங்கி.... என்று ஒரு சக்கர வாழ்க்கை.... இதன் அடிப்படையே பழக்கங்களுக்கு அடிமையாவதுதான். **Conditioned behaviour** என்றே குறிப்பிடலாம்.

சிலருக்குக் காலையில் எழுந்தவுடன் விழிக்கிற முகம்.... மனைவி.... மகள்... மகன்.... என்று இருக்கும். கடவுள் படத்தில் கண் விழிப்பது.... அப்பா அம்மாவின் நினைவான படங்களில்... எதுவும் இல்லாவிட்டால் கண்ணாடியின் முன்... அல்லது உள்ளங்கையைப் பார்த்துக் கண் விழிப்பது என்று... பழக்கமாகியிருக்கும். ஏதாவது அசந்தர்ப்பங்களின் விளைவாக இந்தப் பழக்கம் ஒரு காலையில் மீறப்பட்டாலும்.... அன்றையப் பொழுது முழுவதுமே இவர்கள் அமைதியிழந்து குழம்புவார்கள்.

காலையில் படுக்கையிலிருந்தவாறே, நினைவுடனே, உறக்க மயக்கத்திலோ கூடச் சுடச் சுடக் காப்பியைப் பருகியாக வேண்டும் என்பது சிலரிடம் உள்ள பழக்கம். தினசரிப் பேப்பரில்தான் உறக்கம் கலையும் என்கிற சிலர் — பேப்பர் விடுமுறை நாட்களில் தவித்துப் போய் விடுவார்கள். ஒன்றுமே ஓடாது.

இப்போது தொலைக்காட்சியும் ஒரு போதையாய் வந்துவிட்டது. மொழி புரிகிறதோ புரியவில்லையோ, பிடிக்கிறதோ

மூலத்தைக் கண்டுபிடிக்க வேண்டும்

அடித்து விரட்டுங்கள்!

நாட்டுக்கு நன்றி செலுத்துகிறார்கள்.

தியானம் என்பது ஆஸ்திகத்துடன் தொடர்பு கொண்டது என்று நினைக்கும் சில பகுத்தறிவுவாதிகள் அதனை ஒதுக்குகிறார்கள். இதற்கு அவசியமில்லை. இது மூட நம்பிக்கையின் பாற்பட்டது அல்ல. விஞ்ஞான பூர்வமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுவிட்ட ஒன்று.

எல்லாவற்றுக்கும் மேலாக் கீதா வாக்கியத்தை மிக உன்னதமானது என்று மனோ தத்துவ நிபுணர்கள் இன்று ஏற்கின்றனர்.

கடமையைச் செய்; பலனைக் கருதாதே— அதை இறைவன் பொறுப்பில் விட்டு விடு என்ற சொற்றொடர், ஓர் எதிர்பார்ப்புடன் திட்டமிட்டுக் கடமைகளைச் செவ்வனே ஆற்ற உதவுவது மட்டும் அல்ல, ஏமாற்றங்களைத் தாங்கவும் வலிமை தருகிறது. எதிர்பார்ப்புகள் நிறைவேறினால் கர்வம் அடையாமல் அதையும் சலனமின்றி ஏற்க உதவுகிறது. மனம் சமன்பட்டு நிற்கும்போது உடல் ஆரோக்கியமும் பேணப்படுகிறது.

இந்தக் கட்டுரைகள் பிரச்னைகளைப் புரிந்து கொள்ள உதவும்; உங்களைச் சிந்திக்க வைக்கும்; தீர்வுகளை நீங்களே புரிந்து கொண்டு செயல்படக் கைகொடுக்கும்.

டாக்டர் வி.ஆர். சந்திரசேகர் அவர்களுடன் உரையாடித் தொகுத்த கருத்துக்களுக்குக் கட்டுரை வடிவம் தருபவர்: **சுப்ரபாலன்**

இல்லையோ டி.வி. திரையோடு பசையாக ஒட்டிக் கிடக்கிறவர்கள் இப்போது எல்லா வயது வரம்பிலும் பல்கிவிட்டார்கள்.


சிலருக்குச் சுற்றுச் சூழல் மிக ஒழுங்காக இருக்க வேண்டும். மேஜை, கண்ணாடி, ரேஸர் செட், புத்தகங்கள், பேனா... கர்சீப் உள்பட வைத்தது வைத்த இடத்திலிருக்க வேண்டும். மயிரிழை இடம் மாறியிருந்தாலும் தொலைத்துவிடுவார்கள். வானமே இடிந்து விழுந்துவிட்ட மாதிரி கூச்சல் போட்டு ஊரைக் கூட்டி விடுவார்கள். இந்த மனிதரோடு எப்படித்தான் ஒருத்தி குடும்பம் நடத்துகிறாளோ என்று கூடத் தோன்றும். அலுவலகத்திலும் இதே ஒழுங்கை இவர்கள் எதிர்பார்க்கிறபோது நரக வேதனைதான்.

நல்லபழக்கம்என்றுசொல்லக்கூடுமானாலும் ஓரளவு விட்டுக் கொடுத்து அனுசரித்துப் போகும் தன்மையும் வேண்டும்.

சிலருக்கு ஒழுங்கின்மையே லட்சியமாக இருக்கும். கலைந்த கேசம், அழுக்கான உடை, என்று பல பெரிய மனிதர்களையே பார்த்திருக்கிறோம். எதை எங்கே வைத்தோம் என்று தெரியாது திண்டாடுவார்கள். கடைசி விநாடி வரை மசமசவென்று காரியங்களைத் தள்ளிப் போட்டுக் கொண்டே வருவார்கள். கடைசி விநாடிப் பரபரப்பில் கோட்டை விடுவார்கள். ரயிலைப் பிடிக்கிற நேரத்தில்கூட ஓடி வந்து வண்டியில் ஏறினால்தான் சிலருக்குப் பயணம் போன மாதிரி இருக்கும்.



எல்லாம் பழக்கங்களின் அடிமைத் தனம்தான். வேண்டிய பழக்கங்க்ள் வேண்



டாத பழக்கங்கள் என்று இனம் பிரித்துப்பார்க்கக்கற்றுக்கொள்வதிலேயே மனிதனின் வெற்றி அமைய முடியும்.

மதுவகைகள், போதைப் பொருள்கள், புகைப் பழக்கம், பொடி, புகையிலை, இவற்றுக்கு அடிமையாவதால் உடல் நலம் சீர்கெடுகிறது. காப்பியைக்கூட இருதய நோயுள்ளவர்கள் குறைத்துக் கொள்ள வேண்டும் என்று டாக்டர்கள் சொல்கிற போது, பழக்கத்துக்கு அடிமையாகிப் போனவர்கள் தவியாய்த் தவித்துப் போகிறார்கள்.

முக்கியமான விவாதம் நடைபெறுகிற போது, பெரும் பொறுப்பில் பேசி முடிவெடுக்க வேண்டிய சிலரின் கையில் மதுக்

கோப்பையோ, புகையும் சிகரெட்டோ அல்லது இரண்டுமோ இல்லாவிட்டால் எல்லாம் கெட்டுக் குட்டிச் சுவராகிவிடும். இவர்கள் மதுவும் சிகரெட்டும் தன்னம்பிக்கை ஊட்டுவதாக எண்ணி ஏமாறுகிறார்கள். மது நாக்கைத் தளர்த்தும். அதனால் தன்னம்பிக்கையுடன் பேசுவதுபோல் ஒரு மாயையை உருவாக்கும். அவ்வளவே. ஆனால் எடுக்கும் முடிவுகள் சரியானவையாக இருக்கும் என்று உறுதி கூற முடியாது. தவறான முடிவுகளுக்கே அதிக வாய்ப்புக்கள்.

சோகம் துயரம் போன்ற சூழ்நிலைகளுக்கு ஆட்படுகிறவர்கள் மதுவே கதி என்று கிடந்து அழிந்து போவதை சினிமாக்களிலும் கதைகளிலும் நிறையவே பார்த்தும் புத்தி வருவதில்லை! பழகுகிற நண்பர்கள் வட்டாரத்தில், மற்றவர்களின் கேலி கிண்டல்களுக்கு அஞ்சி, நாமும் சிகரெட் பற்ற வைக்காவிட்டால், ஒரு கோப்பை மதுவைக் கையில் எடுத்துக் கொள்ளாவிட்டால் அவமரியாதையாகிவிடுமோ என்றெண்ணி வீரவெளிப்பாடாகவும் கூடச் சிலர் தேவையற்ற பழக்கங்களில் அறிமுகமாகிவிடுகிறார்கள்.

போதுமான மனவலிமை இல்லாதவர்கள்தான் இப்படிப்பட்ட பழக்கங்களுக்கு அடிமையாகிறார்கள். உள் மனப் போராட்டங்கள், ஏமாற்றங்கள் இவற்றுக்கு ஆட்படுகிறவர்கள் சுலபமாகப் பழக்க வலைகளில் வீழ்ந்து தவிக்கிறார்கள்.

சாப்பிட்டவுடன் புகைப்பது, கழிப்பறைக்குள் நுழைந்தவுடன் புகைப்பது என்று சிலரின் பழக்கங்கள். சிலருக்குக் கட்டுக்கடங்காமல் கோபம் வரும்போது துடிக்கும் உதடுகளில் சிகரெட்டைப் பொருத்திவிட்டு, தீக்குச்சியை எடுத்து வேகமாக உரசிப் பற்றவைப்பார்கள்.

தவிர்க்க வேண்டும் என்கிற எண்ணம் வரும்போது, ஒரு பழக்கம் எப்படி, எந்தச் சூழ்நிலையில் தொடங்கியது என்கிற 'நதிமூல'த்தை முதலில் ஆராய வேண்டும். அடிப்படையைப் புரிந்து கொள்ள வேண்டும்.

விலக்க வேண்டிய பழக்கங்களை மனவியல் முறையிலும் பயிற்சிகள் மூலமும் படிப்படியாகக் குறைக்க முடியும். 'குரூப் தெராபி' என்று ஒருமுறை உள்ளது. பழக்கங்களுக்கு அடிமையாகிப் போன ஒரே மாதிரியான பிரச்னைகளில் உள்ளவர்களை ஒன்றாகக் கூட்டி, அவர்களிடையே மனம் திறந்த விவாதங்களின் மூலம் சீர் செய்ய முடிகிறது. பொதுவான பல பிரச்னைகளை இப்படிப் பேசி விவாதிப்பதன் மூலமே தீர்க்க முடியும்.

மதுபானம், போதைப் பொருள்களுக்கு மருத்துவ ரீதியில் 'வெறுப்பு மனநிலை'யை உண்டாக்கி மாற்ற முடியும். ஒவ்வொரு முறையும் சிகரெட், மதுக்கோப்பை போன்றவற்றை வாயருகே கொண்டு போகும் போது, அதிர்ச்சியை ஏற்படுத்தி வெறுப்பை ஊட்டிவிடலாம்.

போதை விவகாரம் இப்போது சர்வதேசப் பிரச்னையாகிவிட்டது. போதைப் பொருட்களைக் கடத்தும் 'தொழில்' இன்று கோடிக் கணக்கில் பணம் புரளும் துறையாகி விட்டது. சக்தி வாய்ந்த மனிதர்கள் இவற்றோடு தொடர்பு வைத்திருப்பதால் சட்டம் முழுமையாக வெற்றி பெற முடியவில்லை. பள்ளிகள், கல்லூரிகள், விடுதி வாசல்களிலெல்லாம், இதற்கெனவே சமூக விரோதிகள் அலைந்து கொண்டிருக்கிறார்கள். இந்தப் போதை அசுரனின் பிடியில் சின்னஞ் சிறுவர்கள், இளைஞர்கள் சிக்கிக் கொள்வதால், அவர்களுடைய தனிப்பட்ட எதிர்காலம் தவிர, தேசத்தின் எதிர்காலமே கேள்விக்குறியாகிவிடுகிறது.

பெற்றவர்களின் நெருக்கமான கண்காணிப்பும் அக்கறையும்தான் இவர்களைக் காப்பாற்ற முடியும். பிள்ளைகளின் நடைமுறைகளைக் கவனித்துத் தவறுகள் படியத் தொடங்கியிருந்தால் உடனடியாகக் களைய ஆவன செய்ய வேண்டும். குழந்தைகள் நலனில் பெற்றோருக்கு அக்கறையும் அன்பும் இருந்தால் போதாது. இருப்பதை வெளிப்படையாக, அடிக்கடி காட்டிக் கொள்ள வேண்டும்.

இலவச சைக்கிள்!



ஸ்விட்ஜர்லாந்தின் தலைநகரமாகிய ஜெனிவாவின் பல்வேறு பகுதிகளில் ஓர் இளைஞர் சங்கம் 125 சைக்கிள்களை நிறுத்தியிருக்கிறது. இளஞ் சிவப்பு வர்ணம் பூசப்பட்ட இந்த சைக்கிள்களைத் தேவைப்படும் நகரவாசிகள் இலவசமாக உபயோகிக்கலாம். தாங்கள் விரும்பும் இடங்களுக்குப் போனபின், ஏதாவது ஒரு பொது இடத்தில் சைக்கிளை விட்டு விட வேண்டும். ஆனால் நகர எல்லைக்குள் மட்டுமே இந்த சைக்கிள்களை உபயோகிக்கலாம். இளைஞர் சங்கமே சைக்கிள்களின் பராமரிப்பைக் கவனித்துக் கொள்கிறது.

— எல். முகம்மது யூசுப்

நோயல்லாத நோய்கள்

'வி ஃபார் விக்டரி' என்று இரண்டு விரல்களை உயர்த்திக் காட்டி முழங்கியவர் வின்ஸ்டன் சர்ச்சில்.

அவரிடம் ஒரு வித்தியாசமான பழக்கம் இருந்தது. பதினெட்டு மணி நேரம் பரபரப்பான வேலைகள். ஆறு மணி நேரம் அமைதியான உறக்கம்.

இன்று கவனிக்காமல் விட்டுப் போனவை, நாளை கவனம் பெற வேண்டியவை எல்லாவற்றையும் ஒரு காகிதத்தில் எழுதி வைத்துவிட்டு உறங்கப் போவாராம். மனத்தை அழுத்துகிற சுமைகளை அப்படியே காகிதத்தில் இறக்கிவைத்துவிடுகிறதிம்மதி. மறுநாள் கண் விழிக்கும் வரை இந்த எண்ணச் சுமையிலிருந்து விடுதலை....



டென்ஷனுக்கு மருத்துவ ரீதியான விளக்கம் என்ன? என்று டாக்டரைக் கேட்கலாமே...

வெறும் படபடப்பை மட்டும் டென்ஷன் என்று குறிப்பிட முடியாது. தேர்வு அரங்கில் வினாத் தாளை வாங்கின விநாடியிலும், முதன் முதலாக மேடையேறிப் பேச நேர்கிற போதும் ஏற்படுகிறவை சாதாரணப் படபடப்புக்கள்தான். சின்னக் கவலைகள், ஆர்வம் பரபரப்பு இவைதான் காரணம்.

ஆனால் நாட்கணக்கில், மாதக் கணக்கில் ஆண்டுக்கணக்கில்கூட மனசை அழுத்திக் கொண்டிருக்கும் கவலைகள்தான் 'டென்ஷன்' என்கிற வகையில் மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்துகின்றன.

டாக்டர்களிடம் வருகிற பெரும்பாலான நோயாளிகள், தங்களிடம் உள்ள நோயல்லாத நோய்க்காகவே வைத்தியம் செய்து கொள்ள வருகிறார்கள். வைரஸ் அல்லாத வயிற்றுப் போக்கு, தலைவலி, அஜீர்ணம் — இவையெல்லாம் டென்ஷன் காரணமாகவும் வரக்கூடும். டாக்டர்களும், ஏதாவது ஜெலூஸில், பி.காம்ப்ளெக்ஸ் என்று மாத்திரை மருந்துகளைக் கொடுத்து, ''ஒண்ணுமில்லே.... ரெண்டு நாள்லே சரியாயிடும்'' என்று சொல்லி ஊட்டுகிற நம்பிக்கைதான் அவர்களைக் குணப்படுத்துகிறது — மருந்து அல்ல!



பள்ளி, கல்லூரிகளில் பிள்ளைகளைச் சேர்க்கிறபோது ஏற்படும் நெருக்கடிகள், ஏமாற்றங்கள், கூடவே அலுவலகத்தில் மேலதிகாரியுடன் ஏற்படுகிற உரசல்கள், ஊரை விட்டு ஊர், பதவி உயர்வு என்கிற பெயரில் இடமாற்றம், எல்லாவற்றோடும் சேர்ந்து வீட்டில் யாருக்காவது உடல் நலக் கோளாறு என்று சங்கிலித் தொடராய்ச் சோதனைகள் வரும்போது மனிதன் திண்டிப் போகிறான்.

இந்த நேரங்களில்தான் குடும்பத்தை வழி நடத்திச் செல்கிற பொறுப்பில் உள்ளவர்கள் மனம் தளராமல் பிரச்னைகளை எதிர்நோக்கியாக வேண்டும். எதையும் தாங்க முடியாமல் மன வலிமையை இழந்தால் அவர்களின் உடல் நலனே பாதிக்கப்படக் கூடும். இதைத்தான் stress என்கிறோம்.



இன்றைய உலகம் அதிவேகமானது. காலம் ஒன்று மட்டுமே இப்போது மிகவும் விலை மதிப்புள்ள பொருள். அதன் வேகத்தோடு நாமும் போட்டியிட்டு வெற்றி பெற வேண்டியிருக்கிறது. நாலு தலைமுறைகளுக்கு வேண்டிய சொத்தை; நாலே ஆண்டுகளில் சம்பாதித்துவிட வேண்டும் என்று வெறி

மனிதன் தாராளமாகச் செலவு செய்ய வேண்டியதில் இன்சொல் முதலாவதாகும்.

யாகப் படபடத்து உழைக்கிறவர்களைப் பார்க்கிறோம்.

இன்றைய பிரச்னைகளை எப்படியோ சமாளித்துவிட்டோம். குளித்துவிட்டுச் சாப்பிட்டு உறங்கப் போகலாம் என்றால் கூடப் பலரால் முடிவதில்லை. அப்போதுதான் நாளையக் கவலைகள். அடுத்த மாதம் வரப் போகிற இன்கம்டாக்ஸ். அதற்கு அப்புறம் வரப் போகிற கல்யாணம் எல்லாம் நினைவுக்கு வந்து அழுத்தும். மிரட்டும். அயர்ந்து உறங்க முடிந்தால்தானே உடம்பும் மனமும் 'ரிலாக்ஸ்' ஆகும்?

க்ரானிக் டென்ஷன் என்கிற நாள் பட்ட கவலைகளினால் மனநிலை மட்டுமில்லை, உடல் நலனும் வெகுவாகப் பாதிக்கப்படுகிறது. சிடுசிடுப்பு, முன்கோபம், பின் மண்டையில் வலி, எல்லாம் ஏற்படும்.

ஆஸ்துமா, வயிற்றுப்போக்கு, ஒற்றைத் தலைவலி, அஜீரணம், தொடங்கி இரத்த அழுத்தம், மாரடைப்பு வரை கொண்டு போய் விட்டுவிடும். அவர்களுக்கு ஏற்படுகிற பல்வேறு வகையான டென்ஷனின் விளைவே இது.

அலுவலகம் போனால் வீட்டைப் பற்றியும், வீட்டுக்கு வந்தால் அலுவலகத்தைப் பற்றியும் நினைத்துக் கொண்டு குழம்புகிற பலரைப் பார்த்திருப்பீர்கள். இதற்கெல்லாம் என்ன காரணம்?

அவர்கள் இயங்குகிற சூழ்நிலை. இயல்பாகவே இரத்தத்தில் ஊறிப் போன சுபாவம், எல்லாவற்றையும்தான் சொல்ல வேண்டும்.

எந்த ஒரு தரப்பிலிருந்தும் சோதனைகள் வரலாம். இன்றைய சூழலில், அப்படியொரு சோதனை வரும் என்று எதிர்பார்த்துக் கொண்டேதான் இருக்க வேண்டும். அப்போதுதான் எதிர்ப்படுகிற மலை கூடக் கடுகாகிச் சிறுத்துப் போகும்.

வாழ்க்கையை நன்கு அனுபவிக்கப் பழகிக் கொள்ள வேண்டும். முன்கோபம் பயன் தராது. சுவையான நூல்களைப் படிப்பது, சங்கீதம் ஓவியம் போன்ற கலைகளில் மனம் பறி கொடுப்பது, தோட்டத்தில் போய் எதையாவது கொத்திக் கிளறுவது, குழந்தைகளோடு குழந்தையாய் நீங்களும் மாறி ஆனந்திப்பது என்று வழிகளா இல்லை?

சற்றும் எதிர்பாராத நேரத்தில் பள்ளிக்கூடத்திலிருந்து கடிதம் வரும். "மூன்று நாட்களாய் உங்கள் பையன் பள்ளிக்கு வரவில்லை" என்று. பையன் ஒழுங்காகத்தானே பள்ளிக்குப் போய்க் கொண்டிருக்கிறான் என்று நினைத்துக் கொண்டிருக்கும்போது இதுபோன்ற செய்தி அதிர்ச்சி தரும். மனம் பரபரப்படையும். குடும்பத்தை, குழந்தையைச் சரியாகக் கவனிக்கவில்லையோ என்கிற குற்ற உணர்வு உங்களை மிரட்டும்.

பிரச்னைகள் என்று உருவாகிறபோது, சோர்ந்து போய் உட்கார்ந்துவிடக் கூடாது. நீங்களே பரபரப்படைந்தால் உங்களைச் சேர்ந்த மற்றவர்களின் கதி என்ன ஆகும் என்பதை நினைத்துப் பாருங்கள்.

உங்கள் உணர்ச்சிகளை விழுங்கிக் கொண்டு, இனி ஆக வேண்டியது என்ன என்கிற முனைப்புக்குச் செயல் வடிவம் தர வேண்டும்.

பிரச்னைகள் கட்டு மீறிச் சூழ்ந்து கொள்கின்றன என்றால் எப்படிச் சமாளிப்பது? மனைவி, பெற்றவர்கள், நண்பர்கள், வயது வந்த பிள்ளைகள் என்று உங்களைச் சுற்றியுள்ள நெருக்கமானவர்கள் யாரிடமேனும் பிரச்னைகளை மனம் விட்டுப் பேசிப் பகிர்ந்து கொள்ளலாம். இது மனத்தின் சுமையைக் கண்டிப்பாகக் குறைத்து ஆறுதல் தரும்.

இப்படி நீங்கள் யாரிடம் பேசுகிறீர்களோ அவர் உங்கள் பிரச்னையைத் தீர்த்து வைக்க முடியாதவராக இருக்கலாம். ஆனால் நீங்கள் மனம் விட்டுப் பேசுவதை அனுதாபத்துடன் கேட்டுக் கொள்பவராக இருக்க வேண்டும். உங்களை மேலும் குழப்பாமல் பொறுமையாகக் காது கொடுத்தாலே போதும். மனம் விட்டுப் பேசப் பேச உங்களுக்கு மனச் சுமை குறைவது மட்டுமல்ல. பிரச்னைக்குத் தீர்வு கூடத் தென்படலாம்!

குறிக்கோள் இல்லாமல் வாழ்க்கை நடத்துவது, பிரச்னையைச் சரிவரப் புரிந்து கொள்ளாமல் வீணே பரபரப்பு அடைவது. இந்த மனநிலைகளை மாற்றிக் கொள்ள முடியும்.

ஒரு பிரச்னை என்று எடுத்துக்கொண்டால் அதை முழுமையாகத் தீர்க்காமல் அப்படியே அந்தரத்தில் விட்டுவிட்டு அடுத்த பிரச்னைக்குத் தாவுகிற மனப்போக்கை மாற்றிக் கொள்ள வேண்டும்.

பிரச்னைகளில் எதற்கு முதலிடம் தருவது என்பதில் தெளிவாக இருக்க வேண்டும். நான்கு நாட்கள் ஆனாலும் 'குடி முழுகி விடாது' என்கிற பிரச்னைக்காக இன்றே மண்டையைப் பிய்த்துக் கொள்ள வேண்டியதில்லை.

என்ன நடந்தாலும் சரி என்று தீர்மானம் பண்ணிக் கொண்டு வேளைக்கு உணவு, தூக்கம் என்று கட்டாயப்படுத்தியேனும் பழக்கப்படுத்திக்கொண்டுவிட்டால் பிரச்னைகள் எல்லாம் கால் தூசு என்று ஆகிவிடும். ஒழுங்கு என்கிற **Orderliness** ஒன்றுதான் வீண் குழப்பங்களைத் தவிர்க்க உதவுகிற மாமருந்து.

கணவன்–மனைவி இருவரும் ஒருவர் பிரச்னையை மற்றவர் அனுதாபத்துடன் கேட்டுக் கொண்டு துணையாக நிற்பதுதான் இல்வாழ்க்கையின் பலம். இதைப் புரிந்து கொள்ளாத நிலையில்தான் பிரச்னைகள் வேர் பிடிக்கின்றன.

தீர்க்கவே முடியாத பிரச்னைகள் என்று சில உள்ளன. அப்படிப்பட்ட பிரச்னைகளை எண்ணி, குழம்பிக் கொண்டு டென்ஷனை வளர்த்துக் கொள்வதில் அர்த்தமேயில்லை. உதாரணமாக குணப்படுத்த முடியாத ஒரு நோயாளி நம் வீட்டில் இருக்கிறார் என்றால் அவரை நம்மால் இயன்ற மட்டில் கவனித்துப் பணிவிடை செய்யலாமே தவிர ஒரு பாரமாக மனத்தில் ஏற்றிக் கொண்டு படபடப்பதில் அர்த்தமில்லை.

நீ வெற்றிகரமாக கடப்பதுதான் மிகப் பெரிய அறிவு


கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
20-40%
சிறப்புத்
தள்ளுபடி



நண்பருக்கு ஒருவிதமான ஃபோபியா. துளி இரத்தம் கசியப் பார்த்தாலும் மயக்கம் வந்துவிடும். ஆனாலும் எதையும் ஆர்வத்தோடு பார்க்கிற துணிவும் உண்டு. ஒருசமயம் இரத்தப் பரிசோதனை செய்து கொள்ள நேர்ந்தது. மருத்துவமனையில் பணம் கட்டிச் சோதனை அறைக்குப் போனார். ஊசி மூலம் இரத்தம் எடுத்தார்கள். அதுவரை சுவாரசியமாகப் பார்த்தவருக்கு, எடுத்த இரத்தத்தைக் கண்ணாடித் தகட்டில் பரப்பியபோது....

கிர்ரென்று சுழற்றித் தலை கவிழ்ந்தார். இரத்தம் எடுத்தவர் பதறிப் போய் டாக்டரை அழைத்தார். அவ சரக்காரரான டாக்டர் அப்படியே குண்டுக்கட்டாய் அவரை அள்ளிக் கொண்டு போய்ப் படுக்கையில் சேர்த்து, 'லோ பிளட் பிரஷர்' என்று சத்தியமே பண்ணினார். 'நோயாளி' மனிதர் கண் விழித்து "அதெல்லாம் இல்லை... போபியா" என்று சொல்லியும் யாரும் நம்பவில்லை! இருதயத் துடிப்பின் வரைபடம் எடுத்தார்கள்! பத்து ரூபாய்க்கு ரத்தப் பரிசோதனை செய்து கொள்ள போனவர், எழுபது ரூபாயை இளிச்சவாயாக அழுதுவிட்டு வெளியே வந்தார். இருந்தாலும் ஒரு நிம்மதி. தனக்கு இதய நோய் இல்லை என்றும் உறுதியாகி விட்டதல்லவா?

கணவன் ஊருக்குப் போனால் மனைவிக்குப் பயம்

பயங்கள் இரண்டு வகைப்படும். தண்ணீரைக் கண்டால் பயம், உயரமான கட்டடங்களிலிருந்து கீழே பார்த்தால், நெருப்பு எரிவதைப் பார்த்தால், மூடிய அறை அல்லது லிஃப்டில் தனியாக இருந்தால், திறந்த வெளியில் நடந்தால் என்று ஒவ்வொன்றிலும் ஒவ்வொருவருக்கு அச்சம் ஏற்படும். இவை ஃபோபியா எனப்படும். மேலே சொன்ன இரத்த விவகாரம் உட்பட.

மேஜை மீது வைத்திருக்கும் பேனா கத்தியைப் பார்த்தால் கூட எங்கே அதை எடுத்து தம்மைக் குத்தி விடுவாரோ என்று மிரண்டு போகிறவர்கள் உண்டு. லிஃப்டில் ஏற பயந்து அறு மாடியானாலும் மூச்சைப் பிடித்துக் கொண்டு 'மலை ஏறுகிற' பேர்வழிகளும் உண்டு. இப்படி இடி, மின்னலைக் கண்டோ விமானம், ரெயிலில் ஏறுவதற்கோ பயம் என்று பொருளற்ற பல அச்சங்கள் உண்டு.

இன்னும் ஒருவகை கட்டுக்குள் அடங்கிய பயம். மகளுக்குத்திருமணம் நிச்சயம் பண்ணிவிட்டு அது நடந்து முடிகிறவரை எப்படிச் செய்யப் போகிறோமோ என்ற பயம். தேர்வு அரங்கில் நுழையும்போதே ஏற்படுகிற பயம். இதுவே அளவுகடந்தும் இருக்கக் கூடும். தேர்வுகளை நினைத்தாலே பயத்தால் படித்ததெல்லாம் மறந்து போய்விடும்.

சில அச்சங்கள் அவசியமானவைகூட. போலியோ வந்துவிடாமல் இருக்க வேண்டுமே. அம்மை தாக்கக் கூடாதே என்கிற பயத்தில்தான் தடுப்பு ஊசி போட்டுக் கொள்கிறோம். எதிர்காலத்தை நினைத்து



ஏற்படுகிற பயத்தின் விளைவுதான் இன்ஷ்யூரன்ஸ், சேமிப்பு போன்றவை. இவை நோய் அல்ல. இப்படி அஞ்ச வேண்டியவற்றுக்கு அஞ்சாமைதான் ஆபத்தானது. இப்படி அஞ்சாமல், அசட்டுத் துணிச்சலில் என்ன ஆகிவிடும் என்று அலட்சியப்படுத்துகிறவர்கள்தான் சிரமப்படுகிறார்கள்.

பயம் அதிகமானால் காரியம் கெட்டு விடுகிறது. ஆக்கத்திறன் பாழாகிறது. சாதனை அளவு குறைந்து போகிறது. தேர்வுக்கு அமர்கிற மாணவன் வினாவை படபடப்பில் விடைத்தாளில் மையைக் கொட்டிவிடுவது, இன்டர்வியூவில் பதற்றம் ஏற்பட்டுப் பேச முடியாமல் வாயைக் கட்டிப் போட்டு விடுவது இவற்றைச் சொல்லலாம்.

பெண்களுக்குப் பிரசவ நேரத்தில் ஏற்படுகிற வினாவை அச்சம் காரணமாகவே ஐம்பது சதவிகிதம் கேஸ்கள் சிஸேரியன் ஆகிவிடுகிறது. வலி, வேதனைகள் இருக்க, பிறக்கப் போகும் குழந்தை குறைபாடு இல்லாமலிருக்க வேண்டுமே என்கிற அச்சம் கூட உண்டு. ஒருத்தருக்கு ஸ்கூட்டரில் போகையில் ஒரு மோசமான விபத்து நேர்ந்ததை நினைத்துக் கொண்டே, மற்றவர்கள் ஸ்கூட்டரில் போகாமலிருக்க முடியுமா என்ன?

எனினும் இருதய நோயுள்ளவர்களுக்கு, இரத்த அழுத்தம், நீரிழிவு போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, பயம் அவசியமானது. முன் எச்சரிக்கையோடு இவர்கள் இயங்க அது உதவும்.

சிலர் நேருக்கு நேர் நிமிர்ந்து பார்க்கவே கூட அஞ்சித் தலையைத் தாழ்த்திக் கொண்டு பேசுவதுண்டு.

அறிவு எவ்வளவுதான் அதிகமாக இருந்தாலும், தேவையற்ற அச்சம் ஏற்பட்டுவிட்டால் முன்னேற முடியாமல் கீழே இழுத்து விடும்.

சினிமா எடுத்த தயாரிப்பாளர், படம் தோல்வியடையாமலிருக்க வேண்டுமே என்றும், திறமையான ஒரு வழக்குரைஞர் தம் வழக்கு வெற்றியடைய வேண்டுமே என்றும், ஒரு டாக்டர் மேஜர் ஸர்ஜரி வெற்றிகரமாக நடக்க வேண்டுமே என்றும் பயப்படுவது இயல்பு. இதற்கு மாறாக, பயங்கரமான விஷயங்களைத் தேடிப் போய் அனுபவிப்பதும் ஒருவித மனோபாவம். ஆபத்து ஏற்படலாம் என்று தெரிந்தும், வேட்டைக்குப் போவது, கடும் உறைபனியையும் கண்டு மனம் தளராமல் இமயம் ஏறுவது, போன்ற அனுபவங்கள் உண்டு. இயல்பான அச்சங்களைச் சாதனையாக மாற்றி மகிழ்வதில் ஒரு த்ரில் இருக்கிறது. தோல்வி கிடைக்கும் என்பதை உணர்ந்தே குதிரைப் பந்தயம் சூதாட்டம் என்று போய் ஈடுபடுவதில் அந்த அனுபவத்துக்காகப் போகிறார்கள். த்ரில்லுடன் அசட்டுத்தனமும் இணைந்திருக்கிறது!

அமெரிக்காவில், 'டைட்ரோப் வாக்' என்று ஒரு சாதனை. நூற்று அறுபது மாடிக்கு மேல் உள்ள இரு கட்டடங்களின் உயரத்தில் கனமான கயிற்றைக் கட்டி விட்டு ஒரு கட்டடத்திலிருந்து மற்றதற்குக் கயிறு மேல் நடந்து போவது. இப்படிப்பட்ட ஒருவனிடம் சொன்னார்கள்: 'இடுப்பில் ஒரு கயிற்றைக் கட்டிக் கொள்ளேன் பாதுகாப்பாக இருக்கும்' என்று. அவன் மறுத்துவிட்டான். 'பாதுகாப்போடு நடப்பதில் என்ன த்ரில் இருக்கிறது?' என்று கேட்டானும்!

சிறு வயதில் பெற்றவர்கள் வளர்த்த சூழ்நிலை காரணமாக பயந்த சுபாவம் ஏற்படுகிறது. இது வெளியே தெரியாமல் உள் மனத்தில் உறங்கிக் கொண்டிருக்கும். வளர்ந்த நிலையில், ஏதாவது சோதனை வரும் போது வெடிக்கும்.

மனசாட்சிக்கு அஞ்சுவது... ஒரு செயல் தவறு என்று தெரிந்தே பயத்தோடு செய்து விடுவது... அப்புறம் பயப்படுவது. பொய் சொல்லி விட்டோமே என்று வருந்துவது —

டயட்டில் இருக்கும் போது ஆசைத் தூண்டுதல் காரணமாய் இனிப்போ வேறு வேண்டாத எதையோ சாப்பிட்டுவிட்டு 'இப்படிப் பண்ணி விட்டோமே என்ன ஆகுமோ?' என்று அஞ்சுவது —

தாயை விட்டுப் பிரிந்து இருக்கும் குழந்தைகளின் அச்சம் —



என்று பயங்களைப் பலவிதமாகப் பிரிக்கலாம்.

திருமணமான பெண் தாய்வீட்டைவிட்டுப் போகும்போது, பெற்றவள் கண்ணீர் விடுவாள். பெண்ணுக்கு அழுகை வராது. அச்சத்தை விழுங்கிக் கொள்வாள். ஆனால் அழுகிற போது தாயின் மனம் லேசாகிவிடும். வெளிக்காட்டாத பயம்தான் நோய்க்கு ஆதாரமாகிறது. பெப்டிக் அல்ஸர், ஆஸ்துமா போன்றவை வரலாம். சில பெண்களுக்குக் கணவன் ஊர் புறப்படும் போதெல்லாம் ஏதாவது நோய் வரும். தனிமை என்ற அச்சம்தான் காரணம்.

பயத்தின் நிலை என்ன?



மனத்தில், எதிர்பாராத உணர்ச்சி ஏற்படுகிறது. நெஞ்சு படபடக்கும். நாக்கு உலர்ந்து போகும். மேலெல்லாம் பூச்சி ஊர்கின்ற மாதிரி தோன்றும்; கை நடுக்கம், உள்ளங்கைகளில் வியர்த்துக் கொட்டும், சிலருக்குக் கட்டு மீறிச் சிறுநீர் கழிக்கிற அளவுக்குப் போய்விடும்.

குழப்ப நிலையில் ஏற்படுகிற பயம் மருந்தினால் குணமாகும். ஆனால் மருந்தை வழக்கமாகப் பயன்படுத்தக் கூடாது. வேலியம், காம்போஸ் போன்ற மாத்திரைகளில் ஏதாவது ஒன்று கையிலிருந்தாலே போதும். பயம் சிலருக்கு நீங்கிவிடும். "டாக்டர், இந்த மாத்திரையை ஆறுமாசமாகப் பையிலேயே வெச்சுக்கிட்டிருக்கேன்" என்று சொல்கிறவர்கள் உண்டு. ஒருமுறை சாப்பிட்டுக் கிடைத்த குணமே இவர்களுக்குத் தொடர்ந்து துணை நிற்கிறது.

கல்யாணம் பண்ணிக் கொண்டு போகிற ஒரு பெண் பயந்தால், அவள் வயதில் திருமணமான ஒருத்தி மனம் விட்டுப் பேசி உற்சாகப்படுத்தும்போது பயம் காணாமல் போய்விடுகிறது.

மத நம்பிக்கைகள் ஒருவகை. கந்தர் சஷ்டி கவசம், சஹஸ்ரநாமம் சொல்வார்கள். விபூதி பூசுவார்கள். குழந்தைகள் கீழே இடறி விழுந்தால் தரை மண்ணை எடுத்துத் திலகம் இடுவார்கள். தாயத்தும் கட்டுவார்கள். திருஷ்டி கழிப்பார்கள். இவற்றால் கெடுதல் ஏதும் இல்லை. நம்பிக்கை ஏற்பட்டால் குணம் கிடைக்கிறது. இவற்றையெல்லாம் அறிவுக்கு அப்பாற்பட்டவை என்று கூற முடியாது. மனோதத்துவ ரீதியில் இவற்றுக்கு விளக்கங்கள் உண்டு.

பத்து வரை எண்ணுவது... இடி முழங்குகிற போது 'அர்ஜுனா சொல்வது' போன்ற கவனம் திருப்புகிற முறையிலும், சிறு வயது அச்சங்களை மாற்ற முடியும்.

நினைவாற்றலை வளர்த்துக் கொள்வது எப்படி?


ஊட்டச்சத்துதான் துணை நிற்கும்

அந்தப் பிரபலமான அறிவியல் மேதையின் ஞாபக மறதியும் உலகப் புகழ் பெற்றதுதான். ஒருசமயம் விதியில் மாலை நேரத்தில் அவர் காலாற நடந்து போய்க் கொண்டிருந்தார். வழியில் ஒரு மண்டபத்தின் வாசலில் பெருங்கூட்டம் திரண்டிருந்தது.

"என்ன சமாசாரம்? யார் வரப் போகிறார்கள்?" என்று பார்வையில் பட்டவரிடம் விசாரித்தார்.

"இன்று மேதை ஐன்ஸ்டீன் இங்கே பேசப் போகிறார்...." என்று பதில் வந்தது.

அப்போதுதான் கேள்வி கேட்டவருக்கே தன்னுடைய நினைவும், தான் பேசவிருக்கிற கூட்டமும் நினைவுக்கு வந்தது. மாலை உலாப் போன மேதை ஐன்ஸ்டீன் 'பேச்சாளராக' மண்டபத்துக்குள் நுழைந்தார்....



நகைச்சுவையாகச் சொல்லப்படுகிற இந்த ஐன்ஸ்டீன் விவகாரம் உண்மையோ கற்பனையோ தெரியாது. ஆனாலும் 'ஞாபக மறதிப் பேராசிரியர்' என்று ஒரு சொல் வழக்கு உண்டு. இவர்களின் ஞாபக மறதி, பரபரப்பான சிந்தனையின் விளைவானதாக இருக்கலாம்.

எனினும் பொதுவான பிரச்னை மிகப் பெரும்பாலோரிடம் உள்ள நினைவாற்றல் குறைவு என்பது. டாக்டர்கள் என்ன வழி சொல்கிறார்கள்?



நினைவாற்றல் என்பது அறிவுக் கூர்மை தொடர்பானது. ஐ.க்யூ. அளவு, ஆளுக்கு ஆள், சூழ்நிலைகளுக்கு ஏற்ப, மாறுபடுகிறது. இது பிறவியிலேயே அமைகிற ஒரு வரப்பிரசாதம்தான். சில குடும்பங்களில் ஐ.க்யூ. அளவு மிக அதிகமாகக் காணப்படுகிறது. குறிப்பாகச் சொல்வதானால் வழக்குரைஞர்களின் குடும்பம். பரம்பரை பரம்பரையாக இதே தொழிலில் புகழ் கூட்டுகிறவர்கள். இவர்களுக்குப் பல வழக்குகள், பல்வேறு நீதிமன்றங்களின் தீர்ப்புகள், சட்டப் புத்தகங்களின் விதிகள் எல்லாம் விரல் நுனியில் இருக்க வேண்டும்.

வயதானவர்களுக்கு அறுபது ஆண்டுகளுக்கு முன்னால் நடந்த நிகழ்ச்சிகூட அச்சுப் படம்போல் நினைவிருக்கும். அப்போது போட்டிருந்த சட்டையின் நிறத்தைக் கூடச் சரியாகச் சொல்ல முடியும். ஆனால்... அரைமணி நேரம் முன்னால் வந்து போன நபர் நினைவுக்கு வரமாட்டார். "யாரோ உன்னைத் தேடி வந்தாங்களே.... மறந்துட்டேன்...." என்கிற நிலை....

இம்மாதிரியான நினைவாற்றல் திறமைகளுக்கும் குறைபாடுகளுக்கும் அடிப்படைதான் என்ன?

தகவலை வாங்கிப் பதிவு செய்து கொள்வது, நினைவில் சேமித்து வைத்துக் கொள்வது, தேவையானபோது அவற்றை வெளிக் கொணர்வது என்று மூவகைச் செயல்பாடுகள் உண்டு. பதிவு செய்தல் என்பதுதான் மிக முக்கியமான செயல்.

கவனம் சிதறாமல் எதையும் மனத்தில் வாங்கிக் கொள்ளப் பழக வேண்டும். பக்கத்து அறையில் பாட்டுக் கேட்கும். தெருவில் ஏதாவது சண்டை நடக்கும். டி.வி., ரேடியோ என்று அலறும். தலைவலி பல்வலி என்று கவனம் சிதறும். இந்தச் சூழலில் தகவல்கள் சீராக மனத்தில் பதியாது.

நடந்து கொண்டும், படுத்துக் கொண்டும் படிப்பது, டிரான்ஸிஸ்டர் கேட்டுக் கொண்டே படிப்பது, எல்லாம் சிலருக்குப்

பழகியிருக்கும். வெறும் கடிகார 'டிக் டிக்' கூடச் சிலருக்குப் பெருத்த இடைஞ்சலாய்ப் படுத்தும்.

படிக்கும் முறையில், சிறு வயது முதலே ஓர் ஒழுங்கை வளர்த்துக் கொள்வது, நினைவாற்றலை நன்றாகக் காப்பாற்றும். புறச் சூழல்களுக்கு அடிமையாகாமல், நன்கு அமர்ந்த நிலையில், மனசுக்குள் படிக்கிற எதுவும் நன்கு பதிவாகும். இதுதான் லட்சிய முறை.


கட்டாயத்தின் பேரிலோ, மிரட்டி அச்சுறுத்தியோ கற்பிக்கப்படும் எதுவும் ஆரோக்கியமாக மனத்தில் பதிவதில்லை. மனப்பாட நினைவு வேறு. புரிந்து கொண்டு பதிய வைத்துக் கொள்வது வேறு. உருப் போட்டுக் கற்றுக் கொள்கிற பாடங்கள் தேர்வு அறையில் சமயத்துக்குக் காலை வாரி விடும். "நன்றாகப் படித்திருந்தேன்... ஹாலை விட்டு வெளியே வந்தப்புறம்தான் நினைவு வந்தது" என்கிற நிலை.

படித்தவற்றை மீண்டும் வாரக் கடைசியில் நினைவுபடுத்திக் கொள்வது **(Periodic Recalling)** மிக நல்ல பயிற்சி.

குழந்தைகளிடம் நினைவாற்றலை வளர்க்கப் பெற்றவர்கள் கணிசமாக உதவ முடியும். எங்காவது 'டிம்பக்டு'வில் குண்டு வெடித்தது என்றாலோ, அடிலெய்டில் கிரிக்கெட் டெஸ்ட் என்று செய்தி வந்தாலோ, பையனைப் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டு உலகப் படத்தைப் புரட்டி அது எங்கேயிருக்கிறது என்று அவனுக்கு நீங்கள் காட்ட வேண்டும். பள்ளிப் பாடத்துக்கு அப்பாற்பட்ட இது போன்ற பயிற்சிகள் அவனுக்குக் கூடுதல் அறிவைத் தரும்.

திரும்பத் திரும்பப் படிப்பது என்பது ஒரு சிறப்பான முறை. முதல் படிப்பில் ஐம்பது சதவீதம் மனத்தில் பதியும். அடுத்த படிப்புக்களில், இது அறுபது எண்பது சதவீதமாய் உயரும்.

இரவு நேரத்தில் நன்கு உறங்கிக் காலையில் கண் விழிக்கும்போது மனம் மிகவும் தெளிவாக இருக்கும். அப்போது எதைப் படித்தாலும் மனத்தில் நன்கு பதியும்.



வயதானவர்களுக்கு நினைவாற்றல் பாதிக்கப்படுவது இயல்பு. மருந்துகள் மூலம் ஓரளவு சீர் செய்து கொள்ளலாம். நரம்புத் தளர்ச்சி, வலிப்பு வாதம் போன்ற மூளை தொடர்பான நோய்களால் நினைவாற்றல் பாதிக்கப்படும். எனினும் நாற்பது வயதுக்கு மேல் திடீரென்று ஒருவருக்கு ஞாபகக் குறைவு அதிகமாக ஏற்படுமானால் அலட்சியப்படுத்தாமல் மருத்துவ சோதனை செய்தாக வேண்டும். இதற்குக் காரணம் மூளைப் புற்று நோயாகவும் இருக்கலாம். வெளியே தெரியாது.

சிறு குழந்தைகளாக இருக்கும்போது முதல் மூன்று ஆண்டுகளாவது நல்ல ஊட்டச் சத்து நிறைந்த உணவைத் தர வேண்டும். பொதுவாக, பச்சைக் காய்கறிகள், புரதச் சத்து நிறைந்த உணவு இவை நினைவாற்றல் கூர்மைக்கு உதவும். பதிவு செய்து கொண்ட தகவல்களை மனத்தின் எங்கோ ஒரு மூலையில் சேமித்துப் பாதுகாத்துக் கொள்வதற்கு ஊட்டச்சத்துதான் துணை நிற்கும்.

தகவல் மனத்தில் எவ்வளவு நேர்த்தியாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்பதைப் பொறுத்தே, தேவையானபோது நினைவுக்குக் கொண்டு வருவதும் சுலபமானதாக இருக்கும்.

டாக்டர் பென்ஃபீல்ட் என்பவர் தன்னிடம் சர்ஜரிக்கு வந்திருந்த ஒரு நோயாளியிடம் வித்தியாசமான சோதனை ஒன்றைச் செய்து பார்த்தார். லோக்கல் அனஸ்தீஸியா மூலம், அந்த நோயாளியின் மண்டைப் பகுதியை மட்டும் மரத்துப் போகப் பண்ணிவிட்டு, அவரைப் பேசச் சொன்னார். மூளைப்பகுதியில் சர்ஜரிக்காகச் செய்திருந்த திறப்பின் வழியே 'எலக்ட்ரோடு' ஒன்றைச் செலுத்தி மூளையின் ஒரு குறிப்பிட்ட பகுதியைத் தூண்டிவிட்டார். பேசிக் கொண்டிருந்த நோயாளிக்கு, மிக நீண்ட காலத்துக்கு முந்தைய நினைவுகள் எல்லாம் சரளமாக வெளிவந்தன. இதற்கு "பென்ஃபீல்ட் எக்ஸ்பீரியன்ஸ்" என்றே பெயர் வந்தது.

அனுபவங்கள் உணர்ச்சி பூர்வமாக ஏற்படுகிறபோது அவை மனத்தில் மிக நன்றாகப் பதிகின்றன. அதனால்தான் குழந்தைகளைப் பொறுத்தவரை ஆசிரியர்களின் ஆற்றல் அதிமுக்கியத்துவம் பெறுகிறது. எவ்வளவுக்கு எவ்வளவு ஆர்வமுடன் கற்றுத் தருகிறோமோ, அதற்கேற்பக் கிரகித்துக் கொள்ளும் திறன் அமைகிறது.

உறவு முறையில், அத்தை பையன் மாமன் மகள் என்கிற மாதிரி நெருக்கத்தில் திருமணம் நடப்பதால் பிறக்கும் குழந்தைகள் ஐ.க்யூ திறனில் குறைவு ஏற்பட வாய்ப்பு உண்டு. இந்தக் குழந்தைகளின் நினைவாற்றலும் பாதிக்கப்படுகிறது.

ஆத்திரத்தைச் சாதனையாக்க முடியும்

நாட்டில் பல இடங்களில் வன்முறை தலைதூக்கியது... வகுப்புக் கலவரங்கள் மூண்டன. அப்போதெல்லாம் தேசப்பிதா காந்திஜி உண்ணாநோன்பு மேற்கொண்டார்... நாட்கணக்கில், வாரக்கணக்கில் என்று தம்மைத் தாமே வருத்திக் கொண்டார். இது வேதனையின் வெளிப்பாடு. தார்மீக பலம் இருந்ததால் தேசப்பிதாவின் இந்த முயற்சி அன்றைக்கு நாடு தழுவிய அளவில் ஆரோக்கியமான பலனைத் தந்தது....



இன்றைக்குச் சில குடும்பத் தலைவர்கள் காந்திஜி கையாண்ட ஆயுதத்தைப் பயன்படுத்துகிறார்கள்! ஏதாவது தவறு நடந்து விட்டால் மௌனமாக இருப்பது, சாப்பிடாமல் இருந்து விடுவது... எல்லாம் உண்டு. தவறு செய்தவர்கள் வருந்தி, இனிமேல் செய்ய மாட்டேன் என்று சொல்லி அவர்களின் கோபத்தை மாற்றுவது சுவையான அனுபவம்.

இவ்வாறு உண்ணாவிரதம் தார்மிக பலத்துடன் கூடிய வேதனையின் வெளிப்பாடாக அல்லாமல், சில சமயம் கோபத்தின் வெளிப்பாடாக இருக்கும். தவறாயிருந்தாலும் கூட தான் நினைத்தபடி நடக்கவில்லை என்றால் கோபத்தில், ஒரு மூடப்பிடிவாதத்துடன் சிலர் உண்ணாவிரதம் இருப்பார்கள். அத்தகையவர்களிடம் வேண்டா வெறுப்பாக மற்றவர்கள் பணிந்து போவார்கள். இதிலே பெருமை இல்லை. இது வன்முறை உணர்வைச் சேர்ந்தது.

வன்முறை உணர்வு என்கிற Aggressive மனப்பான்மை மனிதர்களிடையே இன்று நேற்றல்ல. நீண்ட நெடுங்காலமாகவே ஊறி வந்திருக்கிறது. ஆத்திரம் கொள்ளும் நிலை நாமே உண்டாக்கிக் கொள்வதா, நம் உடன் பிறந்த பண்பா என்பது ஆராய்ச்சியாளர்களின் கேள்வியாக இருந்து வருகிறது.


ஆத்திரம் கொள்வது என்பதில் பல வகைகள் உண்டு. வம்புக்குப் போய் எவனையாவது குத்திச் சாய்த்துவிட்டு வருவது ஒரு வகை. தான் மட்டும் முன்னேற வேண்டும் என்கிற சுயநல உணர்வில் குறுக்கே வருகிற மனிதர்கள் மீது ஆத்திரம் அடைந்து வெறியை வளர்த்துக் கொள்வது என்று ஒரு வகை.

சமுதாய அட்டூழியங்கள் கண்ணில் படுகிற போது ஆத்திரம் அதிகமாகிறது. அநியாயம் என்று நீங்கள் ஒன்றைத் தீர்மானித்தால் தாங்கிக் கொள்ள முடிவதில்லை.

* அவசரமாக ஊருக்குப் போயாக வேண்டும். பஸ் நிலைய டிக்கெட் தருமிடத்தில் நம்பிக்கையோடு காத்திருக்கிறீர்கள். நியாயமான வரிசையில் உங்களுக்கு டிக்கெட் கிடைக்க வழியில்லாமல் யாரோ 'செல்வாக்கில்' முந்திக் கொண்டு விடுகிறார்கள். அப்போது உங்களுக்கு ஏற்படுகிற ஏமாற்றம், ஆத்திரம்...
* உங்கள் மனைவியையோ உங்கள் சகோதரியையோ, உங்கள் காதுபடவே கொச்சையாக எவனாவது விமர்சிக்கும் அவலம் நேரும் போது ஏற்படுகிற குமுறல்....
* சர்க்கார் அலுவலகத்திலோ, பொது நிறுவனம் எதிலுமோ, உங்களுக்கு உரிமையின் வழியில் நியாயமாகக் கிடைக்க வேண்டிய ஓர் அம்சம் மறுக்கப்படும்போது ஏற்படுகிற வேதனை.
* மருத்துவமனையில் டாக்டர்கள், பணியாளர்களின் அலட்சியம் காரணமாக உங்கள் உயிருக்கு உயிரான யாராவது மரணமடைய நேரும்போது ஏற்படுகிற கொதிப்பு...

இவற்றைப் போன்ற அவலங்களைச் சந்





திக்கும்போது உங்கள் வெள்ளைச் சட்டை நாகரிகத்தையும் மீறி.... 'இவனைக் குத்திக் கிழித்துக் குடலை உருவினுல்தான் என்ன?' என்று தோன்றுகிறது.

ஆனுல், எந்த ஒரு சமுதாயமும் நூறு சதம் தூய்மையாக இல்லை என்று எண்ணிப் பார்க்கும்போது ஆத்திரத்தையெல்லாம் விழுங்கிக் கொள்ளவே நேருகிறது.

எல்லோரும் அமைதியானவர்களாகவும் யோக்கியர்களாகவும் இருக்க முடியுமாணுல் புத்தருக்கும், யேசுநாதருக்கும், சங்கருக்கும் அவசியமே இல்லையே. யதார்த்த நிலையில் இவற்றைப் புரிந்து கொள்ள வேண்டும்.

சில இடங்களில் ஆத்திரப்படுவது பயன் தராதது மட்டுமில்லை. மாருக எதிர் விளைவுகளையும் ஏற்படுத்தும். பிரச்னையைப் புரிந்து கொண்டு நமக்கு நாமே கேள்வி கேட்டுக் கொண்டு சமாளித்தாக வேண்டும்.

வன்முறை எண்ணங்களை மடை மாற்றிப் பாய்ச்சுகிற பயிற்சிகள் நிறைய உள்ளன. நம்மில் ஏற்படும் ஆத்திரத்தைச் சாதனையாக உருமாற்ற முடியும். இளவயதுக்காரர்களும் நடுத்தர வயதுக்காரர்களும்தான் அதிகம் ஆத்திரப்படுகிருர்கள். டென்னிஸ் போன்றவற்றில் மட்டையை ஓங்கித் தரையில் அறையும்போது ஆத்திர உணர்வு மங்கிப் போகும். கடுமையான உடலுழைப்பில் ஈடுபடும் போதும் கோபதாபங்களுக்கு மாற்று வடிவில் வடிகால் கிடைத்துவிடும்.

பலவிதமான நெருக்கடிகளால் தாக்கப்படும்போது, நாம் ஆத்திரமடைகிருேம். இந்தக் கோபதாபங்கள் ஏதாவது ஒரு வகையில் வெடித்துச் சிதறுவதே நல்லது. உள்ளேயே புதைத்துக் கொண்டுவிடுவதால் நிறையக் கெடுதல்கள் உண்டாகின்றன. இரத்த அழுத்தம் போன்ற நோய்கள் தீவிரப்படுவதற்குக் கோபமும் ஆத்திரமும் அடக்கப்படுவது ஒரு காரணம்.

கோபமே வராமல் தடுத்துக் கொள்வது தான் நல்லது. சூழ்நிலைக் கட்டாயங்களால் அளவு கடந்த கோபம் ஏற்படும்போது வெளிப்படுத்திவிடத்தான் வேண்டும்.

சில சூழ்நிலைகளில் கோபத்தை அடக்கிக் கொள்வது தவிர்க்கமுடியாததாகிவிடுகிறது. எதையுமே புரிந்து கொள்ளாத மேல் அதிகாரி இருக்கிருர். அவரிடம் கோபத்தைக் காட்ட முடியாது. உடனே நமக்குக் கீழே பணியாற்றுகிறவர்களிடமோ, வீட்டில் உள்ளவர்களிடமோ அந்த ஆத்திரத்தைக் கொட்டித் தீர்த்துக் கொள்வோம்.

இந்த நிலைகளில் மனம் விட்டுப் பேசுதல் நல்ல பலன் தரும். அதிகாரியிடம் அமைதியாக, இது தவறு இப்படிச் செய்திருக்கலாம் என்று எடுத்துச் சொல்ல வேண்டும். கோபப்படுவதை விட இது பலன் தரும்.

கோழிச் சண்டை, ஆட்டுச் சண்டை எல்லாம் கிராமப்புறங்களில் உண்டு. இப்போது திரைப்படங்களில் சண்டைக் காட்சிகள் நிறைய ஆதரவைப் பெறுகின்றன. இவற்றைப் பார்த்து ரஸிக்கிறவர்களுக்கு வேறு யார் மீதோ உள்ள கோபமும் ஆத்திரமும் தணிகிறது. இதற்கு மறுபுறமாக மிகவும் சிறுபான்மையினருக்கு இந்தக் காட்சிகள் வன்முறை உணர்வைத் தூண்டவும் செய்கின்றன.

கும்பலாகக் கூடுகிற போது வன்முறை உணர்வு தீவிரப்படுகிறது. இதைச் சந்தர்ப்பவாதிகள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கிருர்கள்.

எப்போதுமே வலுத்தவன் செய்வது தான் சரி என்கிற மனுேபாவம் இருக்கிறது. யார் சக்தி வாய்ந்தவன் என்பதை நிரூபித்துக் கொள்வதில் போட்டி ஏற்படுகிறது. மிகவும் சக்தி வாய்ந்த நாடு என்று நாம் கருதினுல் அதனுடன் மோதுவதில்லை. மதிப்பு வைக்கிருேம்.

சில மேற்கத்திய நாடுகளில் ஆயுதப் புழக்கம் சாதாரணமானது. அங்கெல்லாம் வன்முறைகளும் அதிகம். ஆயுதங்கள் கைக்கு எட்டுகிற அளவிலிருந்தால் ஆத்திரம் வன்முறைக்கு வித்திடும். நம் நாட்டிலும் இப்போது அதிகமாகக்காணப்படுகிறவன்முறைகளுக்குக் காரணம் இப்படிக் 'கைக்கெட்டும் நிலை'யில் உள்ள ஆயுதங்கள்தான். வெறும் மைதானத்தில் 'ஏற்படுகிற சண்டைகளை விட, சோடாப்புட்டி, கற்குவியல்களுக்கு அருகே நடக்கிற சச்சரவுகளில் வன்முறை அதிகமாகி விடுகிறது.

கோபப்படும் மனநிலையை ஏதாவது சுவையான முறைகளில் மாற்றிக் கொள்ள முடியும். ஆத்திரம் அதிகமாகும் போது குளிர்ந்த நீரை எடுத்துப் பருகுவார்கள். ஒன்று முதல் நூறு வரை எண்ணுவார்கள். ஜப்பானில் வீடு திரும்பும் தொழிலாளிகள் முதலாளி போன்ற உருவில் உள்ள ஒரு மணல் மூட்டையை நாலு குத்து குத்திவிட்டுப் போவார்களாம்! என்ன கோபமிருந்தாலும் இருந்த இடம் தெரியாமல் கரைந்துவிடும்! எல்லாவற்றுக்கும் மேலாக இருக்கவே இருக்கிறது தியானம். ரிலாக்ஸ்ட் ஆக இருக்கப் பழகிவிட்டால் கோபமே வருவதில்லை.

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Limited, at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600 032.

Editor: K. Rajendran

Editorial Office: 28, Fifth Street, Lake Area, Nungambakkam, Madras-600 034. (Phone: 473389)

Administrative Office: Race Course Road, Guindy, Madras-600 032 (Phones: 431543, 434157 Press: 434190)


சாரதா'ஸின் புதிய டிசைன்களிலே அவள்!
அனைவரும் போற்றும் அழகு வடிவுடையாள்!
காண்போர் மயங்கும் கொடியிடையாள் !!!
திக்கெட்டும் புகழ் பரப்பும் திருவுடையாள் !!
என்றும் யௌவனத்துடன் விளங்க
தருணி
பிரகாசம் பொருந்திய அழகிற்கு
தேஜோவதி
சாரதா'ஸ்
(முகூர்த்தப் பட்டு புடவைகளுக்கு அதிர்ஷ்டமான இடம்)
தன் பில்டிங்
மவுண்ட் ரோடு
சென்னை-600 002
போன் : 87177
N.S.B. ரோடு
திருச்சி-620 002
போன் : 27077
MADRAS & TRICHY


இயற்கையின் எழிலதனை
வர்ணிக்க
வார்த்தைகள் போதாதென்றே
வண்ணங்கள்
உருவாயினவோ ?
வாழ்க்கையதன் வனப்பதனை
வண்ணத்தில் ரசிப்பதற்கே HPF
இந்து கலர் பிலிம் IR 100
இந்து கலர் பேப்பர் FP 8
இரண்டுமே ஃப்யூஜி (FUJI)
அளிப்பவை.
INDUCOLOR
IR 100
INDUCOLOR
IR 100
INDU
இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ்
மான்யூபாக்சரிங் கம்பெனி லிட்.
(இந்திய அரசு நிறுவனம்)
இந்துநகர், உதகமண்டலம்-643 005.
வர்த்தக தலைமையகம்: சுப்ரமண்யன் பில்டிங்ஸ்,
தபால் பெட்டி எண். 2771, No. 1, கிளப் அவுஸ் சாலை, சென்னை-600 002